Registered as a News Paper in Sri Lanka
www.padippakam.com
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර
ஜூன்.09-15,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 156

## புலிகளின் சபதம்

## வன்னியில் இருந்து எச்சரிக்கை!



# முரசம்

## திறக்கமாட்டார்கள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

வேதாளம் மீண்டும்
அதே முருக்கை மரத்தில்!

"ஒற்றையாட்சி தவிர
வேறெதற்கும் உடன்படோம்"
என்றுவிட்டது ஐ.தே.கட்சி.

ஏறும், தாவும் என்று எதிர்பார்த்த
வேதாளம்தான்!
அதனால் அதிர்ச்சியுமல்ல,
ஆச்சரியமுமல்ல.

'அண்ணன் எப்போ சாவான்'
திண்ணை எப்போ காலியாகும்'
என்றிருக்கும் சுயநல அரசியலில்
பொது உடன்பாடு மலரும்
என்று எதிர்பார்ப்பது இயலாது.

அரசாங்க கட்சியின் போக்கும்
எதிர்க்கட்சிகளை
தட்டிக்கொடுத்து
அணைக்கும் வகையில் அமையவில்லை.

எதற்கெடுத்தாலும்
கடந்தகால ஆட்சியை
குறைசொல்லாது போனால்
புதிய ஆட்சிக்கு திருப்தியில்லை.

எதிர்க்கட்சி மீண்டும்
ஆட்சியைப் பிடித்துவிடக்கூடாது
என்ற அக்கறைதான்
அதற்குக் காரணம்.

எதிர்க்கட்சியின்
கடந்தகாலத் தவறுகளை
ஆளும் அணி தோண்டித் துருவுகிறது.

விட்டேனா பார் என்று ஆளும் அணி
எங்கே சறுக்கும் என்று ஐ.தே.கட்சி
கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறது.

ஏட்டிக்கு போட்டியான நிலையில்
சரியானவற்றையும்
எப்படி தவறானவையாக
வியாக்கியானம் செய்யலாம்
என்று சிந்திக்குமளவுக்கு
அரசியல் தரம் தாழ்ந்துவிட்டது!

இவ்வாறான சூழலில்
புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு,
கருத்தொருமிப்பு
என்பதெல்லாம் கற்பனைகளாகிவிட்டன.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில்
காலத்தை இழுத்தடிக்கலாமே தவிர
சுய நல அரசியலின்
கோலத்தை மாற்றி
தேவையான தீர்வை எட்ட முடியாது!

தீர்வு யோசனையை
ஆளும் அணி முன்வைத்த போதே,
ஒத்துழைப்பதில்லை என்று
ஐ.தே.கட்சி இரகசிய முடிவெடுத்துவிட்டது.

தமிழ் பேசும் மக்களது
வாக்குகளும் நாளை தேவையென்பதால்
தமது முடிவை நேராகச் சொல்லாமல்
தாமதம் செய்துகொண்டிருந்தது.

இப்போது 'எங்கப்பன் குதிருக்குள்
இல்லை'யென்ற கதையாக
ஒற்றையாட்சியைத்தான்
கட்டிப்பிடித்துக்கொண்டிருப்போம்
என்று ஐ.தே.க. தெரிவித்திருக்கிறது.

அதன் அர்த்தம்-
அரசாங்கம் முன்வைத்துள்ள
அரசியல் தீர்வு யோசனைகளை
அங்கீகரிக்கமாட்டோம்
என்பதுதான்!

ஐ.தே.கட்சியின் முடிவை
மாற்றவைக்க முடியாதா?
என்று பொது இணக்கத்தில்
அக்கறையுள்ளவர்கள் கேட்கலாம்.

தூங்கினால்
தட்டி எழுப்பலாம்;
தூங்குவது போல் நடித்தால்
என்ன செய்யலாம்?

ஐ.தே.கட்சி தூங்கவில்லை.
பொதுஜன முன்னணி ஆட்சியில்
ஐ.தே.கட்சிக்கு தூக்கம் வருமா?
வராது. ஆனால் நடிக்கும்!

இத்தனைகால இரத்தம் சிந்தல்கள்
பட்ட காயங்கள், படாதபாடுகள்,
அத்தனைக்குப் பின்னரும்
இனப்பிரச்சனை தீர்வுக்கு
சுயநல அரசியல் தடையென்றால்,
நம்மால் நமக்குள்
பிரச்சனையைத் தீர்க்கும்
பண்போ, பக்குவமோ
இல்லையென்றுதானே அர்த்தம்!

அதனால்தான்-
சர்வதேச மத்தியஸ்தம்
காலத்தின் கட்டாயமாகப்போகிறது.
மூன்றாம் தரப்பு தலையிடாமல்
நம் அரசியல்வாதிகள்
தீர்வுக்கான பாதையை
திறக்கப்போவதில்லை!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

## முடிந்தது

எது முடிந்தது? எப்போது முடிந்தது? சிந்திப்போம்! எதுவுமே இல்லை என்ற பதில் தான் வரும். ஒரு பிரச்சனை முடிந்தால் இன்னுமொரு பிரச்சனை தொடர்கிறதே! வீட்டிலே பிரச்சனை முடிய, வேலை ஸ்தலத்திலே பிரச்சனை தொடர்ந்து வருகின்றதே! இவற்றுக்கு முடிவே இல்லையா? என்று வருந்தும் உள்ளங்கள் கோடி! உண்மையிலேயே இவற்றுக்கு முடிவில்லையா? ஏன் இல்லை. நீதி 23:18 கூறுவது என்ன....."நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண் போகாது."

ஏசாயா 60:20 கூறுவது என்ன.... "இன்றைக்கு உன் துக்க நாட்கள் முடிந்து போம்." எனவே நாம் துக்கப்பட வேண்டியதில்லை. 1 பேதுரு 2:24, மத் 8:17 கூறுவது போல நம் நோய்களை, துயரங்களை, பாவங்களை சுமந்து முடித்தார். முடிவே இல்லையா? என கவலைப்படாதிருப்போம். "முடிந்தது" என்று சிலுவையில் 6ம் வசனமாக கூறியவர் முடிவில்லாதவர்....நிச்சயமாக முடிவு உண்டு என்று பொறுமையுடன் காத்திருப்போம்...அனைத்திற்கும் நல்ல முடிவை இறைவன் தருவார். இதற்காக இறைவனிடம் தினம் மன்றாடுவோம்.

ஜே. புளோரன்ஸ்-அம்பக்கோட்டை, கெங்கல்ல.

## ஆன்மீகம்

### மா நபியின் சொத்துக்கள்



ஒரு முறை ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி)யல்லாஹு அன்ஹு கடைத்தெருவுக்குச் சென்றார்கள். அங்கே இருந்தவர்களிடம், "நீங்கள் இங்கே உட்கார்ந்து இருக்கிறீர்கள். அங்கு பள்ளிவாசலில் நபி (ஸல்) அவர்களின் சொத்துக்கள் பங்கு போடப்படுகின்றன," என்று கூறினார்கள். இதைக் கேட்ட மக்கள் பள்ளிவாசலுக்கு ஓடினார்கள். "அங்கு ஒன்றும் பங்கிடப்படாததைக் கண்டு திரும்பி வந்து அங்கு ஒன்றும் இல்லையே" என்று முறையிட்டார்கள்.

"பிறகு அங்கே என்ன நடைபெறுகிறது?" என்று அபூ ஹுரைரா (ரலி) கேட்டார்கள். "சிலர் திக்ரு செய்து கொண்டும் வேறு சிலர் குர்ஆன் ஓதிக் கொண்டும் இருக்கிறார்கள்," என்று மக்கள் பதில் சொன்னார்கள்.

"இவை தான் இறுதி நபி (ஸல்) அவர்களின் சொத்துக்கள்," என்று அபூஹுரைரா (ரலி) அவர்கள் பதில் கூறினார்கள்.

எம். நிஸார், உடதலவின்ன.

## கவிதைப் போட்டி இல.153

### பரிசுக்குரிய கவிதை

**************************

### மனிதம்

தட்டுத் தடுமாறி தஞ்சம் பெற்று;
தட்டைத் தான் கொஞ்சம் தொட்டுப் பார்த்து:
சொட்டுச் சோற்றிற்கும் பஞ்சம் இப்போ!
எட்டப்போ! உன் நிலைமை எனக்குமிப்போ!

எஸ். சந்திரபோஜி, வத்தளை.

## இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



### புளுதியில் விழுந்த பூ

வளர்த்த கடாக்கள்,
வயிற்றிலே முட்டியதால்.
விடைபெறும் காலத்தை
விதியிலே தொடர்கின்றாள்!

எஸ். ராஜ்கமல், திஹாரிய.

### காத்திருப்பு

ஆக்கிவைத்துக் காத்திருந்த
காலம் போய்,
ஆக்கிப் போட அரிசியில்லை.
காத்திருந்தேன்.

சி.சஷிந்தா, புத்தளம்.

### புதிய விதி

அங்கிங்கெனாதபடி
எங்கும்
ஆலயம் அமைப்போம்:
அடைக்கலம்தேடும்
அடுத்த தலைமுறைக்கு
அதையே அகதிமுகாம்
ஆக்கிவைப்போம்.

வை. சித்திக்கிருஷ்ணா,
பாண்டிருப்பு-01.

### அந்த எண்ணமோ?

மாடிவீட்டுப் புழக்கடையில்
மண்டியிட்ட அகதியை
ஊடறுத்து விரட்டுதற்கு
உதயமான உபாயமோ?

ச. மகாலிங்கம், வெளிமடை.

### இழுக்கு!

நாய் பொறுக்கும் பருக்கை
நம் குழந்தைக்குத் தானுமில்லை:
தாய் பொறுப்பாளோ இவ்விருக்கை?
தனயன் பொறுப்பானோ இவ்விழுக்கை!!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

### நரக தரிசனம்

நடுங்கும் குளிரில்
நாயுடன் எங்கள்
நரக தரிசனம்
நாளும் நடக்கும்.

நா.மதிவதனம்,
லூணுவத்தை.

### நிதர்சனம்

'ஊழி'க்கால
திரைப்படத்தின்
ஆரம்ப
காட்சிகள்!

சந்திரவதனி ஐயனார்,
நாவலப்பிட்டி.

### குருஷேத்திரம்

பாண்டவர்களுக்கு
அன்று வனவாசம்!
நம்மவர்களுக்கு
இன்று தெருவாசம்!
மறுபடி...மறுபடி..
குருஷேத்திரங்கள்!

கே. குமார்,
கெகுனகொல்லை.

### வித்தை

இரண்டு கால்கள
நான்குக்குச்
சமமாக்கும் வித்தை,
போருக்கு மட்டுமே
தெரியும்!

எஸ்.பிரபா,
மெட்டிகஹதென்ன.

### சதி

யுத்தம்
பேயாட்சி புரிவதனால்
நாயிலும் கீழாய்
நடுத் தெருவில்
அலையும் மனிதம்!

சே. யோகநாதன்,
மட்டு/மண்முனை.

### வெற்றி

அட
இது
"ஜெய"லலிதாவா?


சுபா வரன், கண்டி.

### தேடல்

இதயம்
காய்ந்த தேசத்தில்
ஈரம்
தேடும் ஜீவன்கள்!

சு. புருஷோத்மன்,
அக்கரைப்பற்று.

## கவிதைப் போட்டி இல-156



**கவனியுங்கள்** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி **15.06.1996.**

-முகவரி-
கவிதைப் போட்டி இல. 156.
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகர்(ச்)சோலை

முரசின் ரசனை மழையில் நனைந்த ஜலதோஷம் பிடித்துவிடப்போகிறது! விரைவில் அனுப்பி விடுங்கள் "ஹலோ டாக்டரை"

எம்.ஸானாஸ், ஸன், காமிலாஸன்,
ஸன்பர், கிண்ணியா-06.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் தேவை என்பதை 'முரசம்' வாயிலாக வலியுறுத்தினீர்கள். மாற்றம் நாமும் விரும்பியதுதான். மாறியுள்ள ஆட்சியாவது இலங்கைத் தமிழர்கள்மீது தன் பார்வையைத் திருப்பினால் மகிழ்வோம். அனுபவமுள்ள கருணாநிதியார் ஆதரவு காட்டுவார் என்று எதிர்பார்ப்போம்.

மு.துரைராஜசிங்கம், திருக்கோணமலை.

முரசே! ரேவதிக்கு 'டெப்போசிட்' பறக்கும் என்றீரே. கரிநாக்கு. பாவம் ரேவதி. நீர் சொன்னது போல் மனோஜ் பிரபாகரும் அவுட்டாகிவிட்டார். உமக்கு மகிழ்ச்சிதானே? எனக்கு வருத்தமாக இருக்கிறது. இருவரும் எனது அபிமானத்துக்குரியவர்களாயிற்றே.

செல்வி.சி.அம்பிகா, பண்டாரவளை.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் செய்திகளை இங்கிருந்து அறியத் துடிக்கும் என் போன்ற ஏராளமான வாசகர்கள் உன் வரவுக்காக காத்துக்கிடக்கிறார்கள். நீயோ சில வாரங்களில் தாமதமாக வந்து சேர்கிறாய். ஏன் இந்த அலட்சியம்?

எம்.கஜேந்திரன், ரொரன்ரோ, கனடா.

அங்குள்ள முகவர்களைத்தான் கேட்க வேண்டும். தாமதத்திற்கு நாம் காரணமல்ல.

ஆ.ர்.



குள்ளநரி கார்லோஸின் கழுத்தை நெரித்து விட ஆசை. மனித வெடிகுண்டு கார்லோஸை மனிதர்கள் இல்லாத பூமியில் வீசிவிட ஆசை. ஏன் தெரியுமா? முதலில் ஹீரோ என்று நினைக்க வைத்து பின்னர் கொடிய வில்லனாக மாறி நிற்கிறானே? ரசிகனே கார்லோஸை நீர் அறிமுகப் படுத்தும் போது கேட்டீரே ஒரு கேள்வி. கார்லோஸ் நல்லவனா, கெட்டவனா என்று. நம் பதில் என்ன தெரியுமா? கெட்ட குறும்பன்.

செல்வி ஆர்.தவமலர்,
குவைத்.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

- அப்துல் அஸ்ஸ், தெல்தோட்டை.
- மணிமேகலா ஞானசேகரன், கம்பளை.
- மு.கடாபி, ஸலீம், ஹொறவ்பொத்தானை.
- ஆர்.சுமதி, நிந்தவூர்-06.
- செல்வி.எஸ்.யுவராணி, பிட்டகந்த.
- ஆறுமுகம் சுவர்ணலதா, திருக்கோணமலை.
- செல்வி. பிரியநேசி, களுத்துறை(தெற்கு).
- பாதிமா றிஹானா பாரூக், உலப்பனை எஸ்டேட்.
- ஆர்.விஸ்ணுராஜ், பள்ளகெட்டுவ.
- பழனிவேல் யாழினி, கொம்மாதுறை.
- சரவணேஸ் டெயிசி, பத்மா டெயிசி, கலவான.
- கே.நடராஜா, மத்துகம.
- எம்.எச்.எம்.ஹம்லா, களுத்துறை.
- வாஹிட் ஏ.குத்தூஸ், பதுளை.
- ப.ஜெயப்பிரகாஷ், பசறை.
- ரோகினி தில்லைநாயகம், முறக்கொட்டான்சேனை.
- ஏ.எச்.ராஸீன் மொகமட், ஏத்தாலை.
- கே.புவனலோஜினி, இறக்குவானை.
- எஸ்.கிருஷ்ணகுமார், ஹட்டன்.
- செல்வி.சு.சத்தியவாணி, பண்டாரவளை.
- ஜெ.ஜெகதீஸ்வரி, திருக்கோணமலை.
- வீரசிங்கம் ஸ்ரீதரன், மூதூர்.
- நா.ஜெயகணேஸ், பொகவந்தலாவ.
- எஸ்.பத்மா,உமாஜினி, கொழும்பு-10.
- ஏ.டபிள்யு. நஜீம், குட்டிக்கரச்சி.
- பி.ஜி.இமானு, பூண்டுலோயா.
- பி.எம்.எம்.அன்சார், வெலிகம.

சிந்தியா பதிலுக்கு இடவசதியை விசாலப்படுத்தியதற்கு சிந்தியா சார்பாக நன்றி. இடையில் விடுமுறை எடுக்காமல் இடைவிடாது பணியாற்றும்படி சிந்தியாவை கேட்டுக்கொள்கிறோம்.

எல்.சும்சுதீன், கல்முனை.

மனித வெடிகுண்டு கார்லோஸ் சூப்பரோ சூப்பர்'! ஒரு தனிமனிதன் எப்படி யெல்லாம் உலக நாடுகளை கதிகலங்க வைத்திருக்கிறான். கார்லோஸின் கொள்கைகள் மீது வெறுப்பு வந்தாலும் கூட, கார்லோஸின் செயல்களை ரசிக்க முடிகிறதே! அதுதான் ஆச்சரியம்.

பாத்திமா இஸ்மத், கல்முனை.

'அரசியல் தொடர்' நிச்சயமாக ஒரு சிறப்பான முயற்சிதான். அதில் சந்தேகமில்லை. இதுவரை யாரும் செய்யாத முயற்சியும் கூட. ஆனால், கடந்த சில வாரங்களாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். மீது புலிகளது தடை தொடர்பான விபரிப்பு உறுத்தலாக உள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆத்திரமூட்டியதால்தான் அதனை புலிகள் தடைசெய்தார்கள் என்பது போல 'அற்புதன்' சொல்லவருகிறாரா? நேரடியாக அவ்வாறு சொல்லாவிட்டாலும், சொல்லப்பட்ட விதம் அப்படி உள்ளது. எனவே, அவ்வாறான கருத்துக்கள் ஏற்படுதலை தவிர்ப்பது நல்லது. முயற்சிக்கு வாழ்த்துக்கள்.

மா. சந்திரசேகர், கொழும்பு-12.

தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள் நம் விடயத்தில் பாராமுகமாய் இருப்பது கவலைக்குரியது. முரசத்தில் சொல்லப்பட்டதுபோல, கடந்தகாலத்தை உதறிப்போட்டுவிட்டு புது உறவை வளர்ப்பதே நன்மை பயக்கும். தமிழக அரசின் தார்மீக ஆதரவு நமக்கு மிக மிக தேவை.

இ.ரங்கராஜ், திருக்கோணமலை.



படிப்பகம்

www.padippakam.com

# “தளம் மாறினாலும் போராட்டம் தொடரும்”

## வன்னியில் புலிகளின் பத்திரிகை தெரிவிப்பு!

தற்போதுள்ள நிலவரம் தொடர்பாக 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் எழுதப்பட்டுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

“ஆரம்ப காலத்தில் தமிழ்நாட்டில் கால்பதித்து நின்ற பேராட்டத்தின் மையம் பின்னர் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது. இந்திய ஆக்கிரமிப்பு காலகட்டத்தில் அது முல்லைத்தீவு காட்டுக்குள் இடம்மாறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டது. அங்கிருந்தபடி போராட்டம் வளர்த்தெடுக்கப்பட்டு மையம் மீண்டும் யாழ்ப்பாணம் சென்றது.

இப்போது போராட்டத்தின் தளப் பிரதேசம் ஆட்சிமையம் என்ற பாத்திரத்தை வன்னிப் பெருநிலப்பரப்பு வகிக்கின்றது.

போராட்டத்தின் தேவை கருதி தளப் பிரதேசங்கள் மாற்றப்பட்டாலும்கூட தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்புடன் இருக்கிறது.

நிலமைகளுக்கு ஈடுகொடுக்கும் முகமாக புலிகள் இயக்கம் தனது பிரதான தளப் பிரதேசத்தை மாற்றியபடி போராட்டத்தை தொடர்ந்து நடத்தும்.

இலங்கை அரசாங்கம் தனது ஒட்டு மொத்த படைபலத்தின் பெரும் பகுதி மூலமாக குடாநாட்டையும், குறித்த தொகை மக்களையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்துள்ளது.

ஒரு நாட்டின் படையை போல நாம் இருக்கமுடியாது. பல நெருக்கடிகளை, பல சவால்களை எதிர்கொண்டபடியே வளர வேண்டியிருந்தது.

இழப்புகளும், பின்னடைவுகளும் எம்மை துரத்திக்கொண்டே இருக்கும்.” இவ்வாறு 'விடுதலைப்புலிகள்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# இலங்கையில் மீண்டும் இந்திய தலையீடு?

## மத்திய அரசை தி.மு.க. தூண்டலாம்

## அகதிகளை தமிழகம் அனுப்ப புலிகள் திட்டம்?

**இந்திய மத்திய அரசில் தி.மு.க. முக்கிய பங்காளியாக அங்கம் வகிக்கிறது. அதனால் இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தி.மு.க.வின் நிலைப்பாட்டுக்கு மத்திய அரசில் முக்கியத்துவம் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. இதனையடுத்து தமிழக முதல்வர் கருணாநிதிமீதே இலங்கையில் உள்ள தமிழ் கட்சிகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர் அமைப்புக்களது பார்வை திரும்பியுள்ளது.**

### தி.மு.க.வின் பங்கு

பாரதிய ஜனதா ஆட்சி கவிழ்ந்து, இந்தியாவில் கூட்டரசாங்கம் ஏற்பட்டிருப்பது இலங்கைத் தமிழர் பிரச்சனையில் எத்தகைய சாதக, பாதகங்களை ஏற்படுத்தும் என்பதே இலங்கை விவகாரத்தில் அக்கறையுள்ளவர்களது அவதானத்துக்கு உரியதாகியுள்ளது.

மத்திய அரசில் தி.மு.க.சார்பில் முரசொலி மாறன் அங்கம் வகிக்கிறார். அவர் கருணாநிதியின் மருமகனாவார். இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்தும் நன்கு அறிந்தவர். எனவே, இந்திய மத்திய அரசு மட்டத்தில் இலங்கை விவகாரம் தொடர்பான அவரது ஆலோசனைகள் கவனத்தில் எடுக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.

முரசொலி மாறன் தவிர, தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக அமைச்சர்களாக உள்ளவர்களில் ப.சிதம்பரமும் இலங்கைத் தமிழர் விவகாரத்தை நன்கு அறிந்தவர்.

தி.மு.க.வும், தமிழ் மாநில காங்கிரசும் இணைந்து 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

எனவே, இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் முன்புபோல் அல்லாமல் தமிழக கட்சிகளின் கருத்துக்கு இந்திய மத்திய அரசு செவிசாய்க்க வேண்டியிருக்கும்.

ஆனால், தி.மு.க. சார்பாக இலங்கைத் தமிழர் விடயத்தில் மு.கருணாநிதி கருத்துக் கூறியுள்ளார். தமிழ் மாநில காங்கிரஸ் இதுவரை எக்கருத்தையும் வெளியிடவில்லை.

எனினும், தி.மு.க.வின் கருத்துக்கு மாறான நிலைப்பாட்டை தமிழ் மாநில காங்கிரஸ் மேற்கொள்ளாது என்றே தெரிகிறது.

இரு கட்சிகளும் விடுதலைப்புலிகளை உடனடியாக ஆதரிக்கப்போவதில்லை. பொதுவாக இலங்கைத்தமிழர் பிரச்சனை என்ற ரீதியில்தான் தமது நிலைப்பாட்டை மேற்கொள்ளப் போகின்றன.

### தி.மு.க.கருத்து

“இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெறாமல் ஒரு தீர்வு சாத்தியமில்லை. அதேவேளை ஏனைய தமிழ் கட்சிகளும் பேச்சுவார்த்தைகளில் பங்கெடுக்க வேண்டும். அதே நேரத்தில் புலிகள்தான் தீர்வு முயற்சிகளில் தீர்க்கமான பாத்திரம் வகிப்பவர்களாக இருக்கிறார்கள் என்ற நிலவரத்தையும் ஒப்புக்கொண்டாக வேண்டும்.” இவ்வாறு தி.மு.க. தலைவர்களில் ஒருவர் முரசின் இந்திய நிருபர் திரு. ஏழுமலையிடம் தெரிவித்தார்.

“தமிழ்நாட்டில் புலிகள் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வதைத்தான் நாம் விரும்ப வில்லை. அதற்காக இலங்கையில் அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் நாம் கண்டிக்கிறோம் என்றோ, ஆதரிக்கிறோம் என்றோ அர்த்தம் அல்ல” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எப்படியிருந்தபோதும் இந்திய மத்திய அரசு கயிற்றின் மேல் நடக்கும் நிலையில்தான் இருக்கிறது. காங்கிரஸ் கட்சி எப்போது வேண்டுமானாலும் அதனைக் கீழே தள்ளிவிடக் கூடும் என்ற நிலை உள்ளது. இந்நிலையில் உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்களில் உறுதியான முடிவுகளை அதனால் மேற்கொள்ள முடியுமா? என்பது சந்தேகம்தான்.

இதேவேளை சமீபத்தில் வடபகுதியில் இருந்து படகு மூலம் சென்ற அகதிகளில் சிலர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். பின்னர் அகதி முகாமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### புலிகளின் ஆதரவு

யாழ் குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்து வன்னியில் உள்ள மக்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்ப புலிகள் அனுமதிக்க மாட்டார்கள். ஆனால், அவர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு செல்ல விரும்பினால் புலிகள் அனுமதிக்கக்கூடும் என்று ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்திற்கு மீண்டும் அகதிகள் செல்லத் தொடங்கினால் அங்கு மீண்டும் அனுதாப அலை ஏற்படலாம். மத்திய அரசுக்கும் இலங்கையோடு பேசுவதற்கு ஒரு பிடி கிடைத்தமாதிரி இருக்கும் என்று புலிகள் நினைக்கலாம் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் தமிழகம் சென்ற அகதிகள் வடமராட்சியைச் சேர்ந்தவர்கள். புலிகளுக்கும் தெரியக்கூடியதாகவே அவர்கள் சென்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அவர்களை கரையில் இறக்கிய படகு திரும்பிவந்துவிட்டதால் புலிகளின் விருப்பத்தோடுதான் சென்றிருக்கலாம் என்ற சந்தேகம் வலுப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் தமிழக ஆதரவு புலிகளுக்கும் தேவையாகவே இருக்கிறது. தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றிய கவனத்தை திருப்ப புலிகள் முயன்றால் அதில் ஆச்சரியமில்லை.

# பஸ் போக்குவரத்து சீர்குலைப்பு

## பரிதாப நிலையில் பயணிகள்

மட்டக்களப்பு இ.போ.ச. சாலை நிருவாகத்தில் நீண்ட நாட்களாக இருந்து வந்த உட்பூசல்கள் தற்சமயம் பஸ்களைச் சேதமாக்குமளவுக்கு வெடித்திருக்கிறது. இப் பஸ் டிப்போவின் அதிகாரிகளும், அங்கு கடமையாற்றும் ஊழியர்களும் இரு பிரிவாகப் பிளவு பட்டுள்ளனர். குறித்த இரு அரசியல் கட்சிகளின் காரியாலயம் போலவே மட்டக்களப்பு டிப்போ இயங்குவதாக பலரும் தெரிவிக்கிறார்கள்.

ஒரு தரப்பினரைத் தீர்த்துக்கட்ட நினைத்த மறு தரப்பினர் சமீபத்தில் மட்டக்களப்பு டிப்போவுக்காக வழங்கப்பட்டிருந்த பஸ்களில் 11 இன் இயந்திரங்களுக்குள் இரும்புத் தூள்களைப் போட்டதன் காரணமாக அந்தப் 11 பஸ்களின் இயந்திரங்களும் முற்றாக உடைந்து கட்டையில் ஏற்றப் பட்டுள்ளதாக டிப்போவின் உதவிச் செயலாற்று முகாமையாளர் திரு.கே. சாந்தகுணம் தினமுரசுக்குத் தெரிவித்தார்.

உட் பூசல்கள் காரணமாகப் பொது மக்களின் பஸ் சேவைக்குச் சேதம் ஏற்படுத்தி இந்த நாசகார வேலையில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கடமை உணர்வும் சேவை மனப் பான்மையும் இல்லாத பலர் இந்த சதிநாச செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

மட்டக்களப்பு டிப்போவில் தற்சமயம் 26 பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை மிகப் பழைய பஸ்களாகும்.

புதிய அரசு பதவிக்கு வந்த அன்று இரவோடு இரவாக மட்டக்களப்பு டிப்போவின் சகல பஸ்களும் நிறம் மாற்றப்பட்டு கட்சியினது கொடிகள் டிப்போவில் தொங்க விடப்பட்டன. அக் கொடிகளும் பதாகைகளும் ஒரு வருடமளவில் டிப்போவில் காட்சி அளித்தன என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

(ஏறாவூர் நிருபர்)

30.05.96 அன்று செங்கலடியிலிருந்து மட்டக்களப்புக்கு வரும் 10 மைல் வரையான தூரப் பகுதியிலிருந்து பயணம் செய்யும் மாணவ-மாணவிகள் மட்டக்களப்பு டிப்போவுக்குள் புகுந்தனர் பஸ் சேவைச் சீர்கேடு காரணமாக தாம் பாடசாலைக்குச் செல்ல முடியாதது பற்றி ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் கையெழுத்திட்ட கடிதமொன்றை டிப்போ அதிகாரிகளிடம் சமர்ப்பித்தனர்.

மாணவர்களுக்காகவும், மற்றும் அலுவலர்களுக்காகவும் சேவையிலீடுபட வேண்டிய பஸ் சில வேளைகளில்வரும் சில வேளைகளில் வராமல் போகும். சாரதிகள், நடத்துனர்கள், பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஆகியோரின் விருப்பு வெறுப்பின்படியே பஸ்சேவை இடம் பெறுவதாகப் பயணிகள் தெரிவிக்கிறார்கள். மட்டக்களப்பு டிப்போ ஒரு ஒழுங்கான நேர அட்ட வணையைப் பின்பற்றுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் பலவந்த நிதி திரட்டல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களிடம் தீவிர நிதி திரட்டலில் தமிழ் கட்சி ஒன்றின் உறுப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளருமான திரு. இராசமாணிக்கம் அதனைக் கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

சமீபத்தில் படையினருடன் இணைந்து செயற்பட ஆரம்பித்துள்ள இயக்கமொன்றின் உறுப்பினர்களே பலவந்தமான நிதி திரட்டலில் ஈடுபடுவதாக அவர் கூறியுள்ளார்.

இந்திய அமைதிப்படை காலத்தில் தமது இயக்கத்தில் இருந்துவிட்டு பின்னர் ஒதுங்கியிருந்தவர்களையும் குறிப்பிட்ட இயக்கத்தினர் தேடிப் பிடித்துவருவதாகவும், அவர்களது உறவினர்கள் தம்மிடம் வந்து முறையிட்டுள்ளதாகவும் இராசமாணிக்கம் எம்.பி. தெரிவித்துள்ளார்.

பணம் கொடுக்க மறுப்பவர்களை புலிகளின் ஆதரவாளர்கள் என்று சொல்லி பழிவாங்கும் நடவடிக்கைகளும், மிரட்டல்களும் விடுக்கப்பட்டுள்ளதாக முரசுக்கு கிடைத்த தகவல் தெரிவிக்கிறது.

# மோதல் நிலைக்கு சமரச முடிவு

(அக்குறணை நிருபர்)

கண்டி அளவத்துகொட தனியார் பஸ் ஒன்றில் பிரயாணம் செய்த அக்குறணையைச் சேர்ந்த முஸ்லிம் பிரயாணி ஒருவருக்கும் பெரும்பான்மை இன விஷ பஸ் நடத்துனருக்குமிடையே ஏற்பட்ட சிறு வாய்த்தர்க்கம் விகாரமாகி, கைகலப்பில் முடிந்ததைத் தொடர்ந்து அக்குறணை அளவத்துகொடையில் இரு இனங்களுக்கிடையே ஒரு இன முறுகல் நிலை ஏற்பட்டு மூன்று தினங்களுக்கும்மேலாக தனியார் பஸ் போக்குவரத்துகள் யாவும் முற்று முழுதாக நிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலமையினால் அலுவலக ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என்று பலதரப்பினரும் பிரயாண நெருக்கடியை அனுபவித்தனர்.

தற்பொழுது இரு புறத்து முக்கியஸ்தர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் போன்றோரின் தலையீட்டினால் பிரச்சனை தற்காலிகமான சுமுக நிலையொன்றுக்கு வந்துள்ளது.

# மின்சார நெருக்கடியில் சம்சாரத்தை கைபிடித்தார்

மின்சக்தி அமைச்சரும் பாதுகாப்புத்துறை இணை அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்த கடந்த வியாழக்கிழமை இரு மிகமுக்கியமான அலுவல்களை ஒரே வேளையில் கவனிக்க வேண்டியதாயிற்று. நாடு மின்சக்தி முற்றாக துண்டிக்கப்பட்டிருந்தமையினால் மின்உற்பத்தியை வழமைக்குக் கொண்டு வந்து இருளைப் போக்க வேண்டியிருந்த அதே கால கட்டத்தில் தனது வாழ்க்கைத் துணையினையும் ஏற்க வேண்டிய நிலையிலிருந்தார், அமைச்சர்.

வேலை நிறுத்தத்திலீடுபட்டிருந்த இலங்கை மின்சாரசபை தொழிற்சங்கங்களுடன் மிகக் கடுமையாக நடந்துகொண்ட ஜெனரல் ரத்வத்த, தனது இளம் மனைவியைக் கைப்பிடிக்க கண்டி மாநகருக்கு விரையவேண்டியதாயிற்று. கண்டி திருத்துவக் கல்லூரியில் அவர் கல்வி பயிலும் காலத்தில் கண்டி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் படித்த ரமணி இம்புல்தேனியாவை காதலித்தார். மிக மிக நெருக்கடியான நேரத்திலும் தனது மாணவப் பருவக் காதலியை தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்வதற்கு விரைந்து சென்று சரியான முகூர்த்த நேரத்தில் மணவிழாவில் கலந்து கொண்டார்.

# விசாரணை நடத்துமாறு கோரிக்கை

“யாழ்ப்பாணத்தில் நாகர்கோவில் பாடசாலையில் கடந்த வருடம் 23.09.1995 இல் நடைபெற்ற சம்பவம், தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும். சர்வதேச நிறுவனங்களது பிரதிநிதிகள் அடங்கிய விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும். அதனை செய்யுமாறு தென்னிலங்கை மாணவர்கள் அரசைக் கோர வேண்டும், தூண்டவேண்டும்.” இவ்வாறு 'எல்லாளன் படை'யால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 'எல்லாளன் படை தெரிவித்துள்ள கருத்துக்கள் தணிக்கைக்கு உட்பட்டவை என்பதால் வெளியிட முடியவில்லை.

# மின் கட்டணம் மேலும் உயரும்!

தொடரும் மின்சார வெட்டினாலும், மின்சார சபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினாலும் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்த மின்பாவனையாளர்கள், மின்சாரசபைக்கு மிகக் குறைந்த கட்டணத்தையே அடுத்து செலுத்த வேண்டியிருக்கும் என்று கருதலாம்.

ஆனால், மின் வெட்டினால் மின்சார சபைக்குரிய செலவினங்கள் எந்த வகையிலும் குறையவில்லை. அனல் மின் உற்பத்தி நேரத்தை அதிகரித்தமையினால் அதன் உற்பத்திச் செலவு பன்மடங்காக அதிகரித்துள்ளது. ஒரு மாதத்திலேயே ஏறத்தாழ 15 கோடி ரூபாக்கு மேல் அனல் மின் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதாக இ.மி.சபையினர் தெரிவித்துள்ளனர். இத்தகைய மேலதிகச் செலவினங்களை மின்பாவனையாளர்களின் தலையில் கட்டுவதைத் தவிர வேறு வழி இல்லை.

அடுத்தடுத்து வரப்போகும் மின் கட்டணப்பட்டியலில் தரப்படும் தொகையினைப் பார்த்து மூர்ச்சித்து விழாமல் பாவனையாளர்கள் எச்சரிக்கையாக இருங்கள்!

# புலிகளுக்கு 4 கோடி கொடுத்தார் எம்.ஜி.ஆர்.

## தமிழக சட்டசபையில் கருணாநிதி விளக்கம்

விடுதலைப் புலிகள் விடயத்தில் தமிழக அரசின் நிலை என்னவென்று தமிழக சட்டசபையில் கேள்வி எழுப்பப்பட்டது. அ.தி.மு.க. உறுப்பினர் தாமரைக்கனி அக் கேள்வியை எழுப்பினார்.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்தி வைத்திருந்தார். 1989 இல்தான் (தி.மு.க. ஆட்சியில்) விடுதலைப்புலிகள் எப்போதும் வரலாம், போகலாம் என்றநிலை இருந்தது. அப்போது இங்கு கால் தூக்கியதுதான் ராஜீவ்கொலையில் முடிந்தது” என்று தாமரைக்கனி குறிப்பிட்டார்.

அவருக்கு பதிலளித்து உரையாற்றிய தமிழக முதல்வர் மு.கருணாநிதி கூறியதாவது: “தாமரைக்கனி வேடிக்கையாகப் பேசுவதாக நினைத்து விஷத்தைப் பரப்பக் கூடாது. 1989 இல்தான் புலிகள் இங்கு காலூன்றினார்கள் என்பது தவறான தகவல். 1983 லேயே விடுதலைப்புலிகள், மற்றும் போராளிகள் தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டனர்.

1984 இல் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வெடிகுண்டு வெடித்து 40 ற்கும் மேற்பட்டவர்கள் மரணம் அடைந்ததை யாரும் மறக்கவில்லை. பாண்டிபஜாரில் கடைத்தெருவில் துப்பாக்கிச் சூடு நடந்தது. 1989 வரை எத்தனை வன்முறைச் சம்பவங்கள் தமிழ்நாட்டில் நடந்தன. விடுதலைப் புலிகளை, போராளிகளை ஆதரிக்காத எந்தக் கட்சியும் தமிழ்நாட்டில் இல்லை.

மறைந்த எனது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்கு 4 கோடி ரூபாய்க்கு காசோலை தந்தார். அது பகிரங்க செய்தியாக வந்தது. அதனை எம்.ஜி.ஆர். மறுக்கவில்லை.

இந்திராகாந்தி பிரதமராக இருந்தபோது 100க்கும் மேற்பட்ட போராளி முகாம்கள் இருந்தன. ராஜீவ் காந்தி காலத்திலும் அந்த முகாம்கள் இருந்தன.

1989இல் பத்மநாபா மற்றும் 10 பேர் கொல்லப்பட்டனர். அப்போது டில்லியில் இருந்த நான் விடுதலைப்புலிகள்தான் அதற்கு காரணம் என்று அறிவித்தேன்.

அதன் பின்னர் 2 மாதம் கழித்து எதிர்க்கட்சி தலைவியாக இருந்த ஜெயலலிதா அம்மையார் விடுதலைப் புலிகளுக்கு தி.மு.க. அரசு ஆதரவு கொடுக்க வேண்டும் என்றார். எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளை ஆதரித்த அளவுக்கு கருணாநிதி ஆதரவு அளிக்கவில்லை என்றார். பத்மநாபாவை கொலை செய்தவர்களை எப்படி ஆதரிக்கலாம் என்று நிருபர்கள் கேட்டபோது, “அது இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்தது. இப்போது நல்லவர்களாகிவிட்டார்கள்” என்று ஜெயலலிதா கூறினார்.

எனவே விடுதலைப்புலிகள் காலூன்றியது 1989க்கு முன்னால் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்பாவி தமிழர்களுக்காக தி.மு.க. மட்டுமல்லாமல் சகல இயக்கங்களும் கண்ணீர் வடித்துக்கொண்டுதான் இருக்கின்றன.

அங்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படவேண்டும். மத்திய அரசோடு அந்தப் பிரச்சனை பற்றிப் பேசப்படும்.” என்று மு.கருணாநிதி தெரிவித்தார்.

# பிறந்த குழந்தையைத் திருகிய ஆசிரியை

## திருமலையில் நடைபெற்ற திடுக்கிடும் சம்பவம்!

(சஞ்சயன்)

பிறந்த குழந்தையை கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளதாக ஒரு ஆசிரியைமீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. ஆசிரியை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார். அந்த ஆசிரியை மூதூரில் உயர் பதவி வகித்த தமிழ் அதிகாரி ஒருவரின் மனைவியாவார்.

இச் சம்பவம் பற்றி தெரியவந்துள்ளதாவது: திருக்கோணமலையில் உள்ள உவர் மலையைச் சேர்ந்தவர் அந்த ஆசிரியை. அவரது மகள் நளினி. விவசாய விரிவாக்க திணைக்களத்தில் நளினி வேலை செய்து வந்தார்.

வீடியோ கடை உரிமையாளர் ஒருவரை நளினி காதலித்தார். இருவரும் நெருங்கிப் பழகினார்கள். அதனால் நளினி கருவுற்றார்.

நளினியின் காதலை அவரது தாயான ஆசிரியை ஏற்றுக்கொள்ளவில்லை. கனடா மாப்பிள்ளை ஒருவருக்கு நளினியைத் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தார்.

கர்ப்பிணியாக இருந்த நளினி கடந்த மாதம் 29ம் திகதி பிரசவ வேதனையில் துடிதுடித்தார். மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றால் விஷயம் வெளியே தெரிந்து விடும் என்று பயந்தார் ஆசிரியை. அதனால் மகளுக்கு அவரே வீட்டில் வைத்து பிரசவம் பார்த்தார். பிரசவமானதும் இரத்தப் போக்கு நிற்காமல் நளினி கதறினார்.

பிறந்த பெண் குழந்தையை 'பெட்சீட்' ஒன்றில் சுற்றி கட்டிலுக்கு கீழே போட்டு விட்டு, மகளை அழைத்துக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றார் ஆசிரியை. நளினியைப் பரிசோதித்த டாக்டர்கள் பிரசவமானதை கண்டுபிடித்தனர். ஆனாலும் ஆசிரியையோ அப்படி எதுவும் நடக்கவில்லை. வெறும் இரத்தப்போக்குத்தான் என்று கூறிவிட்டார். நளினியின் உயிரும் பிரிந்து விட்டது.

நளினியின் இறுதிச் சடங்கு முடிந்து இரு நாட்களின் பின்னர்தான் பெட்சீட்டில் சுற்றி மறைத்துவைத்த குழந்தையை வெளியே எடுத்தார். உயிரற்ற அந்த உடலை இரவோடு இரவாக எரிக்க முற்பட்டபோது அயலவர்கள் கண்டுவிட்டனர்.

உடனடியாக பொலிசாருக்கு தகவல் போனது. ஆசிரியை கைது செய்யப்பட்டார். குழந்தையின் உடலை பரிசோதித்த டாக்டர் குழந்தை கழுத்தை நெரித்து கொல்லப் பட்டுள்ளது என்று கண்டுபிடித்தார்.

நீண்ட விசாரணையின்பின்னர் குழந்தையை கழுத்தை நெரித்துக் கொன்றதை ஆசிரியை ஒப்புக் கொண்டார்.

நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஆசிரியையை எதிர்வரும் 17ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

## வாகனத்தில் செல்வோருக்கு பனைமட்டை அடி!

செங்கலடி, ஏறாவூர் பகுதிகளிலிருந்து காலையில் முதலில் புறப்படும் வாகனங்களில் கஷ்டப்பட்டு மட்டுநகர் செல்லும் பயணிகளுக்கு சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி பொலிஸ் சாவடிகளில் பச்சைப் பனைமட்டையாலும், இரும்புக் கம்பியாலும் அடி விழுகிறது.

அதிகாலையிலேயே இங்கிருந்து வேலைக்குச் செல்வோரும், தூரப்பயண வாகனங்களில் இடம்பிடித்துக் கொள்ள மட்டுநகர் செல்வோரும், ஆஸ்பத்திக்குச் செல்வோருமே இப்பரிதாப பனைமட்டை அடிக்கும், இருப்புக் கம்பி அடிக்கும் ஆளாகிறார்கள்.

செங்கலடியிலிருந்து காலையில் முதன் முதலாக மூன்று தனியார் வாகனங்களே மட்டக்களப்பு நோக்கிப் புறப்படுகின்றன. அளவுக்கதிகமான பயணிகள் இவ்வாகனங்களில் முண்டியடித்துச் செல்லும்போது வாகனங்கள் மேற்குறித்த சாவடிகளில் நிறுத்தப்பட்டு அடி விழுந்தபின், வாகனச் சாரதியிடம் மின்சார வயர், மின்குமிழ், கொப்பி, பேனா என்பன வாங்கி வருமாறு கேட்கப்படுகிறது.

இந்தியப் படையினர் விலகியபோது வீதிகளில் முகாமிட்டிருந்த புலிகளும் வாகனங்களில் தொங்கிக் கொண்டு செல்வோருக்கு இவ்விதமே தடியடிப் பிரயோகம் செய்தனர். என்பது நினைவிருக்கலாம்.

## 600 இலட்சம் ஒதுக்கீடு

(காத்தான்குடி நிருபர்)

காத்தான்குடி பிரதேச வீதி, சுகாதார அபிவிருத்திப் பணிகளுக்காக பிரதி, தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரின் வேண்டுதலின் பேரில் சுகாதார, சமூக சேவைகள், பெருந்தெருக்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, 600 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளார்

இதில் காத்தான்குடி மாவட்ட வைத்தியசாலையில் கட்டிட, விடுதிப்பணிகளுக்காக 240 லட்சம் ரூபாயும், பிரதானவீதி, கடற்கரைவீதி, வேறுவீதிகளின் அபிவிருத்திக்காக 360 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் பௌசி குறிப்பிட்டார்.

இதில் காத்தான்குடி மாவட்டவைத்திய சாலையில் நிர்வாகப் பிரிவு கட்டிடம், பிரேத அறை, மாவட்ட வைத்தியதிகாரி பணிமனை, உதவி வைத்தியதிகாரி பணிமனை உட்பட பல கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

## நிதி நெருக்கடியில் மத்திய மாகாணசபை!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையில் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாண்டு தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை 47 இலட்சம் ரூபாவை மத்திய அரசு மாகாண சபைக்கு வழங்காததை அடுத்து ஏற்பட்டுள்ள நெருக்கடியில் வேதனம் கொடுப்பதற்கான பணத்தை மத்திய மாகாண சபை மேல்மாகாண சபையிடம் கடனாக பெற்றுள்ளது.

இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த ஒருவர் தினமுரசுக்குத் தெரிவிக்கையில், மத்திய அரசு இப்பணத்தை உரிய வேளையில் மாகாண சபைக்கு வழங்காததையடுத்து நிருவாகத்திலும் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக சூசகமாக அவர் வெளியிட்டார். மேல் மாகாண சபையிடம் கடனாகப் பெறப்பட்ட தொகை விரைவில் திருப்பிச் செலுத்தி விடுமெனவும் அவர் மேலும் சொன்னார்.

இதே வேளையில் இந்நிதி நெருக்கடி காரணமாக மத்திய மாகாணத்தில் அபிவிருத்திப் பணிகளும் மந்த கதியிலேயே இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## கொண்டாட்டம் வேண்டாம் என்றார் கருணாநிதி



ஜூன் 3ம் திகதி தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் 73வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. பிறந்தநாளை முன்னிட்டு கலைஞர் கருணாநிதி விடுத்த அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"என் உதடுகள் புன்னகை புரிவதுபோல நடிக்கின்றன. ஆனால் உள்ளமோ புண்ணாகிக்கிடக்கிறது. நடக்கும்பாதையில் முள் கிடந்தால் எடுத்தெறிந்துவிட்டோ தாண்டிக் குதித்தோ பயணத்தைத் தொடர்வது எளிது. ஆனால் இங்கு பாதை முழுவதும் முள்ளாக, முட்புதராகவன்றோ கிடக்கிறது.

இந்தப்பாதையில் பயணம் செய்து நாட்டு மக்கள் விரும்பும் நல்லாட்சியை ஒளிவிடச் செய்வதற்கு அனைவரின் ஒத்துழைப்பும், ஆதரவும் தேவை. அதற்காக உழைத்திட வேண்டிய இத்தருணத்தில் எனக்காக பிறந்த நாள் விழாக்கள் ஆடம்பரமாக எடுத்திடல் எனக்கு மகிழ்ச்சியூட்டக்கூடிய செயல் அல்ல. மாறாக என் மனவேதனையை அதிகப்படுத்தக்கூடியதாகும்.

ஏன் - இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு நெருப்பாற்றில் நீந்தவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானேன் என்று பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் எனக்கு நீங்கள் எடுக்கும் பிறந்தநாள் விழாக்கள் எதுவும் பெரு மகிழ்ச்சி ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்காதீர்கள்.

மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். கழகக் கொடிகளை ஏற்றுங்கள். கண்கவர் சுவரொட்டிகளை அச்சடிப்பதிலும், ஒட்டுவதிலும் கவனம் செலுத்தாதீர். லட்சியத்தை பரப்பிடுவீர். ஏடுகளில் என்னைப் பற்றி பக்கம் பக்கமாக விளம்பரம் தருவதை தவிர்த்திடுவீர். வீண் ஆரவாரம் செய்வது வேண்டவே வேண்டாம்."


இவ்வாறு தமிழக முதல்வர் மு.கருணாநிதி தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.


# இலங்கைவாழ் சகோதர சகோதரிகளே! எங்கள்மீது வைத்த நன்நம்பிக்கைக்கு எங்கள்நன்றியையும் நல்வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

லக்சிறி சர்வதேச "கார்க்கோ" சேவை 17 வருடம் தனது பாரிய சேவையை பெருமையுடன் பூர்த்தி செய்துள்ளது. இப்பாரிய சேவைப்பாதையில் பல கஸ்ட நஸ்டங்களுக்கும், சவால்களுக்கும் முகம்கொடுப்பதற்கு, நீங்கள் எமக்களித்த ஆதரவும், ஒத்துழைப்பும் அளப்பரியது.

காளான்கள் போல் முளைத்து அழிந்து போகும் குவைத்நாட்டில் உள்ள "கார்க்கோ" சேவைகளைப் பற்றி புதிதாக உங்களுக்குக் கூறக்கூடியது ஒன்றுமில்லை. பல்வேறு கவர்ச்சிகளுடன் கூடிய இப்போலிகள் சில நாட்கள் மட்டுமே நிலைத்து நிற்கின்றன. அந்நிலையங்களை நம்பி தமது வியர்வை சிந்தி உழைத்த பொருள் உடமைகளை இழந்தவர்கள் உங்களுள் பலர் உள்ளனர். சில கார்க்கோ நிலையங்கள் வாடிக்கையாளரின் நன்மைகருதாது. தத்தமது சொந்த போட்டி பொறாமையின் பொருட்டு நடத்தி, மக்கள் ஏற்கமுடியாதளவு விலையை நிர்ணயிக்கின்றனர்.

உண்மை என்னவென்பதை தெளிவாக அறிந்த இலங்கையர் அந்தப் போலி உபாயங்களுக்குப் பலியாகாமல், எங்கள் உறுதியான சேவையின் நம்பிக்கையை வலுப்படுத்துகின்றனர். நாங்கள் இன்றுவரை ஏற்றிய கெண்டெயினர்களின் தொகை அதிகரித்ததேயன்றி ஒரு போதும் குறைந்ததேயில்லை. உண்மையில் நாம் மென்மேலும் வாடிக்கையாளர்களினால் உற்சாகமூட்டப்பட்டோம். நாங்கள் என்றும் உங்கள் ஆதரவினை மறவோம்.



LAKSIRI SEVA

லக்சிறி சேவா (பிரைவேட்) லிமிட்

தலைமையகம்:-

31, சென்ற் அந்தனீஸ் மாவத்தை,

கொழும்பு – 3 (சிறீலங்கா) இலங்கை.

தொலைபேசி: 574180, 575576, 577726

பக்ஸ் : 00941-577727

உங்களின் பொருட்டு எங்களின் கனிவான பணியாளர்குழு, உண்மையாகவும், திறமையாகவும் மேலும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற முனைகின்றனர்.

வெளிநாடுகளில் உங்களைச் சந்திக்கும் உண்மையான "கார்க்கோ" நண்பன்.

பூரணத்துவம் பெற்ற லக்சிறி சர்வதேச கார்க்கோ சேவையே

Tradlanka







படிப்பகம்

www.padippakam.com

# புலிகளின் எச்சரிக்கை

## அளந்து நகரும் படையணிகள்

யாழ்-குடாநாட்டில் படையினரின் கட்டுப்பாட்டு பகுதிகளில் மக்கள் தங்கி விட்டது தொடர்பாக புலிகள் சிறிது எரிச்சலடைந்துள்ளார்கள்.

இறுதியாக வெளியான விடுதலைப் புலிகள் பத்திரிகையில் வே. பாலகுமார் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவது தொடர்பாக அவர் பின்வருமாறு சொல்லுகிறார்.

**"எப்போதுமே நேரடியான முனைப்பான போராட்டங்களில் ஈடுபட்டு பட்டறிவு பெறாத எம்மக்கள், கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி, தமது பரம்பரை வாழ்விடங்களை சென்றடைய வேண்டும் என்கின்ற ஒரே நோக்கத்தோடு, வேறு எதுவுமே பற்றிச் சிந்திக்காமல் செயற்படுகிறார்கள். இப்போது இவர்களுக்கு வேறு எதுவும் மனதில் தோன்றாது. கண்ணில் படாது."**

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இருந்த மக்களும், ஏனைய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து அங்கு தங்கியிருந்தவர்களும் முற்றாக வெளியேறி வன்னி பெருநிலப்பரப்புக்கு செல்ல வேண்டும் என்பதுதான் புலிகளது கோரிக்கை.

அந்தக் கோரிக்கையை மக்கள் ஏற்றிருந்தால் வெளியேறிச் செல்ல போதுமான கால அவகாசம் இருந்தது.

'சூரியகதிர் 3' நடவடிக்கை ஆரம்பித்து கிளாலி கடல் ஏரிப்பாதையை மூடுவதற்கு முன்னரே யாழ்குடாநாட்டில் இருந்து சகல மக்களையும் புலிகளால் வெளியேற்றியிருக்க முடியும். மக்கள் உடன்பட மறுத்தமையால் தான் அதனைச் செய்ய இயலவில்லை.

எனவே, தமது விருப்பத்தை மீறியவர்கள்தான் தற்போது யாழ்குடாநாட்டில் இருக்கும் மக்கள் என்ற எண்ணமும் சிறிது வெறுப்புக் கலந்த நிலையில் புலிகளிடம் ஏற்பட்டிருக்கிறது.

எதிர்காலத்தில் யாழ்-குடாநாட்டில் தாம் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகளின் போது, அங்குள்ள மக்களின் பாதிப்புக்கள் தொடர்பாக புலிகள் தமது அக்கறையைக் குறைப்பதற்கு மேற்கண்ட எண்ணப் போக்கும் காரணமாக அமையலாம்.

புலிகளது கட்டளையை மீறித்தான் யாழ்குடாநாட்டில் வாழ்வதற்கு மக்கள் முடிவு செய்தார்கள் என்ற கருத்தை முறியடிக்க, தமது கட்டளையை மீறியதால் மக்கள் அவலப்படுகிறார்கள் என்பதை நிரூபிக்கவே புலிகள் தீவிரம் காட்டுவார்கள்.

**"படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் காத்திருப்பது மறுவாழ்வல்ல, மரணப் பொறிதான்"** என்று புலிகள் கூறிவருகிறார்கள்.

மக்களை வெளியேறுமாறு கூறிய போதும் அதனைத்தான் புலிகள் சொன்னார்கள். அப்படியிருந்தும் மக்கள் வெளியேற மறுத்துவிட்டார்கள்.

எனவே, தாம் சொன்னதெல்லாம் எந்தளவுக்கு உண்மை என்று மக்கள் உணர்ந்து கொள்ளக் கூடியவகையில் நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுவர்.

தமது கட்டுப்பாட்டையோ, தமது கட்டளைகளையோ மக்கள் மீறிச்செல்லாத நிலையை ஏற்படுத்த வேண்டியது புலிகளுக்கு அரசியல்ரீதியான கட்டாயமாகும்.

புலிகளைப் பொறுத்தவரை தம்மைமீறி தமிழ் மக்களிடம் வேறு எவரும் செல்வாக்கு செலுத்துவதை விரும்புவதில்லை. அதாவது இராணுவரீதியில் மட்டுமல்ல, அரசியல் ரீதியிலும் தமக்கு சவால் உருவாகிவிடக் கூடாது என்பதுதான் அதன் அர்த்தம்.

பேச்சுவார்த்தைக் காலத்தில் நடைபெற்ற ஒரு சம்பவமே அதற்கு நல்ல உதாரணம்.

சந்திரிக்கா அரசின் பிரதிகளை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர் யாழ் பல்கலைக் கழக வளாகத்தில் இறங்கியது. புலிகளே எதிர்பாராதளவுக்கு மக்கள் திரண்டு வரவேற்றனர். புலிகளது காவல்துறையினரை தள்ளிவிழுத்தியபடி மக்கள் ஹெலிகொப்டரை நோக்கி ஓடினார்கள். அரச பிரதிநிதிகளுக்கு முகமெல்லாம் பூரிப்பு. புலிகளோ முகம் சுளித்துக்கொண்டனர்.

அதன்பின்னர் அரச பிரதிநிதிகள் செல்லும் ஹெலிகொப்டர்களை சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இறங்கத்தான் புலிகள் அனுமதித்தனர். அங்குள்ள உயர்ந்த சுற்று மதில்களை தாண்டி மக்கள் மைதானத்திற்குள் செல்ல முடியாது.

புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அன்று சொன்னதில் வெறுப்பு பளிச்சிட்டது: "ஹெலிகொப்டரில் வந்து சுட்டால் ஓடுகிறீர்கள், அதே ஹெலிகொப்டர் வந்து இறங்கினால் ஓடிப்போய் கட்டிப்பிடித்து கொஞ்சுகிறீர்களே!" என்றார்.

சந்திரிக்கா அரசாங்கம் தம்மையும் மீறி மக்களுடன் தொடர்பையோ, மக்களின் அபிமானத்தையோ பெற்றுவிடக்கூடாது என்பதில் புலிகள் கவனமாகவே இருந்தனர். விரைவாக போர் நிறுத்தத்தை புலிகள் கைவிட்டதற்கும் அதுவும் ஒரு முக்கிய காரணம்.

இவ்வாறான நிலையில், தற்போது புலிகளது சக்தியை மீறிய செயலாக யாழ்-குடாநாட்டில் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

ஹெலிகொப்டரை நோக்கி மக்கள் செல்வதை அன்று புலிகளால் தடுக்கக்கூடியதாக இருந்தது. படையினர் நிலைகொண்டிருந்த பூநகரிப்பாதையால் மக்கள் போக்குவரத்து செய்யவே விரும்பமாட்டார்கள் என்றும் புலிகள் அப்போது கூறமுடிந்தது.

மக்கள் அரசாங்கத்தோடும், படையினரோடும் உறவுவைப்பதையோ, அவர்களை நெருங்கிச் செல்வதையோ விரும்பவில்லை. மக்கள் புலிகளோடுதான் இருக்கிறார்கள்.

மக்களோடு பேசவேண்டுமானால், புலிகளோடு பேசுங்கள் என்று கூறக்கூடிய நிலையில் புலிகள் அன்று இருந்தனர்.





யாழ்-குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்து, மக்களும் அங்கு தங்கிவாழும் நிலையில் புலிகள் சந்திரிக்கா அரசோடு நடத்திய போச்சுவார்த்தையில் முன்வைத்த முக்கிய கோரிக்கையும் அடிபட்டுப்போயிருக்கிறது.

பூநகரி இராணுவமுகாம் முற்றாக அகற்றப்பட்டு தரைவழிப் போக்குவரத்து பாதை திறக்கப்படவேண்டும் என்பதே புலிகளது முக்கிய கோரிக்கையாக இருந்தது. அக்கோரிக்கைதான் பேச்சு முறிவதற்கான முக்கிய காரணமாகவும் புலிகளால் கூறப்பட்டது.

ஆனால், இப்போது படையினரின் கட்டுப்பாட்டு பகுதியில் மக்கள் இருப்பதால், படையினரின் முகாம் உள்ள பூநரியால் மக்கள் செல்லமாட்டார்கள் என்ற வாதம் தற்போது எடுபடாது.

சூரியக்கதிர் ஒன்றின் பின்னர் புலிகள் விடுத்த அறிக்கையில், "யாழ்ப்பாணத்தில் படையினர் வாபஸ் பெறப்பட்டு, மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்ற பின்னர்தான் பேச்சுவார்த்தை நடத்தலாம்." என்று தெரிவித்திருந்தனர்.

படையினர் வாபஸ் பெறப்படாத நிலையிலேயே மக்கள் திரும்பிச் சென்றுள்ளநிலையில், மக்கள் திரும்ப வேண்டும். அதற்காக படையினர் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையும் பலவீனமடைந்துள்ளது.

மக்களது அன்றாடப் பிரச்சனைகளோடு கலந்து, இராணுவரீதியிலும் தமக்கு சாதகமான கோரிக்கைகளை புலிகள் முன்வைக்கும் தந்திரோபாயம் பாதிப்படைந்துள்ளது.

உதாரணமாக, தற்போதைய நிலையில் பூநகரி முகாமை நீக்க வேண்டும் என்று கோரிக்கைவிடுத்தால், அது முழுக்க, முழுக்க புலிகளது இராணுவ நலன் சம்பந்தப்பட்ட கோரிக்கை என்பது இயல்பாகவே தெரிந்து விடும்.

ஆக, மக்கள் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருப்பதால் தமது இராணுவ நலன் சார்ந்த கோரிக்கைகளையும் அரசியல்ரீதியில் நியாயப்படுத்தக்கூடிய வாய்ப்புக்களைப் புலிகள் இழந்துள்ளனர்.

அதேவேளையில், படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் எவ்வித பிரச்சனையுமில்லாமல் இயல்பு வாழ்க்கை திரும்புமானால், மக்கள் தம்மைவிட்டு அந்நியமாகிச் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும் என்றும் புலிகள் நினைப்பர்.

மின்சாரம், தொலைபேசி வசதி, மற்றும் புனரமைப்பு வேலைகள் என்று ஒரு குறிப்பிட்ட காலம் இழுபட்டுச்செல்ல, அந்தப் புதிய பரபரப்பில் தமிழ் மக்கள் இனப்பிரச்சனையின் அடிப்படைகளை தற்காலிகமாக மறந்து போய்விடுவார்கள் என்று புலிகள் நினைப்பதில் தவறில்லை.

ஏனெனில், அரசாங்கமும் அப்படியான கணிப்பில்தான் காரியம் பார்க்கிறது.

மறுபுறம், புலிகள் எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடாவிட்டால், புலிகள் தொடர்பான நம்பிக்கையீனங்களும் ஏற்படத் தொடங்கிவிடும்.

எனவே, அனைத்தையும் கணக்குப் போட்டுப் பார்க்கும்போது, யாழ்-குடாநாட்டில் தமது நடவடிக்கைகளை புலிகள் ஆரம்பித்தேயாக வேண்டிய நிலையில் உள்ளனர்.

அதேவேளை, யாழ்-குடாநாட்டு களத்தில் அவசரப்பட்டு பலப்பரீட்சை ஒன்றை பாரியளவில் ஆரம்பித்து, தமது சக்திகளை இழக்கவும் புலிகள் உடனடியாக முன்வரமாட்டார்கள்.

வன்னியிலும் படை நடவடிக்கை தொடரலாம் என்று புலிகளே கூறிவருவதால், அங்குள்ள தலைமைப்பீடத்தைப் பாதுகாக்க கணிசமானளவு பலத்தை சேமித்துவைக்கும் தேவையும் புலிகளுக்கு இருக்கிறது.

புதிய உறுப்பினர்களை போதியளவு திரட்டிக் கொள்வதற்கு தற்போதைய சூழல் வாய்ப்பாக இல்லையென்பதும் புலிகளுக்குள்ள பாரிய பிரச்சனைதான்.

புதிய உறுப்பினர்களை திரட்டுவதற்கும் படையினருக்கும் மக்களுக்கும் இடையே முரண்பாட்டை தீவிரப்படுத்தும் நடவடிக்கைகளைத்தான் புலிகள் நம்பியிருக்க வேண்டியுள்ளது.

அதற்காகவும், யாழ்-குடாநாட்டில் படையினர்மீது தாக்குதல்களை நடத்தியாக வேண்டும். நேரடியான பாதிப்புக்கள் இல்லாமல், இனவிடுதலை என்றரீதியில் சிந்தித்து இயக்கதில் சேரும் சூழல் தற்போது காணப்படவில்லை.

தன் குடும்பமோ, தன் உறவினர்களோ பாதிக்கப்பட்டு அதன் பாதிப்பைக் கண்டு

### எக்ஸ்ரே ரிப்போர்ட்

இயக்கத்தில் சேரும் நிலையைத்தான் புதிய உறுப்பினர் திரட்டலுக்கு புலிகள் உடனடியாக நம்பியிருக்க வேண்டியுள்ளது.

அதனால், இரண்டு முனைகளில் புலிகள் கவனம் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது.

ஒன்று, படையினர் நிலை கொண்டுள்ள பகுதிகளில் கெரில்லாத் தாக்குதல்கள்.

இரண்டு, வன்னி தளப்பிரதேசத்தின் தற்காப்பு.

பாதுகாப்பு பிரதியமைச்சரின் தந்திரத்தின்படி படையினர் தொடர்ந்து போரிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். போரில் ஈடுபடுவதைவிட முகாம்களில் படைகள் முடக்கப்பட்டிருப்பதுதான் பாதகம் என்பதுதான் அவரது திட்டங்களில் அடிப்பைக் கருத்து.

அக்கருத்துக்கு ஏற்ப தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பலனைக் கொடுத்திருப்பதால், ஜனாதிபதியும் தனது பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கருத்தை மறுக்கப்போவதில்லை. குறுக்கிடப்போவதுமில்லை.

இந்நிலைகாரணமாக, புலிகள் தாக்குதலுக்கும், தற்காப்புக்கும் ஒரே நேரத்தில் திட்டமிட வேண்டிய யுத்த தந்திர நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

தமது சக்திகளை சேமிக்கவும் வேண்டும், எதிர்த்தரப்பின் சக்திகளை சேதப்படுத்தவும்

> **வடக்கில் தமது பலத்தையும் காட்டவேண்டும், வன்னியில் தமது தளத்தையும் பாதுகாக்கவேண்டும். புலிகளுக்குள்ள உடனடியான தந்திரோபாய நெருக்கடி அதுதான்.**

வேண்டும் என்ற நிலையில் பாரிய பலப்பிரயோக திட்டமிடல்களுக்கு தடைகள் ஏற்பட்டுள்ளன.

எனினும், தமது எதிர்கால நடவடிக்கை தொடர்பாக புலிகளுக்கு நம்பிக்கை கொடுக்கும் ஒரே ஒரு விஷயம், நீண்ட, பரந்த நிலப்பரப்பில் படையினர் நிலைகொண்டிருப்பது, ஊடுருவவும், குறைந்த பலத்தோடு தாக்குதல் நடத்தவும் வசதி என்பதுதான்.

ஆனால், வன்னி பெரு நிலப்பரப்பில் பாரிய ஒரு தாக்குதலை படையினர் மேற்கொண்டால் புலிகளின் முழுப் பலமும் அங்கேயே குவிந்து கிடக்கும் நிலை ஏற்பட்டுவிடலாம்.

புதிதாக படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளில் படைத்தரப்பு ஈடுபட்டுள்ளது. யாழ்-குடாநாட்டில் படைத்தரப்பின் பலம் குறையாமல் இருக்கக்கூடியதாக, வன்னிக்கு நடவடிக்கைகளை விஸ்தரிக்க புதிய ஆட்பலம் உதவலாம்.

வன்னியில் இருந்து புலிகள் சமீபத்தில் விடுத்துள்ள அறிக்கை, படைத்தரப்பையும் எச்சரித்திருக்கிறது.

படையினரின் தற்போதைய நடவடிக்கையை 'அகலக்கால் வைக்கும்' நடவடிக்கை என்று புலிகள் விபரித்துள்ளனர்.

"அகலக்கால்வைத்து நிலைகொள்ளும் போது நீண்ட போர் நெருக்கடிக்குள் சிக்கி, எதிர்காலத்தில் தோல்விகளை சந்திக்கப்போகிறீர்கள் என்பதை சொல்லிவைக்க விரும்புகிறோம்." என்று புலிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால், அப்படித்தான் நடக்கும் என்பதை எதிர்ப்பார்த்து, படைத்தரப்பும் தற்போது அளந்து அளந்துதான் தனது நகர்வுகளை மேற்கொள்கிறது என்பதையும் அவதானிக்க முடிகிறது.

புலிகளது தாக்குதல் தந்திரங்களை ஊகித்து, அதற்கேற்பவே படைத்தரப்பும் தனது வியூகங்களை வகுப்பதால், புலிகளால் எதிர்பாராத அதிர்ச்சிகள் பாரியளவில் கொடுக்க முடியாதுள்ளது.

அதுமட்டுல்ல, தெற்கில் தனக்கெதிரான அரசியல் நடவடிக்கைகள், மற்றும் நெருக்கடிகளின்போது, அரசாங்கம் கூறும் ஒரே வார்த்தை, "புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை சீர்குலைக்கப் பார்கிறார்கள்." என்பதுதான்.

சமீபத்திய மின்சாரசபையினரின் வேலை நிறுத்தத்தின் போதும் அந்த வாதம் முகம் காட்டியிருந்தது.

எனவே, புலிகளுக்கு எதிரான நடவடிக்கை விடயத்தில் யாழ்-குடாநாட்டில் பெற்றுள்ள வெற்றிகளை தக்கவைப்பதற்கு என்ன விலை கொடுக்கவும் அரசாங்கம் தயாராக இருக்கிறது.

புலிகளின் பலம் என்பது வடக்கை மையமாகக் கொண்டது என்று தெற்கில் கருதப்படுவதால், கிழக்கில் புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் விளைவுகள் பற்றி அரசு அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை.

வடக்கில் புலிகள் பலவீனமானதன் வெளிப்பாடாக, நாட்டின் ஏனைய பகுதிகளில் புலிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை சித்தரிப்பதில் அரசாங்கமும், அதன் பிரசார சாதனங்களும் ஓரளவு வெற்றி பெற்றுள்ளன.

இந்நிலையில், வடக்கே தமது பலத்தை வெளிப்படுத்தும் தேவை, தமது தளத்தை பாதுகாக்கும் தேவை என்ற இரண்டு தந்திரோபாயங்ளையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றவேண்டி நெருக்கடியில் இருந்த மீள்வதுதான் புலிகள் முன்னுள்ள பிரச்சனை.

இப்போதும் யாழ்-குடாநாட்டில் புலிகளின் கெரில்லா தாக்குதல்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

எனினும், அவை இராணுவ முக்கியத்துவம் கொண்டவையாக மாறவில்லை. காரணம், புலிகள் முன்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளோடு ஒப்பிடும்போது, தற்போதைய நடவடிக்கைகள் வீரியம் குறைந்தவையாக இருப்பதுதான்.

தாக்கவேண்டும், தமது இருப்பைக் காட்ட வேண்டும் என்பதற்காகவே புலிகள் தாக்குவது போலத்தான் இன்றைய யாழ்குடாநாட்டு கெரில்லா நடவடிக்கைகள் இருக்கின்றன.

ஆனால், இந்த நிலையை மாற்றுவதற்கு புலிகள் சகல முனைகளிலும் முயற்சி எடுப்பார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

அவ்வாறு முனையும்போது தமது சொல்லை மீறிச் சென்ற மக்களுக்கும் படிப்பினை கொடுக்க புலிகள் நினைப்பர்.

ஆனால், சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்ற மக்கள்மீது புலிகள் கோபிப்பதோ, பாலகுமார் எரிச்சல்படுவதோ நியாயமாகப்படவில்லை.

ஏனெனில், புலிகள் தாமாக செய்து கொடுத்த அடிப்படை வசதிகள் போதாது என்ற நிலையில் மேலும் வசதிகளை எதிர்பார்த்து மக்கள் செல்லவில்லை.

புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்தாலும் அரசாங்கத்தின் நிவாரணப் பொருட்களை நம்பித்தான் வாழவேண்டியிருக்கிறது.

எனவே, மக்கள் திரும்பிச் செல்லக் கூடாது என்ற தமது கோரிக்கையானது அடிப்படையிலேயே ஒரு முரண்பாட்டைக் கொண்டிருப்பதைப் புலிகள் புரிந்து கொள்ளவேண்டும்.

தம் ஊடாக மக்கள் அரசின் உதவிகளை பெறலாம், நேரடியாகப் பெறக் கூடாது என்று புலிகள் சொல்வது போலாகி விடுகிறது.

---

# அதிரடி அய்யாத்துரை



நிறைவேற்று அதிகாரம் ஓரிடத்தில், நிற்பாட்டும் அதிகாரம் வேறிடத்தில் எண்டு மின்சார சபைக்காரர் நிரூபிக்க நினைச்சிருப்பினமோ? நாடே நகரமாட்டேன் எண்டு நிண்டு போட்டுதல்லோ. மின்சார சபைக்காரர் தங்கள் நடவடிக்கைக்கு பெயர் வைக்க நினைச்சா என்ன பெயர் வைச்சிருப்பினம்? 'ஒப்பரேசன் சூனிய இருள்.' பொருத்தமான பெயர்தானே.

**ஆ**யுதம் ஏந்திப் போராடுவது என்றால் துவக்கு தூக்கிச் சுடுவது மட்டும்தானோ? குறடும், ஸ்பானரும் கைகளில் ஏந்தி பாட்ஸைக் கழற்றி, நட்டை ஒழித்துவைத்துக்கொண்ட போராட்டமும் ஆயுதப் போராட்டம் மாதிரித்தானே. அவையின் அசையாச் சொத்துக்களைப் பறிக்கிறதெண்டா முதலில் அந்த ஸ்பானர், குறடு எல்லாத்தையும் பறிக்கவேணும். அப்பதான் ஆயுதக் கைப்பற்றல் மாதிரியிருக்கும்.

**வ**டபுலத்தில் அங்கை ஆமி வந்திட்டுது. இங்கை ஆமி வந்திட்டுது. நீர்வேலிக்கு வந்திட்டுதாம். கோப்பாய் சந்தியிலை வந்திட்டுதாம் எண்டெல்லாம் தகவல்கள் அடிபடுவது வழக்கம். அந்த மாதிரி தெற்கிலும், மாளிகாவத்தையில் வந்திட்டுதாம். கொட்டகெனாவுக்கு வந்திட்டுதாம் எண்டு பரபரப்பாக தகவல் அடிபட்டது. எந்த இடத்துக்கு வந்திருக்குது, அடுத்து தங்கள் இடத்துக்கும் வருமோ எண்டு சனமும் அறிய ஆவல்பட்டுக் கொண்டிருந்தது. அதுதானுங்கோ தண்ணீரும், மின்சாரமும்! பகுதி பகுதியாத்தானே வரத்தொடங்கினது.

**த**ங்களுக்கும் இதுக்கும் ஒரு தொடர்புமில்லை எண்டு பச்சைக்கட்சி அறிவிச்சாலும், உள்ளூர ஒரு சந்தோசம் இருக்கத்தானே செய்திருக்கும். முழுப்பொறுப்பும் பச்சைக் கட்சிக்குத்தான், அவை பின்னால் நிண்டு வித்தையைக் காட்டுகினம் எண்டு அதிகாரத்தரப்பார் சொல்வதெண்டால், ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்ளவேணும், பதவியில் இல்லாவிட்டாலும் பவர் அவையிடமும் இருக்குதெண்டுதானே அர்த்தம்.

**கு**டாநாட்டில் யாவும் கட்டுப்பாட்டில் என்பது எதிலெல்லாம் பொருந்துமோ தெரியாது? விலைவாசி விஷயத்தில் பொருந்தவே பொந்தாது? தேங்காய் யானை விலை விக்குது. தேங்காய் எண்ணை இரண்டு யானை விலை விக்குது. விலைவாசியை கட்டுப்பாட்டில் கொண்டுவரவும் ஏதாவது ஒரு பெயரில் ஒப்பரேசன் செய்தால் என்ன? 'ஒப்பரேசன் இறக்கம்' எண்டு பெயர் வைத்தால் நல்லாயிருக்கும்.

**வ**ன்னியில் இருந்து தலைநகர் வருவதற்கு இடையில் எத்தனை பாடு தெரியுமோ? ஒரு இயக்கம் வருவதற்காக பணம் வாங்கிப்போட்டுத்தான் வவுனியாவையே மிதிக்க அனுமதிக்குதாம். மற்றொரு இயக்கமோ வவுனியாவை விட்டு திரும்பி உள்ளே போவதற்கு பணம் கேட்டதாம். உள்ளே, வெளியே, அனுமதி, பணவசம்.

**வே**லை நிறுத்த விவகாரத்தில் பேச்சு வார்த்தையும், இருட்டு நிறுத்தமும் ஏற்பட்டு வெளிச்சம் வரக்காரணம் யார் என்பதில் அதிகாரத்தரப்புக்குள் குட்டிப் போட்டி நடக்குதாம். வெகுஜனசபை பின்வரிசைக்காரர் 'நாம்தான் நல்ல முடிவு வரக் காரணம்' எண்டு சொல்லுகினம். குறிப்பிட்ட விடயத்துக்கு பொறுப்பானவரோ தனது அதிரடி ஆக்ஷன்தான் காரணம் என்கிறார். இரண்டு போக்கும்தான் காரணம் எண்டு போட்டியை சமரசமாக முடித்துவைக்கலாம். பேச்சும் மிரட்டலும்தான் வெளிச்சத்தைக் கொண்டு வந்தது என்பது தானே உண்மை.

**நெ**ருக்கடிகள் வரும்போது முன்பு அதிகாரமுள்ளவராக இருந்த 'அன்பு தாசரை'ப் பற்றி பேச்சு எழுவதை தவிர்க்க முடியாமல்தான் கிடக்கு. கெட்ட விதமாகவோ, நல்ல விதமாகவோ அவரைப்பற்றி பேசித்தான் ஆகவேண்டிக்கிடக்கு. அந்தளவுக்கு தடம் பதிச்சுப்போட்டுத்தான் போயிருக்கிறார் மனுஷன். ஆனால் ஒரு விஷயத்தை ஒப்புக் கொள்ள வேணும், முள்ளை முள்ளால் எடுக்கும் அவர்பாணியை கண்டிச்சாலும், அதே பாணியில்தான் கிட்டதட்ட சமீப விவகாரம் கையாளப்பட்டிருக்கிறது. ஏனென்றால் சில நேரங்களில் அடிக்கு அடிதான் மருந்து.

**ப**ல்வேறு மட்டங்களிலும் வேலை நிறுத்தங்களை நடத்தி தலையிடி கொடுக்கும் திரைமறைவு முயற்சிகள் நடந்து கொண்டிருக்குதாம். அதிகார தரப்புக்குள் உள்ள ஒரு தனி அணியும் பிள்ளையை மெல்லக் கிள்ளிவிடும் வேலையைச் செய்துவருகுதாம். மேலிடத்துக்கும் அது சாடைமாடையாய் தெரியாமல் இல்லை.

**அ**ருமையான ஆங்கிலப் பழமொழி ஒன்று.

**"பத்துமுறை**
**வெற்றி**
**பெறுவதைக்காட்டிலும்**
**ஒரே ஒரு முறை**
**சமாதானம் காண்பது**
**மேலானது!"**



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன்- எழுதுவது

81

# கந்தன் கருணைப் படுகொலைகள்

### பிரபா தப்பினார்

கைதடியில் புலிகள் அமைப்பினரின் வெடிமருந்து பவுசர் வெடித்த சம்பவம் தொடர்பாக கடந்தவாரம் விபரித்திருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு ஒருசக பத்திரிகையாளர் மேலும் சில அனுபவங்களைச் சொன்னார். அப்போது அவர் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தவர். அவர் கூறியதில் இருந்து:

"பவுசர் வெடிப்பதற்கு 10 நிமிடங்கள் முன்னர்தான் அங்கிருந்து பிரபாகரன் சென்றார். தாக்குதல் ஏற்பாடுகளை கவனிப்பதற்காக வந்த பிரபாகரன் பவுசரையும் பார்வையிட்டார்.

எல்லாம் சரியாக இருக்கிறது. குறித்த நேரத்தில் புறப்படவேண்டியதுதான் என்று பொன்னம்மான் கூறினார். அதன் பின்னர்தான் பிரபாகரன் புறப்பட்டுச் சென்றார்.

கிட்டு மோட்டார் சைக்கிளில் முன்னால் செல்ல, அவருக்கு பின்னால் கார் ஒன்றில் தனது பாதுகாவலர்களுடன் பிரபாகரன் சென்றார்.

பத்து நிமிட வித்தியாசத்தால் அன்று உயிர் தப்பினார் பிரபாகரன்.

பவுசர் வெடித்த சம்பவத்தில் பொது மக்கள் உயிரிழந்ததை தெரியப்படுத்த புலிகள் விரும்பவில்லை.

புலிகள் இயக்க உறுப்பினரான காக்கா என்பவர் யாழ்ப்பாணத்தில் இருந்த பத்திரிகை அலுவலகங்களுக்கு நேரடியாகச் சென்று, கைதடி சம்பவம் தொடர்பாக தாம் தெரிவிக்கும் செய்திகளைத் தவிர, வேறு எதனையும் வெளியிடக்கூடாது என்று சொல்லிவிட்டார்.

50க்கு மேற்பட்ட பொதுமக்கள் பலியாகி இருந்தனர். எங்கும் சதைத்துண்டங்கள் சிதறிக்காணப்பட்டன.

கடை ஒன்றுக்குள் குழந்தை ஒன்று நசுங்கிக்கிடந்தது. கடைக்கு பொருட்கள் வாங்க வந்த தாயாருடன் வந்திருக்க வேண்டும். தாயின் உடலைக் காணமுடியவில்லை.

பல கல்வீடுகளின் அத்திவாரம் மட்டுமே மிஞ்சியிருந்தது. கிட்டத்தட்ட இரண்டுமைல் சுற்றளவுப் பிரதேசம் பாதிக்கப்பட்டிருந்தது.

அத்தனை சம்பவங்கள் நடந்தும் மறுநாள் வெளியான யாழ்ப்பாண பத்திரிகைகளில் அது தொடர்பாக ஒருவரிகூட காணப்படவில்லை.

### அஞ்சலிக்கூட்டம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகே லெப்டினன்ட் கேணல் பொன்னம்மானின் படத்தை வைத்து புலிகள் அஞ்சலி செய்தனர்.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் 10 பேருடன், வெடிமருந்து பவுசரை தயார் படுத்திய பொறியியலாளர் ரஞ்சனும் வெடிவிபத்தில் பலியாகியிருந்தார்.

ரஞ்சன் பொன்னம்மானுக்கு உறவினர். வெளிநாட்டில் வேலை செய்தவர் ரஞ்சன். அடிக்கடி விடுமுறை எடுத்துக் கொண்டுவந்து புலிகளுக்கு தேவையான உதவிகளைச் செய்துவிட்டுச் செல்வார்.

புலிகளுக்கு விமானம் ஒன்றை தயாரிக்கும் எண்ணம் வந்திருந்தது. அதனால் ரஞ்சனின் உதவியைக் கோரினார்கள். அவரும் வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார்.

தண்ணீர் பவுசரை இரண்டு பகுதியாகப் பிரித்து மேலே தண்ணீரும், கீழே வெடி மருந்தும் நிரப்பும் திட்டம் என்பதால், ரஞ்சனை பவுசர் தயாரிப்பிலும் ஈடுபடுத்தினார் பொன்னம்மான்.

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் தமது உறுப்பினர்களின் மறைவுக்காக அஞ்சலிக் கூட்டம் ஒன்றை புலிகள் நடத்தினார்கள்.

அக் கூட்டத்தின் மூலம்தான் புலிகள் தரப்பில் 10 பேர் வெடிவிபத்தில் பலியான செய்தியை பொதுமக்களும் அறிந்து கொண்டனர்.

அந்த அஞ்சலிக்கூட்டத்திலும் வெடிவிபத்தில் பலியான பொதுமக்கள் தொடர்பாக புலிகள் மௌனம் சாதித்தனர்.

அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றியவர்களில் ஒருவர் யோகி என்றழைக்கப்படும் யோகரத்தினம் யோகி.

யோகி பொன்னம்மானின் உடன்பிறந்த சகோதரர். பொலிஸ் வேலையில் சேருவதற்கு முயன்று, அது கைகூடாததால் இலண்டனுக்கு சென்றிருந்தவர்.

பின்னர் புலிகள் அமைப்புடன் இணையத் தீர்மானித்து இந்தியா வந்து சேர்ந்தார். யாழ்ப்பாணம் வந்ததும் அவர் பங்கு கொண்ட



மாத்தையா

பகிரங்க நிகழ்ச்சி அஞ்சலிக் கூட்டம்தான்.

கூட்டத்தில் யோகி உரையாற்றிய லாவகத்தைப் பார்த்துவிட்டு, அவரை அரசியல் பிரசார வேலைகளில் பயன்படுத்தலாம் என்று பிரபாகரன் முடிவு செய்துவிட்டார்.

கைதடியில் பவுசர் வெடித்து நாவற்குழி இராணுவ முகாம் தாக்குதல் தோல்வியில் முடிந்தமையால் கிட்டுவே தொடர்ந்தும் யாழ்ப்பாண மாவட்ட தளபதியாக இருந்தார்.

பொன்னம்மான் பலியாகாமல் இருந்திருந்தால் கிட்டு மன்னார் மாவட்ட தளபதியாகவும், பொன்னம்மான் யாழ் மாவட்ட தளபதியாகவும் இருந்திருப்பார்கள்.

உண்மையில் பொன்னம்மான் கிட்டுவைவிட இயக்கத்தில் சீனியர். எனவே-அவரை யாழ் மாவட்டத் தளபதியாக நியமிப்பதை யாரும் குறை சொல்லியிருக்க முடியாது." இவைதான் அந்தப் பத்திரிகையாளர் சொன்னது.

### ஷெல்மழை

1987 மார்ச் மாதம் 7ம் திகதி யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து யாழ்ப்பாண நகரை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன.

ஏவப்பட்ட ஷெல்கள் சில யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டர் அருகில் வந்து விழுந்து வெடித்தன.

# கிட்டுவுக்கு வீசிய குண்டு

17 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 50 பேர் காயமடைந்தனர்.

மற்றொரு ஷெல் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனை மீதும் விழுந்தது. நல்ல வேளையாக யாரும் உயிரிழக்கவில்லை. முதல் முறையாக மருத்துவமனைமீது விழுந்த ஷெல் அதுதான்.

ஷெல் ஏவப்படும் தூரம் அதிகமாகிக் கொண்டே வந்தமையால், யாழ்ப்பாணத்தில் மக்கள் நடமாடவே அஞ்சினார்கள். வீடுகளில் இருப்பதுகூட எந்த நேரம் கூரையில் வந்து ஷெல் விழுமோ என்ற பயத்தோடுதான்.

### கிட்டுவுக்கு குறி

கிட்டு யாழ் தளபதியாக தொடர்ந்து இருந்தமையால் மாத்தையா அணியினர் கிட்டுவை தீர்த்துக்கட்ட திட்டம் தீட்டினார்கள்.

கிட்டுவின் நடமாட்டங்கள் மாத்தையா குழுவினரால் கண்காணிக்கப்பட்டு வந்தன.

கிட்டுவை அவரது மெய்ப்பாது காவலர்களுடன் இருக்கும்போது நெருங்குவது கடினம். மோதல் ஏற்படக்கூடிய வாய்ப்பே கொடுக்காமல் தீர்த்துக்கட்டுவதுதான் முக்கியம் என்று மாத்தையா திட்டமிட்டார்.

தனக்கு விசுவாசமான, நம்பிக்கையான ஆள் ஒருவரை கிட்டுவை தீர்த்துக் கட்டுவதற்காக தெரிவு செய்தார் மாத்தையா.

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் கிட்டுவின் காதலியின் வீடு இருந்தது. அவரது பெயர் சிந்தியா. யாழ் பல்கலைக்கழக மாணவியாக இருந்தவர். (பின்னர் அவருக்கும் கிட்டுவுக்கும் திருமணம் நடந்தது)

இரண்டாம் குறுக்குத்தெரு வீட்டுக்கு கிட்டு சென்று வருவதை மாத்தையா குழுவினரும் அறிந்துகொண்டனர்.



கிட்டு

கிட்டுவை தீர்த்துக்கட்ட அதுதான் சரியான இடம் என்று முடிவு செய்துவிட்டார் மாத்தையா.

கிட்டுவை தீர்த்துக் கட்டும் நாளும் குறிக்கப்பட்டது. அது மார்ச் 29ம் திகதி இரவு.

### அசைந்த உருவம்

கிட்டு காரை விட்டு இறங்குவதற்கு முன்னர் கைக்குண்டை காருக்குள் போட்டு விடவேண்டும் என்பதுதான் திட்டம்.

மார்ச் 29ம் திகதி மாலையில் இருந்தே மாத்தையாவின் ஆள் கைக்குண்டுடன் இரண்டாம் குறுக்குத் தெருவில் காத்திருக்கத் தொடங்கினார்.

ஒரே ஒரு மெய்ப்பாதுகாவலருடன் கிட்டு முகாமிலிருந்து புறப்பட்டார்.

இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள சிந்தியாவின் வீட்டருகே இருந்த மின்சார கம்பத்தில் இருந்த மின்குமிழ் அன்று எரியவில்லை.

வீட்டின் எதிரே காரை நிறுத்தி விட்டு கிட்டு இறங்க முற்பட்டபோது, பக்கவாட்டில் இருளில் ஒரு உருவம் அசைவதை கண்டுவிட்டார்.

எதோ விபரீதம்தான் என்று அவரது உள்ளுணர்வு எச்சரிக்க, அந்த உருவம் காரை நெருங்கி கைக்குண்டை உள்ளே போட்டு விட்டது.



அருணா

விழுந்தது 'கிரனேட்'தான் என்று தெரிந்து, காரைவிட்டு குதிப்பதற்கு கதவைத் திறப்பதற்கு இடையில், 'கிரனேட்' வெடித்தது.

கிட்டுவின் அருகில் இருந்த மன்னாரைச் சேர்ந்த மெய்ப்பாது காவலர் பலியானார்.

கிட்டுவுக்கு உயிர் இருந்தது. வெளியே இறங்க முயன்றார். கால் ஒன்று காரின் -ஸ்ட்ரியரிங்'கிற்குள் சிக்குப்பட்டிருந்தது. இழுத்தெடுத்தார்.

முழங்காலுக்கு கீழே கால் துண்டாகியிருந்தது.

அப்படியே காரில் இருந்து கீழே விழுந்த நேரத்திலும், மீண்டும் தான் தாக்கப்படலாம் என்ற உள்ளுணர்வால் தனது ரிவோல்வரை எடுத்து இருளை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தார் கிட்டு.

இரத்தம் வெளியேறிக்கொண்டிருக்க நினைவு மங்குகிறது. மீண்டும் அவன் வருவான் என்ற உள்மன எச்சரிக்கை நினைவு மங்காமல் இழுத்து பிடித்து வைத்திருக்கிறது.

முழங்காலுடன் துண்டாகிப்போன காலுக்கு தனது ஜீன்ஸைக் கிழித்து கட்டுப் போட்டுக் கொண்டார்.

எப்படித்தான் வைராக்கியமாக இருந்தாலும் உடல் ஒத்துழைக்க வேண்டுமே. மயக்கம் மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

மயக்கமாகும் கடைசி நொடியில் ரிவோல்வரில் சுடப்பட்ட ரவைகளுக்குப் பதிலாக புதிய ரவைகளை மாற்றிப் போட்டுவிட்டு, அந்த ரிவோல்வரை இறுகப் பற்றியபடியே மயங்கிப் போனார் கிட்டு.

அதற்குள் புலிகள் இயக்கத்தினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்து சேர்ந்து விட்டனர்.

மயங்கிய நிலையில் கிட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

உடனடியாக சத்திரசிகிச்சை செய்யப்பட்டதால் கிட்டு உயிர் பிழைத்தார்.

மருத்துவர்களால் கிட்டுவின் உயிரைக் காப்பாற்ற முடிந்ததே தவிர, அவரது காலை காப்பாற்ற முடியவில்லை.

### பழி வேறிடத்தில்

இதற்கிடையே கிட்டுவின் உயிருக்கு உலைவைக்க முயன்றவர்கள் ஏனைய இயக்கத்தை சேர்ந்தவர்கள்தான் என்று கிட்டுவின் விசுவாசிகள் நம்பினார்கள்.

தம்மால் தடைசெய்யப்பட்ட ரேலோ, அல்லது ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கங்களில் ஒன்றுதான் கிட்டு கொலை முயற்சிக்கு காரணம் என்று புலிகள் நிலனத்து விட்டனர்.

தமது பிரதித் தலைவர் மாத்தையாதான் கொலை முயற்சிக்கு சூத்திரதாரி என்பதை அவர்கள் எப்படி அறிவார்கள்.

முன்னர் பிடித்துவைத்திருந்து பின்னர் விடுவிக்கப்பட்ட ஏனைய இயக்க உறுப்பினர்கள் மீண்டும் பிடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டார்கள்.

"கிட்டண்ணாவுக்கு யாரடா குண்டு வீசியது?" என்று கேட்டுக் கேட்டு ஏனைய இயக்க உறுப்பினர்களை அடித்து நொறுக்கினார்கள் புலிகள்.

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கங்களை தடை செய்தபோது புலிகளால் பிடிக்கப்பட்டவர்களில் முக்கியமானவர்கள் என்று கருதப்பட்டவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர்.

நல்லூரில் 'கந்தன் கருணை' என்னும் பெயருடைய மாடிவீடும் சித்திரவதைக் கூடமாக பயன்படுத்தப்பட்டது. அதேபோல நல்லூர் பிரவுண் றோட்டிலும் ஒரு மாடி வீடு இருந்தது. யாழ்-இந்துக்கல்லூரிக்கு அருகிலும் மற்றொரு சிறைக்கூடத்தைப் புலிகள் வைத்திருந்தனர்.

படையினருடன் நடைபெற்ற கைதிகள் பரிமாற்றத்தில் விடுதலையான அருணாவுக்கு கிட்டு தாக்கப்பட்டது கோபத்தை ஏற்படுத்தியது.

ஒரு எஸ்.எம்.ஜி. துப்பாக்கியோடு நல்லூரில் உள்ள கந்தன் கருணை முகாமுக்குச் சென்றார் அருணா.

அங்கு அறைகளில் வைத்து பூட்டப்பட்டிருந்தனர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள்.

அறைகளை திறக்குமாறு அங்கு காவலுக்கு நின்ற உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டார் அருணா.

அறைகள் திறக்கப்பட்டன.

அடுத்த நொடியே எஸ்.எம்.ஜி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுத்தள்ளினார் அருணா.

சிறைக்கூடம் கொலைக்களமானது. இரத்தம் வெள்ளமாய் பாய்ந்தது.

மற்றொரு அறைக்குள் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களுக்கு துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், மரண ஓலங்களும் தெளிவாகக் கேட்டன.

தாமும் கொல்லப்படப்போகிறோம் என்று தெரிந்துவிட்டது.

வேறு வழியில்லை. கரணம் தப்பினால் மரணம்தான். எப்படியாவது தப்பிச்செல்வது என்று முடிவு செய்தனர். அவர்களது அறைக்கதவும் திறக்கப்பட்டது. புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் துப்பாக்கியோடு நின்றனர்.

அவர்கள்மீது பாய்ந்தனர் கைதிகள். அவர்களிடமிருந்த துப்பாக்கியைப் பறித்து அவர்கள்மீதே திருப்பிச் சுட்டனர்.

இருவரும் வீழ்த்தப்பட்டதும் அந்த அறையில் இருந்த கைதிகள் தப்பிச் சென்றனர்.

இல்லாவிட்டால் அவர்களும் அன்று சுட்டுக்கொல்லப்பட்டிருப்பர்.


### கந்தன் கருணை படுகொலை

கைதிகளில் 70 பேர்வரை கொல்லப்பட்டதாக புலிகளின் சிறையில் இருந்து தப்பியவர்களில் ஒருவர் தகவல் கூறினார்.

'கந்தன் கருணைப் படுகொலைகள். என்று அந்தச் சம்பவம் அழைக்கப்படுகிறது.

வெலிக்கடைப் படுகொலைகளைவிட மோசமானது கந்தன் கருணைப் படுகொலைகள் என்று ஏனைய இயக்கங்கள் விமர்சனம் செய்தன.

கந்தன் கருணைப் படுகொலைகளின் போது கொல்லப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களில் மிக முக்கியமானவர்கள் இரண்டுபேரும் அடங்குவர்.



ஒருவர் பெஞ்சமின், மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தின் முன்னணிப் போராளிகளில் ஒருவர். மருத்துவ மாணவன். ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க மருத்துவப் பிரிவின் பொறுப்பாளராக இருந்தவர்.

இன்னொருவர் ஈஸ்வரன். யாழ் மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப் பிரிவின் தாக்குதல் பிரிவு தலைவர்களில் ஒருவர். யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைச் சேர்ந்தவர்.

ஈஸ்வரனின் உயிரற்ற உடலை மேல் மாடியிலிருந்து தூக்கி கீழே எறிந்தனர் புலிகள் இயக்க உறுப்பினர்கள்.

### புலிகள் அறிக்கை

கிட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் மாத்தையா யாழ்ப்பாணத்திலும் தனது ஆளுமையை செலுத்தத் தொடங்கினார்.

கிட்டுமீதான கொலை முயற்சி தொடர்பாக, 'தேசத்துரோகிகளின் சதி' என்று பிரசாரம் செய்யப்பட்டதால் மாத்தையாமீது பெரிதாக சந்தேகம் வரவில்லை.

கந்தன் கருணைப் படுகொலைகள் தொடர்பாக முதலில் மௌனமாக இருந்தனர் புலிகள்.

பின்னர் செய்திகள் ஓரளவு மக்கள் மத்தியில் தெரியத் தொடங்கியதால், ஏப்பரல் 6ம் திகதி புலிகள் ஒரு அறிக்கை வெளியிட்டனர்.

"விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்த கைதிகள், அவர்களுக்கு காவலுக்காக நின்றவர்களின் துப்பாக்கிகளை பறித்துக்கொண்டு தப்பிச் செல்ல முற்பட்டனர். அப்போது நடைபெற்ற மோதலில் 18 கைதிகளும், புலிகள் இயக்க உறுப்பினர்கள் இரண்டு பேரும் பலியானார்கள்" என்று தெரிவித்தனர் புலிகள். (தொடர்ந்துவரும்)



படிப்பகம

www.padippakam.com

# மின்சார அஸ்தமனம்

## அலசுவது–இராஜதந்திரி

# இக்கரைக்கு அக்கரை பச்சை

இலங்கை முழுவதுமே இருளாகி, ஒளியிழந்து நாட்டு மக்கள் அனைவருமே பலத்த சிரமங்களை எதிர்நோக்கும் நிலை கடந்த வாரத்தில் தோன்றியிருந்தது.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கம் பதவிக்கு வந்த ஒன்றரை வருடகாலப்பகுதியில் முழு நாட்டையுமே ஸ்தம்பிக்கச் செய்யும் ஒரு பெரும் அச்சுறுத்தலாகவே மின்சாரசேவைப் பகுதியினரின் வேலை நிறுத்தம் விளங்கியிருந்தது.

உலகில் இன்று பல்வேறு நாடுகளிலும் அனல், அணுசக்தி, சூரியசக்தி என்பவை மூலமாகவே மின்சக்தி பெறப்படுகின்றது.

நீர் மின்சக்தியே உலகில் அநேக நாடுகளில் காணப்படுகின்ற போதிலும் அந்நாடுகளில் மின்சாரவெட்டுக்களோ அல்லது முழுமையான மின் விநியோக ஸ்தம்பிதமோ தொடர்ச்சியாக ஏற்பட்டதாக இல்லை.

இயற்கை அழிவு, யுத்த நிலவரம் ஆகியன காரணமாகவே மின்சார விநியோகங்கள் ஸ்தம்பிப்பது வழமையாகும். இலங்கையில்கூட வடபகுதியில் கடந்த ஆறுவருடங்களாக யுத்தநிலை காரணமாக மின்விநியோகம் அறவே இல்லாதிருக்கின்றது.

இருந்தபோதிலும் அப்பகுதி மக்களின் வாழ்க்கையில் பாரியளவிலான சிக்கல்களை மின்விநியோகத்தடை ஏற்படுத்தவில்லை.

ஏனெனில் வடபகுதி பெரும்பாலும் விவசாய நடவடிக்கையையே முக்கியமாகக் கொண்ட ஒரு பிரதேசமாகும். அங்கு பாரியகைத்தொழில் நடவடிக்கைகளோ அல்லது அரசு தனியார் நிறுவனங்கள் விரிவாக இயங்கவோ இல்லை.

ஆனால் தலைநகரில் நிலைமை வேறு; இங்கு அனைத்து முக்கிய பணிகளும் 'குவிமைய'ப்படுத்தப்பட்டுள்ளன.

கைத்தொழிலகங்கள், அமைச்சுக்கள், உள்ளூர், வெளியூர் நிறுவனங்கள், வைத்தியசாலைகள், தொழிற்சாலைகள், என்பன தலைநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இயங்குகின்றன.

இதனால் முழு அளவிலான மின்விநியோக ஸ்தம்பிதம் என்பது மின்சார உபயோகம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளையும் முடக்கிவிட்டிருந்தது.

தலைநகரில் நீர்விநியோகங்களை மேற்கொள்ளும் நிலையங்களில் கூட விநியோக இயந்திரங்கள் மின்வெட்டுக் காரணமாக இயங்க முடியாதிருந்தது.

இதனால் மின்விநியோகம் ஸ்தம்பிதமானதால் நீர்விநியோகமும் தடைப்பட்டது.

எனவே கொழும்பு மாநகர் நாற்றமெடுத்து தண்ணீர், தண்ணீர் என்று ஓலமிடும் நிலையே கடந்த வாரம் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த ஆறுவருடங்களுக்கும் மேலாக வடக்கே மின்சாரமில்லாத போதிலும் அப்பிரதேசமக்கள் தமது வாழ்க்கையை சுமுகமாகக் கொண்டுநடத்தியமைக்கு அப்பகுதியிலிருந்த வற்றாத நீர்வளமே முக்கிய காரணமாக விளங்கியிருந்தது.

அங்குள்ள கிணறுகளில் இருந்து கிடைக்கும் நீர் எப்போதும் எத்தகைய கொடிய வரட்சியிலும் வற்றிப்போகாததாகவே இருக்கின்றது.

இதன் காரணமாகவே ஆறுவருடகால மின்வெட்டையும் வெற்றிகரமாக வடபகுதி மக்கள் சமாளித்ததுடன், தமது நாளாந்த நடவடிக்கைகளையும் சுமுகமாகக் கொண்டுசென்றனர்.

ஆனால் தென்னிலங்கையில், குறிப்பாக கொழும்புத் தலைநகரவாசிகள் மின்சாரமும், நீருமின்றி பட்ட கஷ்டங்கள் எண்ணிலடங்காதவை.

இத்தகையதொரு பாரதூரமான சூழ்நிலையிலேயே, யாழ்குடாநாட்டின் அருமை பெருமை அப்பிரதேச மக்களின் மனஉறுதி அங்குள்ள நீர்வளம் என்பவை பற்றி தென்னிலங்கையர்கள் பேசிக் கொண்டதையும் கேட்கமுடிந்தது.

இதன்மூலம் 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்பதைக்கூட புரிந்து கொள்ளமுடிந்தது.

தென்னிலங்கையையும், தலைநகரையும் பொறுத்தவரை எல்.ரி.ரி.ஈ.யினர் நடத்திய தாக்குதல்களே மோசமானவையாகவும்,

## வடக்கு–கிழக்கின் அரசியல் போராட்டக்காரர்கள், பொல்லாத சமூக விரோதிகளல்ல!

அவர்களே பெரும் நாசகாரச் சக்தியாகவும் கருதப்பட்டும் நிலை இருந்தது.

ஆனால் எல்.ரி.ரி.ஈ.யினரைவிட ஈவிரக்கமற்ற மனித நேயமற்ற விஷமச்சக்திகள் தென்னிலங்கையில் இருக்கின்றனர் என்பதற்கு மின்சாரசேவைப் பகுதியினரது கடந்த வாரவேலை நிறுத்தமும், அதனால் ஏற்பட்ட பக்கவிளைவுகளும் நல்ல உதாரணங்களாக இருந்தன.

இரத்த தானங்கள் மூலம் சேமிக்கப்பட்ட பெருந்தொகை இரத்தம்கூட கொழும்புப் பிரதேச வைத்தியசாலைகளிலிருந்து கழிவாக அப்புறப்படுத்தப்பட்டிருந்தது.

பலநூறு சடலங்கள் வைத்தியசாலைகளில் சவச்சாலைகளிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சுகாதாரக் காரணங்களின் பொருட்டு அழிக்கப்பட்டன.

சிறுவர்கள் உட்பட ஆபத்தான நிலையிலிருந்த நோயாளிகள் பலர் மின்சாரம் மூலமாகக் கிடைக்கக்கூடிய வைத்திய சிகிச்சைகள் இன்றி உயிரிழந்தனர்.

தலைநகரிலும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் மட்டுமல்ல; நாடுபூராவுமே வைத்தியசாலைகளில் சிகிச்சைகள் ஸ்தம்பிதமாகியதுடன், நீர் விநியோகங்களும் தடைப்பட்டு நரகலோகக் காட்சிகள் வெளிப்பட்டிருந்தன.

அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தயின் பொறுப்பிலேயே எரிபொருள், மின்சக்தி, மற்றும் பாதுகாப்பமைச்சுக்கள் இருக்கின்றன.

ஆயினும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல் தமது பொறுப்பிலிருந்த மூன்று அமைச்சுக்களில் பாதுகாப்பமைச்சில் மட்டுமே அமைச்சர் ரத்வத்த அதிக கவனஞ் செலுத்தியிருந்தார்.

இந்நிலையில் மின்சக்தி தொடர்பாக எழக்கூடிய சர்ச்சைகள், குளறுபடிகள் என்பன பெரிதும் புறக்கணிக்கப்பட்டே வந்தன.

நீர்மின்வலு மட்டம் குறைவடைந்து வந்தபோது அதற்கான மாற்று நடவடிக்கைகள் நத்தை வேகத்திலேயே இடம்பெற்றுவந்தன.

எல்.ரி.ரி.ஈ.யினரையே இந்த நாட்டின் பிரதான பகைவர்களாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வெளிக்காட்டி, அதன்மூலம் கிடைத்த அனுதாபங்கள் மூலம் கடன்கள் நிதி உதவிகளை சந்திரிகா அரசு பெற்றுவந்தது.

ஆனால் இந்த நாட்டில் வடக்கு-கிழக்குப் பிரச்சனை மட்டும்தான் பெரும்பிரச்சனையல்ல; வேறு துறைகளிலும் பூதாகாரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பெரும் பிரச்சினைகள் உண்டு என்பதனையே மின்சாரப் பகுதியினரது வேலை நிறுத்தம் புலப்படுத்தியுள்ளது.

சீனா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அண்மைக் காலங்களில் ஜனாதிபதி தமது உயர் மட்ட அமைச்சர்கள், அதிகாரிகளுடன் பயணங்களை மேற்கொண்டார்.

அந்நாட்டின் முதலீட்டாளர்கள், தொழிலதிபர்களிடம் இலங்கையிலுள்ள முதலீட்டு வாய்ப்புகள் பற்றி ஜனாதிபதி எடுத்துரைத்தார். அத்துடன் முதலீடுகளை மேற்கொண்டு தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

எல்.ரி.ரி.ஈ.யினரால் வரக்கூடிய அச்சுறுத்தல்களை அரசு வெற்றிகரமாகக் கையாண்டுள்ளது. வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசியல் தீர்வு யோசனைகளையும் அரசு முன்வைத்துள்ளது எனவும் ஜனாதிபதி தமது வெளிநாட்டு சஞ்சாரத்தின் போது குறிப்பிட்டிருந்தார்.

இருந்தபோதிலும் உலகை இன்று இயக்கும் சக்திகளில் மின்சாரமே முதன்மையானதாகும். வீடுகளில் எரியும் மின்குமிழ் முதற்கொண்டு இராட்சத ஆலைகள்வரை மின்சாரமே அனைத்துக்கும் அடிநாதமாக இருக்கின்றது.

ஆனால் இலங்கையில் இந்த மின்சக்தியை உற்பத்தி செய்யும் மூலகாரணிகள் பலவீனமாகவே உள்ளன. இயற்கையாகக் கிடைக்கும் மழைவீழ்ச்சி பொய்த்துள்ளது. இதனால் நீர் மின்வலுவை உற்பத்திசெய்யும் தேக்கங்கள் வரண்டு போயுள்ளன.

இதுதவிர மின்சாரப்பகுதியினரும் 'எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம்' என்பதுபோல மின்தட்டுப்பாட்டினால் நாடு நெருக்கடியை எதிர்நோக்கியிருந்த தருணத்திலேயே தமது கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தத்திலும் குதித்தனர்.

எனவே வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தொழிலதிபர்களும் தமது பணிகளை இலங்கையில் ஆரம்பிப்பதற்கு எல்.ரி.ரி.ஈ.யினரால் வரக்கூடிய அச்சுறுத்தல்களைவிட ஏனைய காரணிகளால் வரும் ஆபத்துக்கள் பாரதூரமானவை என்பதையும் மின்சாரப் பகுதியினரது வேலைநிறுத்த நடவடிக்கை வெளிக்காட்டியிருந்தது.



கடந்த வார வேலைநிறுத்தம் ஒரே மையத்தில் அதிகாரங்களையும், திட்டமிடல் நடவடிக்கைகளையும், குவித்துவைத்திருப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் தெளிவாக்கியிருந்தது.

இன, மத, பிரதேசவாதங்கள் புடைத்தெழுந்திருக்கும் இலங்கையில் சமூகவிரோத சக்திகளும் புரோயோடியிருப்பதையே வேலைநிறுத்த நடவடிக்கைகள் வெளிக்காட்டின.

இச்சமூக விரோத சக்திகளின் செயல்கள் முழுநாட்டிலுமே விஷக்காற்றை வீசி விடும் தன்மை வாய்ந்தவையாகவும் இருக்கின்றன.

எனவே அரசியல் ரீதியாக வடக்கு-கிழக்கு மாகாணங்கள் சுயாட்சியுடன் சமஷ்டி அமைப்பிலான ஒரு தீர்வையே கோரி நிற்கின்றன.

அடிப்படையில் இது ஓர் ஆரசியல் சார்ந்த கோரிக்கையாக இருக்கலாம். ஆனால் சற்று விரிவாக ஆராயும் பட்சத்தில் வடக்கு-கிழக்கு மக்கள் தமது பிரதேசம் சார்ந்த மூலவளங்கள் மற்றும் பிரதேசப் பயன்பாடுகளை தாமே நிர்ணயிப்பதாகவே அவர்களது அரசியல் கோரிக்கைகள் காணப்படுகின்றன.

சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கம் வடக்கு-கிழக்கில் இடம்பெறும்பட்சத்தில், இலங்கையின் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகச் சுமையும் குறைந்துவிடும்.

அத்துடன் அப்பிரதேசமக்கள் தமது நடவடிக்கைகளைத்தாமே கவனித்துக் கொள்ளும் சூழ்நிலைகளும் ஏற்படும்.

மின்சாரப்பகுதியினரது வேலை நிறுத்தத்தையடுத்து ஜனாதிபதி செயலகத்தில் பத்திரிகையாளர் மாநாடொன்றை ஜனாதிபதி கடந்தவாரம் நடத்தினார்.

இந்த மாநாட்டில் மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவையும் ஜனாதிபதி சந்திரிகா நினைவுபடுத்தினார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா போன்று பயமுறுத்தல்கள், மற்றும் அடிபிடி நடவடிக்கைகள் மூலம் நிர்வாகத்தை மேற்கொள்ளத் தாம் தயாராக இல்லை. ஜனநாயக வழியிலேயே அனைத்தையும் கையாள விரும்புவதாக ஜனாதிபதி கூறினார்.

அன்றைய ஜனாதிபதி பிரேமதாஸா பயமுறுத்தல்கள், அடிபிடிகளில் இறங்கியிருக்கலாம். ஆனால் அவற்றின் மூலம் அத்தியாவசிய சேவைகள் நேர்த்தியாக இடம்பெற்றிருந்தன.

அதனால், ஜனாதிபதி சந்திரிகாவும் அடிபிடி, பயமுறுத்தல்களில் இறங்கவேண்டும் என்பதல்ல.

ஆனாலும், தொழிற்சங்க வாதிகளையும் நாட்டின் அதாவது அரசாங்கத்தின் கொடுப்பனவுகள், சலுகைகளில் வாழ்கின்றவர்களை ஒரு வழிப்படுத்திக் கொண்டுவர ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் பயனற்றதாக இருக்கின்றது.

ஆனால் அரசியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் வடக்கு-கிழக்கு மக்களின் கோரிக்கைகள் விடயத்தில் மட்டும் இராணுவரீதியாக, ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் பூரணமாகப்பிரயோகிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நியாயமான அரசியல் கோரிக்கைகளை முன் வைப்பவர்களை மூர்க்கத்தனமாக அரசு நடத்துகிறது. ஆனால் அடாத்தான விஷமக் கோரிக்கைகளை முன்வைக்கும் சமூகவிரோதசக்திகள் மீது மட்டும் பலாத்காரம் பிரயோகிப்பதை அரசு தவிர்த்துள்ளது.

மின்சாரப்பகுதியினரது வேலை நிறுத்தம் மட்டுமல்ல; கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அரசாங்க வைத்தியர்களும் நாடுதழுவிய ரீதியில் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். இதனால் கூட பலத்த பாதிப்பு நாட்டு மக்களுக்கு ஏற்பட்டது.

வைத்தியர்கள் முன்வைத்த வேலைநிறுத்தத்துக்கான காரணம் கூட வலுவற்றதாகவே இருந்தது.

நாடளாவிய ரீதியில் பொது வேலை நிறுத்தங்கள் கூட வெடிக்கலாம் என்ற அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அரசுடன் உடனிருந்து நாட்டையே குட்டிச்சுவராக்கிவிடும் பொல்லாத சமூக விரோதிகளைப் போன்றவர்களல்ல, வடக்கு-கிழக்கின் அரசியல் உரிமைப் போராட்டக்காரர்கள் என்பதையும் உணர்த்துவதாகவே கடந்தவார 'மின்சார அஸ்தமனம்' விளங்கியிருந்தது.

# கவனமாக எடுத்துவைக்கும் காலடிகள்

தமிழகத்தின் புதிய முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி முதலமைச்சர் நாற்காலிக்கு புதியவரல்ல.

நான்காவது தடவையாக முதல்வர் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார் மு.க.




இம்முறை அவர் பெற்றிருப்பது தி.மு.க.வைப் பொறுத்தவரை வரலாறு காணாத வெற்றி.

அந்த வெற்றிக் களிப்பை விட, கிடைத்த வெற்றியை எப்படி கைநழுவாமல் பாதுகாப்பது என்பதுதான் கலைஞர் மு.கருணாநிதியின் முக்கிய கவலை.

ஜெயலலிதாவுக்கு விழுந்த மரண அடி கலைஞரை களிப்படையச் செய்வதற்குப் பதிலாக, தனது காலடிகளை கவனமாக எடுத்து வைக்க வேண்டும் என்ற எச்சரிக்கையைக் கொடுத்திருக்கிறது.

இரட்டை இலை என்றால் கண்களை மூடிக்கொண்டு புள்ளடி போடுபவர்கள் என்று கருதப்பட்ட பாமர மக்களும் அல்லவா அம்மாவுக்கு பாடம் புகட்டி இருக்கிறார்கள்.

1991 இல் நடைபெற்ற தேர்தலில் தி.மு.க.வுக்கு சட்டசபையில் கிடைத்தது இரண்டே இரண்டு தொகுதிகள் தான்.

கலைஞர் கருணாநிதிகூட தனது தொகுதியில் வெற்றிபெறுவதற்கு வில்லங்கப்பட்டார்.

அமோக வெற்றியோடு 1991இல் ஆட்சியைப் பிடித்த அம்மாவுக்கு, இந்தத் தடவை சொந்தத் தொகுதியில்கூட அந்தரம் நேர்ந்திருக்கிறது. எதிர்ப்பலையில் கப்பல் கவிழ்ந்து போனது.

இது ஒரு படிப்பினை. தேர்தல் முடிவு தமக்கும் ஒரு பாடம் என்று எதிர்காலத்தைக் கணக்குப் போடத் தெரிந்த கலைஞர் நன்கு அறிவார்.

அதனால்தான் ஜெயலலிதா செய்த தவறுகளை கலைஞர் திரும்பிப்பார்த்து தன் பாதையில் கவனமாக காலடி எடுத்து வைக்கிறார்.

அந்த வகையில் கலைஞர் கருணாநிதி ஜெயலலிதாவுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

எப்படி ஒரு ஆட்சி நடத்தக்கூடாது என்பதற்கு ஜெயலலிதா முன்னுதாரணம் கொடுத்துவிட்டுத்தான் விழுந்திருக்கிறார்.

'மீண்டும் எழுவேன்' என்று சூளுரைத்துள்ளார் ஜெயலலிதா. ஜெயலலிதா மீண்டும் எழவேண்டுமானால் கலைஞர் கருணாநிதி தவறு செய்ய வேண்டும்.

'அம்மாவே பரவாயில்லை' என்று மக்கள் நினைக்க வைக்கும் நிகழ்வுகள் தி.மு.க. ஆட்சியில் அரங்கேறினால் ஜெயலலிதாவுக்கு நாற்காலிச்சுகம் மீண்டும் கிடைக்கும்.

அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி அகில இந்தியாவையே ஆட்டிப்படைத்தவர் இந்திரா காந்தி.

தண்டனையாக அவருக்குத் தோல்வியைக் கொடுத்தனர் இந்திய மக்கள். மன்னிப்புக் கேட்டார் இந்திரா. மறுபடியும் அரியணை கொடுத்தனர் அதே மக்கள்.

ஜெயலலிதாவும் மன்னிக்கப்படலாம். தி.மு.க. மாபெரும் தவறுகளைச் செய்தால் மட்டும்!

அதனால்தான் கலைஞர் கருணாநிதி தனது காலடிகளை முதல் அடியில் இருந்தே கவனமாக எடுத்து வைக்கத் தொடங்கியிருக்கிறார்.

வளர்ப்புமகன் திருமணத்தால்தான் ஜெயலலிதாவின் புகழ் மகுடம் வீழ்ந்தது.

அதனால், தனது மகன் ஸ்டாலினுக்கு அமைச்சர் பதவியே கொடுக்கவில்லை கலைஞர்.

ஆனால், ஸ்டாலின் கட்சிக்குப்புதியவரல்ல. கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடம் கட்சியில் உறுப்பினராக இருப்பவர். அவசர காலநிலையில் சிறையில் அடிபட்டு நெடுநாள் வாடியவர்.

எனினும், குடும்ப ஆட்சி என்று முத்திரை விழுந்து விடுமோ, அதனால் முதற் கோணலே முற்றும் கோணலாகிவிடுமோ என்று பயந்திருக்கிறார் கலைஞர். அதனால் பதவி கொடுக்காமல் இருந்துவிட்டார்.

இன்னொரு விடயம், இது வரை பதவியில் இருந்த மூன்று முறையும் முழுப் பதவிக்காலத்தையும் அனுபவித்த வரலாறு கலைஞருக்கு கிடையாது.

இம் முறையாவது ஐந்தாண்டுகாலமும் ஆட்சியில் இருந்து விட வேண்டும் என்று அவர் தீர்மானித்து விட்டார்.

ஆகவே, கடந்தகாலத் தவறு களை இம்முறை கிட்டவும் நெருங்கவிடார்.

அதில், இலங்கைத் தமிழ் இயக்கங்களுக்கு அதிக இடம் கொடுக்கக்கூடாது என்ற முடிவும் அடங்கும்.

'வரம் கொடுத்தவன் தலையிலேயே கரம் வைக்கக்கூடியவர்கள் ஈழப் போராளிகள்' என்று எப்போதோ முடிவு செய்துவிட்டார் கலைஞர் என்று தெரிகிறது.

எப்படியோ, தமிழக மக்களது தீர்ப்பு வெற்றிக் களிப்பைவிட, இனிமேல் வெகு கவனமாக நடந்து கொள்ளவேண்டும் என்ற எச்சரிக்கை மணியை அரசியல்வாதிகள் மத்தியில் அடித்து விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# 13 உலகைக் கலக்கிய மனித வெடிகுண்டு

தருவது ரசிகன்

**சென்றவாரம்**

**கார்லோஸின் எச்சரிக்கையமீறி அவனது சகாக்கள் இருவருக்கும் ஃபிரான்ஸ் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்தது. கோபம் வந்தது கார்லோஸுக்கு. பெய்ரூட்டில் இருந்த ஃபிரான்ஸ் தூதரகத்தை கார்க் குண்டுவைத்து தகர்த்தான். 11 பேர் பலியானார்கள். 27 பேர் படுகாயம். இனி......**

கார்க் குண்டு வெடித்த செய்தியை தொலைக்காட்சி மூலம் பார்த்த கிறிஸ்டா, கார்லோஸை நெருங்கி, "உன் வேலை தானே?" என்றாள்.

கிளாஸில் பியர் நிரப்பிக்கொண்டிருந்த கார்லோஸ் நிதானமாக நிமிர்ந்து அவளைப் பார்த்து, "சகல இரகசியங்களும் சகலருக்கும் தெரியவேண்டியதில்லை. தாங்கள் சம்பந்தப்படாத விஷயங்களை அறிய ஆர்வம்காட்டவும் கூடாது. நமது இயக்க இரகசிய விதி அதுதான்!"

சற்றுக் கண்டிப்பான குரலில் அவன் சொன்னது போல அவளுக்குப்பட்டது. 'ஏன் கேட்டேன்' என்று நினைத்தாள். அவள் முகம்போன போக்கைப் பார்த்துவிட்டு கார்லோஸ் சின்னதாக வருந்தினான்.

"கிறிஸ்டா!" என்றான். அவன் அழைத்ததும் சட்டென்று உடைந்து அழத் தொடங்கிவிட்டாள் கிறிஸ்டா. கார்லோஸ் அதனை எதிர்பார்க்கவில்லை.

பியர் கிளாஸை வைத்துவிட்டு எழுந்து வந்தான். கிறிஸ்டா தனது வாயை இடது கையால் பொத்தியபடி விம்மிக்கொண்டிருந்தாள்.

"என்ன கிறிஸ்டா இது?" என்றபடி தலையைத்தடவினான். அவள் தொடர்ந்து விம்மினாள்.

ஆதரவாக முதுகைத் தடவினான். காதருகே "கிறிஸ்டா கோபமா?" என்றான். "கிறிஸ்டா என்னைப்பார்" என்றான். அவள் தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டாள். கைகளை விடுவித்து அவள் முகத்தைப் பார்க்க முயல, அவள் விசும்பிக்கொண்டே கார்லோஸின் மார்பில் சாய்ந்து முகத்தைப் புதைத்துக்கொண்டாள். தன்னோடு சேர்த்து இறுக அணைத்துக்கொண்டு அவள் உச்சந்தலையில் முத்தமிட்டான். தன் மார்பில் புதைந்து கிடந்த அவள் முகத்தை உயர்த்தி இதழ்களில் முத்தமிட்டான்.

முத்தமிட்டுவிட்டு, "சமாதானம் தானே?" என்றான். "நீ ஒரு முரடன்!" என்றாள் கண்ணீரை தன் விரல்களால் துடைத்துக் கொண்டு. "இனிய முரடன்," என்று சிரித்தபடியே அவள் கழுத்தில் உதடுகளைப் பதித்தான். அவள் அனுமதித்துக்கொண்டிருக்க, கழுத்தில் இருந்து மெல்ல மெல்ல கீழே இறங்கிக் கொண்டிருந்தான்.

கிறிஸ்டா இப்போது கோபத்தையும், சோகத்தையும் தூக்கி வீசிவிட்டு, அவன் தலை முடியைக் கோதிவிட்டாள். கார்லோஸ் முகம் கவிழ்ந்த இடத்தில் இருந்து விலகிவிடாதிருக்க அவன் தலையை அமுத்திவைத்திருந்தாள் கிறிஸ்டா. இப்போது அவளுக்கு கார்லோஸ் முரடனாக இருப்பதுதான் தேவையாக இருந்தது; பிடித்தமாக இருந்தது.

ரிவேரா கடுகதி ரயில் வண்டியை தகர்க்கப்போவதாக கார்லோஸ் எச்சரித்த பின்னர் ஃபிரான்ஸ் அரசு கடும் பாதுகாப்பு வழங்கியிருந்தது.



பெய்ரூட்டில் ஃபிரான்ஸ் தூதரகம் கார்லோஸால் குண்டுவைத்து தகர்க்கப்பட்டபின்னர், கடுகதி ரயில் வண்டித் தகர்ப்பு எச்சரிக்கை வெறும் மிரட்டல் என்று கருதப்பட்டது.

கவனத்தை திசைதிருப்பிவிட்டு கார்லோஸ் வேறு நாட்டில் உள்ள தமது தூதரகத்தை தகர்த்துவிட்டான் என்றே ஃபிரான்ஸ் அரசு நினைத்தது.

ரிவேரா கடுகதி ரயிலுக்கு பாதுகாப்பு குறைக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது, கார்லோஸும், கிறிஸ்டாவும் ரூமேனியா நாட்டில் இருந்தார்கள்.

ரூமேனியாவில் கார்லோஸின் பாதுகாப்பு இல்லத்தில்வைத்து சூட்கேஸ் குண்டு தயாரிக்கப்பட்டது. இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டு போன்ற போலிக் கடவுச்சீட்டு ஒன்றை கிறிஸ்டாவிடம் கொடுத்தான் கார்லோஸ்.

"எங்கும் உன்னை சோதனையிட மாட்டார்கள். இந்தக் கடவுச்சீட்டு கடவுள் மாதிரி. உன்னை நெருங்கவோ தொந்தரவு செய்யவோ எந்தக் கொம்பனுக்கும் தைரியம் வராது." என்றான் கார்லோஸ்.

"ரூமேனியாவிலுள்ள புச்சாரெஸ்ட் விமானநிலையத்தில் இருந்து ரோம் நகர் செல்லவேண்டும். பின்னர் அங்கிருந்து தரைவழியாக ஃபிரான்ஸ்சுக்குள் புக வேண்டும். ரிவேரா கடுகதி ரயில் பெட்டியில் சூட்கேஸை பத்திரமாக வைத்துவிட்டு நல்ல பிள்ளையாகத் திரும்பி வந்துவிட வேண்டும். வந்து சேர்ந்ததும் வெற்றியை எப்படிக் கொண்டாடுவது என்று தெரியும் தானே." கார்லோஸ் கண் சிமிட்டினான்.

கிறிஸ்டாவுக்கு, தான் அவனைப் பார்ப்பது இதுதான் கடைசி முறை என்பதுபோல மனதின் ஒரு மூலையில் தவிப்பு எழுந்தது. அவனைக் கட்டிக்

## மூன்று குண்டுகள்

கொண்டு அழவேண்டும் போல இருந்தது.

கார்லோஸோடு பழகிய இத்தனை நாட்களிலும் அவனை ஒருநாள்கூட மனசால் வெறுக்கும்படியான நிகழ்ச்சிகள் அவளுக்கு எற்படவில்லை. கார்லோஸின் கொள்கைகளில் வெறும் வறட்டுத்தனமும், எல்லோரையும் நடுங்கவைக்க வேண்டும் என்ற வக்கிரம் கலந்த புகழ் மயக்கமும்தான் இருக்கிறது என்று நினைத்தாள் கிறிஸ்டா.

ஆனாலும் அவனிடம் ஒரு காந்தத் தன்மை, கவர்ச்சிகர ஆளுமை இருப்பதாக அவள் நினைத்தாள். அவனோடு பழகியவர்



கார்லோஸ்

கள் எவருமே அவனைவிட்டு பிரிய நினைக்க முடியாதளவுக்கு அவனது ஆளுமை கட்டிப் போடுகிறது. அதிலும் பெண்கள் அவனிடம் இருந்து மீளவே விரும்பாதளவுக்கு ஒரு வசீகரம் அவனிடம் இருக்கிறது. அதுதான் தன்னையும் ஆட்டிப்படைக்கிறது என்று நினைத்தாள் கிறிஸ்டா.

இன்னொரு விடயமும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. தனது ஆட்களை விடுவிக்க அவன் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள்தான் அவை.

கார்லோஸ் ஒருமுறை அவளிடம் சொன்னாள்: "கிறிஸ்டா! நம்மை நம்பியவர்களை நாம் கைவிடக்கூடாது என்னை நம்பி, என் கட்டளைகளை நிறைவேற்றச் செல்பவர்களை என் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவேன். உலகிலேயே மிகப் பெரிய மோசடி என்ன தெரியுமா? நம்பிக்கைத் துரோகம்! கார்லோஸ் துரோகிகளை மன்னிக்கவும் மாட்டான். விசுவாசிகளை கைவிடவும் மாட்டான்!"

"என்ன கிறிஸ்டா யோசனை?" என்றான் கார்லோஸ். அவள் கண்கள் கலங்கி இருந்தன.

"கடைசியாக ஒரு முத்தம்!" என்றாள்.

"சேச்சே.. என்ன இது? நீ திரும்பிவருவாய்! நாம் சந்திப்போம்; தித்திப்போம்." என்றபடி அவளை அணைத்துக் கொண்டான். ஆவேசம் வந்தவள்போல அவனை முத்தமிட்டாள் கிறிஸ்டா.

புச்சாரெஸ்ட் விமான நிலையத்தில் கிறிஸ்டாவின் கடவுச்சீட்டுக்கு தனி மரியாதை கிடைத்தது. சோதனை எதுவும் கிடையாது.

ரோம் நகரில் விமான நிலையத்தில் தனது சூட்கேசுடன் பதட்டமேயில்லாமல் நடந்து, கடவுச்சீட்டை காண்பித்தபோது, கடவுச்சீட்டை பார்த்த அதிகாரி சந்தேகமாக நிமிர்ந்து பார்த்தபோதுதான் கிறிஸ்டாவுக்குள் சிகப்பு விளக்கு எரிந்தது.

அதிகாரி கண்டுபிடித்துவிட்டார். அது போலிக் கடவுச் சீட்டு. நூறுவீதம் தெரிந்துவிட்டது.

கிறிஸ்டா கைது செய்யப்பட்டாள். சூட்கேஸில் வெடிகுண்டும் கண்டுபிடிக்கப்பட்டது. ரோம் விமான நிலையத்தில் பரபரப்பு.

கிறிஸ்டாவை விசேஷ புலனாய்வுக்கு கொண்டு சென்றார்கள்.

நிர்வாணமாக நிறுத்தி அணு. அணுவாய் வதைத்தார்கள். "யார் அனுப்பிவைத்தது. அதை மட்டும் சொல்லிவிடு. உன்னை விட்டுவிடுகிறோம். அனுபவிக்கவும். அனுபவிக்கப்படவும் வேண்டிய வயது. அபார வாய்ப்புக்கள் உள்ள உடல். ஏன் அடிபட்டுச் சாகிறாய்?"

பலவிதமாக கேட்டுப்பார்த்தார்கள். பலரகமாக வதைத்துப் பார்த்தார்கள்.

அவள் கடைசிவரை கார்லோஸை காட்டிக்கொடுக்க நினைக்கவே இல்லை.

கிறிஸ்டா கைது செய்யப்பட்ட செய்தி அறிந்து கார்லோஸ் ஆத்திரம் கொண்டான்.

இறுதியாக கிறிஸ்டா சொன்ன வார்த்தை: "கார்லோஸ் எனக்குத் தெரியும், நான் உனது முதல் காதலியுமல்ல, நான்தான் உனக்கு கடைசிக் காதலியுமல்ல. ஆனால் நீதான் எனக்கு ஒரே ஒரு காதலன். எனக்காக நீ கண்ணீர் சிந்தவேண்டாம். எப்போதாவது என்னை நினைத்துக்கொள். அது எனக்குப் போதும்." இப்போதுதான் கிறிஸ்டா சொன்ன வார்த்தைகளின் சோகம் புரிந்தது.

முதன் முதலாக, தனியாக அமர்ந்து வாய்விட்டு அழுதான் கார்லோஸ்.

'விடக்கூடாது. கிறிஸ்டா முடிக்க நினைத்த காரியத்தை எப்படியாவது முடித்தேயாக வேண்டும். கிறிஸ்டாவுக்கு நன்றி சொல்வதற்கு அதுதான் ஒரே வழி.' கார்லோஸின் மனதில் வைராக்கியம் ஏற்பட்டது.

அடுத்து வந்த நாட்களில் ஒரு பைத்தியகாரன்போல, வெறிபிடித்தவன் போல காரியங்களில் ஈடுபட்டான் கார்லோஸ்.

சரியாக சாப்பிடவில்லை. சரியாக தூங்கவில்லை. தனது முக்கிய ஆட்களை சந்தித்தான். தனது திட்டங்களை விளக்கினான். கிழக்கு ஜெர்மனுக்கு சென்றான்.

கிழக்கு ஜெர்மன் அரசு கார்லோஸ் தனது நாட்டில் தங்கிச் செல்ல வசதிகளை செய்து கொடுத்திருந்தது.

கிழக்கு ஜெர்மன் உளவுத்துறையினர் சோவியத் யூனியன் உளவுத்துறையான கே.ஜி.பிக்கு தெரியாமல் கார்லோஸுக்கு உதவினார்கள்.

கிழக்கு ஜெர்மனியில் இருந்த சிரியா தூதரகத்தில் கார்லோஸ் வெடிமருந்துகளை கொடுத்து வைத்திருந்தான். சிரிய அதிபரின் கட்டளைப்படி சிரிய தூதரகங்கள் எங்கு-எந்த நாட்டில் இருந்தாலும் கார்லோஸுக்கு உதவி செய்தன.

கிழக்கு ஜெர்மனில் இருந்த சிரியா தூதரகத்தில் இருந்த வெடிமருந்துகளை எடுத்து, மூன்று சூட்கேஸ் குண்டுகளை தயாரித்தான் கார்லோஸ்.

மூன்று சூட்கேஸ்களும் மூன்று பேரிடம் ஒப்படைக்கப்பட்டன. மூவரும் கார்லோஸின் ஆட்கள்.

ஃபிரான்சில் மார்செயில்ஸ்-பாரிஸ் நகர்களுக்கு இடையில் செல்லும் கடுகதி ரயில், சென்-சாள்ஸ் ரயில் நிலையத்தில் தரித்துநின்றது.

நேரம் மாலை 5.29. நாளை- 1984 புதுவருடம். புதுவருட இரவு கொண்டாட்டங்களுக்காக செல்ல வந்தவர்களை உள்வாங்கிக் கொண்டு புறப்பட்டது கடுகதி ரயில்.

இரண்டாவது பெட்டியில் கூட்டம் அதிகமில்லை. பேர்னாட் பெரைட் என்பவர் தனது மனைவி ஜேனிடம், "பரிசுப் பொருட்களை பார்த்தவுடன் இருவரும் கட்டிப் பிடித்து குதிக்கப்போகிறார்கள் பார்!" என்றார். அவர் சொன்னது தம்மை எதிர்பார்த்திருக்கும் இரு பிள்ளைகளைப் பற்றி. அதே பெட்டியில் இன்னொரு பெண்மணியும் இருந்தார். அவரது பெயர் மைக்கேல் ஜோஹானாஸ். டாக்டரின் மனைவி. போய் இறங்கியதும் டாக்டரிடமிருந்து கிடைக்கும் முத்தத்தை நினைத்து இதழ்களை ஈரப்படுத்திக்கொண்டிருந்தாள்.

ரயில் விரைந்து கொண்டிருந்தது.

மூவரும் இருந்த அந்த இரண்டாவது பெட்டியில், ஒரு ஓரமாக இருந்த கறுப்பு சூட்கேஸ், டாக்டரின் மனைவியின் கண்ணில் பட்டு விட்டது.

'அந்தத் தம்பதியினரின் சூட்கேஸாக இருக்குமோ? அப்படியானல் ஏன் ஓரமாக இருக்கிறது? சந்தேகத்தை கேட்டுவிடலாமா?' என்று அவர் நினைத்த நொடியில்,

சூட்கேஸ் குண்டு வெடித்தது!

பெட்டிக்குள் இருந்த மூவரும் சின்னா பின்னமாகி காணாமல் போயினர்.

அதே நேரம் சென்-சாள்ஸ் ரயில் நிலையத்திலும் குண்டுவெடித்தது.

ரயிலில் வெடித்த குண்டால் ஏழு பேர் பலியானார்கள். ரயில் நிலையக் குண்டு வெடிப்பால் இரண்டு பேர் பலியானார்கள். இரண்டு குண்டு வெடிப்புகளாலும் நூறுபேர் வரை காயமடைந்தனர்.

மூன்றாவது குண்டு எங்கே?

அது குறி நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. (பதட்டம் தொடரும்)

## தொலைபேசி தொல்லைபேசியானது

இலண்டனில் ஒரு தொடர்மாடி வீட்டில் தொலைபேசி மணியடித்தது. எடுத்துக்கேட்டால் குரல் வரவில்லை. பதிலுக்கு யாரோ முனகுவதும், கத்துவதும், கடவுளே, கடவுளே என்று கத்துவதுமாக சத்தம் வந்து கொண்டிருந்தது. தொலைபேசி ரீசிவரை காதில் வைத்துக் கொண்டிருந்த பெண்மணிக்கு குரலை வைத்து அடையாளம் தெரிந்துவிட்டது.

இது நிச்சயம் தன்னுடைய மகளின் குரல்தான். அவளுக்கு ஏதோ ஆபத்து. உதவி கேட்டுத்தான் ஃபோன் பண்ணியிருக்கிறாள். அதற்குள் யாரோ கத்தியையோ அல்லது துப்பாக்கியைக் காட்டியோ அவளைப் பேசவிடாமல் செய்திருக்கிறார்கள்.

அங்கே அவள் உயிருக்குப் போராடுகிறாள். முனகுவது கேட்கிறது. நிச்சயம் ஆபத்து. பொலிசுக்குப் போனில் விஷயத்தைச் சொன்னாள் அந்தப் பெண்மணி.

பொலிஸ் பறந்து போய் கதவைத் தட்டியது. கதவைத் திறந்த பெண்ணும் அவளுடைய கணவனும் அரைகுறை ஆடையுடன் காணப்பட்டனர். விஷயத்தை அறிந்ததும் இருவருக்கும் வெட்கம் வந்துவிட்டது.

நவீன ரக 'பட்டன் சிஸ்ட' ஃபோனில் தமது தாயாரின் வீட்டு தொலைபேசி எண்ணை டிஜிட்டில் ரிசர்வ் செய்து வைத்திருந்தாள் மகள். அம்மாவோடு தொடர்பு கொள்ள வேண்டுமானால், இலக்கங்களை தட்டத் தேவையில்லை. பட்டனை தட்டிவிட்டால் போதும்; தொடர்பு கிடைத்துவிடும்.



காதல் லீலைகளின்போது கால் தவறுதலாக ஃபோன் பட்டனில் பட்டு அம்மாவீட்டு தொலைபேசி மணியடித்துவிட்டது. ஃபோனை எடுத்த அம்மா காதில் கேட்ட சத்தத்தை வைத்து விபரீதமாக கற்பனை செய்துவிட்டார். இதனால் அறியப்படும் நீதி யாதெனில், நவீனரக ஃபோன் உள்ளவர்கள் காதல் செய்யும்போது ஃபோனை போதுமான தூரத்தில் வைப்பது நல்லது!

## வீட்டுச் சிறையில் 13 வருடங்கள்



பிரேஸில் நாட்டைச் சேர்ந்தவர் மரியானா ஜோஸ். 13 ஆண்டுகள் அவர் வீட்டுச் சிறையில் கிடந்து வாடினார். சமீபத்தில்தான் மனுசன் விடுதலையாகி இருக்கிறார்.

சரி, அவர் ஏன் சிறையில் இருந்தார் என்று சொல்லவேண்டாமா?

மரியானா ஜோஸின் மனைவி ஒரு நாள் தன் காதலனுடன் சந்தோசமாக இருந்தபோது மரியானா ஜோஸ் அதனைக் கண்டுவிட்டார்.

"வெளியே சொல்லப் போகிறேன். உனது மானத்தை கப்பலில் ஏற்றுகிறேன் பார்" என்றார் மரியான ஜோஸ்.

அதுதான் வம்பாகப் போனது. "வெளியே போனால்தானே சொல்லுவாய்" என்று அவரைப் பிடித்து வீட்டில் உள்ள ஒரு அறையில் பூட்டிவைத்துவிட்டார் மனைவி. சாப்பாடு ஜன்னல் வழியாகத்தான் கிடைக்கும். வாரத்தில் ஒருநாள் ஒரு பக்கெட் தண்ணீரை எடுத்து மனைவி வீச, அதுதான் குளிப்பு.

அயலில் உள்ளவர்களுக்கு சந்தேகம் வராமலிருக்க, மரியானா ஜோஸுக்கு மூளை சரியில்லை என்று கதை கட்டிவிட்டிருந்தனர். கடந்த 13 வருடங்களாக அயலவர்களும் அதனை நம்பிக் கொண்டிருந்தானர்.

கடைசியாக உறவினர் ஒருவருக்கு சந்தேகம் வர, இவர் பொலிஸ் உதவியை நாடினார். குட்டு அம்பலமானது. மரியானா ஜோஸ் விடுதலையானார். இப்போது மனைவி கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்.

தான் எப்படி விலங்கிடப்பட்டு சிறையில் இருந்தேன் என்பதை பத்திரிகையாளர்களுக்கு நடித்துக் காட்டினார் மரியானா ஜோஸ். 13 வருடங்களுக்குப் பின்னர் விடுதலையான சந்தோசம் முகத்தில் தெரிகிறதல்லவா?

## முன்னாள் அழகியின் சோகம்

முன்னாள் உலக அழகிகள் ஐஸ்வர்யா ராயும், சுஷ்மிதா சென்னும் சினிமாவில் காலடி எடுத்துவைத்தது தெரிந்த விஷயம் தானே!



சினிமா உலகின் நெளிவு சுழிவுகளை-அறிந்து அடித்துப் பிடித்து முன்னேறிவருகிறார் ஐஸ்வர்யா ராய். பாவம்! சுஷ்மிதா சென் மட்டும் திணறிக் கொண்டிருக்கிறார்.

'ரட்சகன்' படம் தவிர சொல்லிக் கொள்ளும்படியான வாய்ப்புக்கள் சுஷ்மிதாவுக்கு கிடைக்கவில்லை. இந்திப்பட நாயகர்கள் சிலரையும் கைக்குள் போட்டுப் பார்த்தார் சுஷ்மிதா. பலன் பூச்சியம்தான்.

ஐஸ்வர்யாராயின் கண்களும், உடலமைப்பும்தான் சினிமாவுக்கு ஒத்துவருகிறது என்று இயக்குநர்கள் பலர் சுஷ்மிதாவின் காதுபடவே பேசியிருக்கிறார்கள்.

என்ன செய்யலாம்- எப்படி வாய்ப்புக்களைப் பிடிக்கலாம்? என்று தீவிர சிந்தனையில் இருந்த சுஷ்மிதாவுக்கு தென்னிந்திய நடிகை ஒருவர் யோசனை சொன்னாராம்.

அந்த யோசனைப்படி மூக்கையும், மார்பையும் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை மூலம் அழகுபடுத்திக் கொண்டிருக்கிறார் சுஷ்மிதா சென்.

இரகசியமாக நடந்த அந்த அறுவைச் சிகிச்சை விஷயம் எப்படியோ வெளியே கசிந்துவிட்டது.

பம்பாய் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளிவிட்டன.

அறுவைச் சிகிச்சை முடிந்ததும் 'என்னைப்பார், என் அழகைப்பார்' என்று இயக்குநர்களை வாய்ப்புக் கேட்டு அணுகினார், சுஷ்மிதா. இதுவரை நல்ல வாய்ப்பு எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

"உலக அழகிப் போட்டி நடுவர்களுக்கு இருந்த ரசனை இந்த இயக்குநர்கள் யாருக்கும் கிடையாது. என்னை சரியாகப் பயன்படுத்த யாருக்கும் தெரியவில்லையே" என்று புலம்பிக் கொண்டிருக்கிறார் முன்னாள் அழகி.

பம்பாய் பத்திரிகையாளர்களை அழைத்து விதம் விதமாக போஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார் சுஷ்மிதா.

எப்பாடு பட்டாலாவது திரையுலகில் ஒரு இடத்தைப் பிடிப்பதுதான் சுஷ்மிதாவின் இலட்சியம்.



படிப்பகம்


www.padippakam.com

# கற்றுக்கொள்ளும் குட்டியார்



கற்றுக்கொடுப்பது மிருகக்காட்சி சாலைக்கு பொறுப்பான அழகி. குசியோடு கற்றுக் கொள்ளும் சிம்பன்சியாருக்கு வயது ஆக, பதினைந்தே மாதங்கள்தான். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? அதனால்தான் சிறு வயதிலேயே தேகப்பயிற்சி கொடுக்கப்படுகிறது சிம்பன்சியாரின் பெயர் யங்கியாங். சீனாவில் பெய்ஜிங்கில் உள்ள மிருகக் காட்சிச்சாலையில் 'கிளிக்' செய்யப்பட்டது.

# தம்பி ஒரு தங்கக் கம்பி



ஒரு பக்க தலைமுடியைக் காணவில்லை. ஒரு பக்க மீசையையும் காணவில்லை. புதிய ஸ்டைலோ? என்று நினைத்துவிடாதீர்கள்.

தம்பி ஒரு பந்தயத்தில் சுத்தமாகத் தோற்றுப்போனார். அதுதான் சத்தமே போடாமல் தலைமுடியிலும், மீசையிலும் பாதியை எடுத்துவிட்டார். என்ன பந்தயம்? தேர்தல் பந்தயம். தம்பி அ.தி.மு.க.வில் ஒரு தங்கக் கம்பி. பெயர், இராமச்சந்திரன். மூட்டை தூக்கும் தொழிலாளி. எம்.ஜி.ஆர் பக்தர். எம்.ஜி.ஆரின் சின்னம் இரட்டை இலை தோற்காது என்று நம்பி பந்தயம் கட்டினார். சின்னம் இருந்தென்ன, அம்மாதான் எல்லாவற்றையும் சின்னாபின்னமாக்கிவிட்டாரே, பாவம் தம்பி. அம்மாவை நம்பியதால் நிற்கிறார் வெதும்பி.

# வளர்த்தால் வருமானம்

கம்பளி ஆடைகள் தயாரிக்க வளர்க்கப்படும் மிருகம் லாமாஸ். படு சாது. சொன்னபடியெல்லாம் கேட்கும். அதனால் பிரியமாக வளர்க்கிறார்கள். வீட்டுப் பிராணியாகவும் வளர்த்துவருகிறார்கள். பராமரிப்பு செலவைவிட, இதன் முடியை விற்பதால் கிடைக்கும் வருமானம் அதிகம். தன் செல்ல லாமாஸுக்கு அன்பு முத்தம் கொடுக்கிறார் எஜமானியம்மா.





## தகவல் பெட்டி

# நெத்தியடியான கண்ணாடி

முகத்திற்கு மூக்குக் கண்ணாடி அழகு என்று காட்டவோ இந்த அழகி போஸ்கொடுக்கிறார்? அல்ல, அல்ல, மூக்குக் கண்ணாடியில் பெரிய சமாச்சாரமே அடங்கியிருக்கிறது.

இந்த மூக்குக் கண்ணாடி 1930ம் ஆண்டு வடிவமைக்கப்பட்டது. அதைவிட வாய் பிளக்கும் விஷயம் யாதெனில், கண்ணாடியின் விளிம்பில் இருக்கிறது பாருங்கள் வெள்ளையாக ஒரு சிறுத்தை. அதனை எப்படி உருவாக்கியிருக்கிறார்கள் தெரியுமா? 820 வைரக்கற்கள், 35 சபயர், மற்றும் எமரல்ட் கற்கள் ஆகியவற்றை 56.5. கிராம் வெள்ளைத் தங்கத்தில் பதித்து உருவாக்கியுள்ளார்கள். இதனை உருவாக்கியவர் கார்ட்டர் என்னும் நகை தயாரிப்பாளர். இதன் பெறுமதி என்ன தெரியுமா? ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்கள். கிட்டத்தட்ட 56 இலட்சம் ரூபாய். மூக்குக் கண்ணாடி விலை மூக்கில் விரல் வைக்கச் செய்கிறதல்லவா. உலகிலேயே மிக விலை உயர்ந்த மூக்குக் கண்ணாடி இதுதான்.

ஹாயாக அணிந்து போஸ் கொடுக்கும் சிங்காரியின் பெயர் ட்றின் ஸ்ரீபன்சன். டென்மார்க் அழகி. மூக்குக் கண்ணாடி இவருக்கு சொந்தமில்லை. போஸ் கொடுத்து முடிந்ததும் உருவிவிடுவார்கள் உருவி.



# மீட்டியபடியே சவாரி

கைபிடிகளில் பிடிக்காமல் சைக்கிள் சவாரி செய்வது கஷ்டமான விஷயம். ஒரு கொஞ்சத் தூரம் வேண்டுமானால் கைபிடியைப் பிடிக்காமல் சவாரி செய்யலாம். ஆனால் 30 கிலோ மீட்டர் தூரம் வரை கைபிடிகளைப் பிடிக்காமல், வயலின் மீட்டியபடி சைக்கிள் சவாரி செய்வது நடக்கக்கூடிய காரியமா? நடத்திக் காட்டியிருக்கிறார் டோனல்ட் பெர்னான்டஸ் என்னும் இளைஞர். இவர் இந்தியாவில் கோவா மாநிலத்தைச் சேர்ந்தவர். வயலின் மீட்டியபடி சவாரி செய்தாலும்கூட சங்கீதம் முறையாகவும் இருந்தது. இவரது சாதனையை கின்னஸ் புத்தகத்தினர் இதுவரை பதியவில்லை. அதனால் கின்னஸில் இடம் பெறுவதற்காக 50 கிலோ மீட்டர் தூரம் வயலின் மீட்டியபடி செல்லப் போகிறார். தற்போது இவரது சாதனை 'லிம்கா' புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஆரியக் கூத்தாடினாலும்

புதுமையாகவும், விறுவிறுப்பாகவும் பொழுது போக்கும் ஆர்வம் எல்லோருக்கும் வராது. அதிலும் மாணவர்கள் என்றால் கும்மாளமடித்து குதூகலிப்பதிலேயே பொழுது போய்விடும். 'செக்' நாட்டில் உள்ள மாணவர்களுக்கு கும்மாளத்தோடு கும்மாளமாக சாதனை படைக்க ஆசை வந்தது.

வீடு வீடாகச் சென்று 21 ஆயிரத்து 570 பிளாஸ்ரிக் போத்தல்களை திரட்டி முடித்தார்கள். அவற்றை வைத்து அழகான கோபுரம் ஒன்றை தரையில் இருந்து அமைத்திருக்கிறார்கள். கின்னஸ் புத்தகத்தில் இந்தச் சாதனையும், இதனை அமைத்த 'செக்' நாட்டு மாணவர்களது பாடசாலைப் பெயரும் இடம்பெறப்போகிறது. படிக்கும்போதே படைத்துள்ள சாதனை. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருந்துள்ள மாணவர்கள் கில்லாடிகள் தானே.





படிப்பகம்

www.padippakam.com

## "மணமகள் தேவை"

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், தேவிகா நடித்து வெளியான படம், 'மணமகள் தேவை.' அது வெளியாகி 30 வருடங்கள் சென்றுவிட்டன.

இப்போது அதேபெயரில் புதிய படம் ஒன்று தயாராகிறது. ஜெயராம் கதாநாயகனாக நடிக்கிறார். புதுமுக நடிகை ஒருவரை அவரது ஜோடியாக நடிக்க வைக்கப்போகின்றனர்.

திருமணம் செய்யத் துடிக்கும் ஜெயராமுக்கு மணமகள் தேடி அலைகிறார்கள் கவுண்டமணியும், செந்திலும். நகைச்சுவைக்கு முதலிடம் கொடுத்து உருவாகும் படம் 'மணமகள் தேவை.'

இயக்குநர் மணிவண்ணனிடம் உதவி இயக்குநராக இருந்த மதுரவன் திரைக்கதை எழுதி இயக்குகிறார். இசை, சிற்பி.



கார்த்திக்-நக்மா
படம்-மேட்டுக்குடி

## காதோடு சொல்லுகிறோம்

'சுகன்' நடிகை கடத்தல் மன்னனிடம் நஷ்ட ஈடு வாங்கப் போவதாக அறிக்கை விட்டது பழைய கதை. தற்போது ஒரு புதிய செய்தி. வாரம் ஒரு முறை மருத்துவமனைக்கு சென்று வருகிறாராம். வயிற்றை சுத்தம் பண்ணும் மருத்துவமனையாம் அது.

'வான்மதி' நாயகன் இரண்டெழுத்து நடிகையுடன் வெளியூர் சென்று வந்தாராம். அங்கு போய் 'காதல் கோட்டை' கட்டினார்களோ? என்று கேட்கிறார்கள் விஷயமறிந்தவர்கள். இப்படி எல்லாம் சுற்றித் திரிந்துவிட்டு மெல்ல உதற நினைத்தால் விடுவாரோ நடிகை. அதனால்தான் தற்போது இருவருக்கும் இடையில் சின்னச் சின்ன சிக்கல்களாம்.

தன் கால் அழகுதான் பிரபல ஹீரோக்களை மயக்கிப்போடுகிறது என்கிறார் 'ரம்ப' நடிகை. பரம்பரை பரம்பரையாக வந்த கால் அழகு என்றும் விளம்பர ஸ்டைலில் பேசுகிறார் நடிகை. இந்தியில் சில ஹீரோக்களை காலடியில் போட்ட ரகசியம் அதுதானாக்கும். எப்படியோ தொழில் நடந்தால் சரிதான்.

'விஜய'மான இளம் நடிகர் வனிதமான நடிகைக்கு கார் ஓட்டக் கற்றுக்கொடுக்கிறாராம். பல மாதங்களாக கற்றுக் கொடுத்தும் நடிகை இன்னமும் தேறவில்லையாம். கவனம் சிதறுகிறதோ?

நகைச்சுவை மணியாருக்கு இப்போதெல்லாம் ஜோடி இல்லாவிட்டால் நடிக்கும் 'மூட்' வரமறுக்கிறதாம். எத்தனை நாளைக்குத்தான் செந்திலை உதைத்துக் கொண்டிருப்பது. மரத்தைச் சுற்றி துரத்தி துரத்தி 'டூயட்' பாடவும் ஆசை வரும்தானே!

## ஹீராவின் பாய்ச்சல்

'காதல் கோட்... நடன அசைவுகளை... குழுவினரே புல்லரித்துப் போயிருக்கிறார்களாம். இவர்க... அஜித்குமார் பாடுதான் ஒருபுறம் கொண்டாட்டம், மறுபுற... காட்சிகளில் அஜித் கூச்சத்தால் நெளிய, ஹீராதான் தைரிய... கொடுத்தாராம்.

இப்போது அஜித்குமாருக்கு உள்ள ஒரே பிரச்சனை, ... இருந்து ... என்பதுதா... களுடன் ... பழகுவதை... போன் செ... கிறாராம். ... காமல் ... தால், ... வுடனே... விடுகிறார்...



ஹீரா
படம்: காதல் கோட்டை

## சூப்பர் தோல்வி

ஸ்ரீதேவி, அரவிந்தசாமி நடித்து வெளியான தேவராகம் சூப்பர் தோல்வி. சில திரையரங்குகளில் இருந்து இரண்டு வாரங்களிலேயே தூக்கப்பட்டு விட்டது.

தொடர்ந்து தமிழ்ப்படங்களில் நடிக்கத் திட்டமிட்டிருந்தார் ஸ்ரீதேவி. தேவராகம் படு அடி வாங்கியதால் முடிவை மாற்றிக்கொண்டார்.

பதினாறு வயதினிலே படத்தில் பார்த்த ஸ்ரீதேவிக்கும், தேவராகம் ஸ்ரீதேவிக்கும் இடையே பலத்த வேறுபாடு. அப்போது துள்ளுவதோ இளமை என்று துடியாட்டமாக இருந்தார். இப்போது முதிர்ச்சி முகத்தில் தெரிகிறது. அதுதான் தமிழ்ப் பட ரசிகர்களுக்கு பிடிக்கவில்லையாம்.

## 'மந்த்ரா'வான விஜயா

தமிழில் 'பிரியம்' படத்தில் அறிமுகமாகும் மந்த்ராவின் ஒரிஜனல் பெயர் விஜயா. ஏற்கனவே பேபி விஜயா என்ற பெயரில் குட்டிப் பெண்ணாக தமிழ், தெலுங்கு படங்களில் நடித்திருக்கிறார்.

இந்தியில் லோஹா என்னும் படத்திலும் நடிக்கிறார் மந்த்ரா.

'பிரியம்' படத்தில் தனது திறமையைக் காட்டியிருப்பதால் படம் வெளியானபின்னர் தமிழில் மேலும் வாய்ப்புக்கள் வரும் என்று நம்பியிருக்கிறார்.

தமிழ், இந்தி தவிர கன்னட படங்களில் நடிக்கவும் அழைப்பு வந்திருக்கிறதாம். என்றாலும் "தமிழுக்குத்தான் முதலிடம்" என்கிறார் மந்த்ரா.

## தப்பிவிட்டார் பானுப்பிரியா

தேர்தலில் பிரசாரம் செய்ய வருமாறு ஒரு கட்சியிடமிருந்து அழைப்பு வந்ததாம். "சின்னமாமா செத்துப்போனார்" என்று பொய் சொல்லிவிட்டு மும்பாய்க்கு (பம்பாய்) பறந்து போனாராம் பானுப்பிரியா. தேர்தல் முடியத்தான் திரும்பிவந்திருக்கிறார்.

"அரசியல்வாதிகள் நம்மை தேர்தல் பிரசாரத்திற்கு அழைப்பதில் பல விஷயங்கள் இருக்கின்றன. நம்மால் முடியாது என்பதால்தான் நழுவிக்கொண்டேன்" என்று சொல்கிறார் பானுப்பிரியா.

பானுப்பிரியாவுக்கு அழைப்பு விட்டது அம்மாவின் கட்சிதானாம். தப்பிவிட்டார் பானுப்பிரியா.

## குஷ்புவின் ராசியால் யோகம்

குஷ்புவின் ராசி இயக்குநர் சுந்தருக்கு கைகொடுத்திருக்கிறது.

'முறை மாமன்', 'உள்ளத்தை அள்ளித்தா' இரண்டும் சூப்பர் ஹிட். இரண்டு பட வெற்றிகளும் சுந்தரை சூப்பர் இயக்குநர்கள் வரிசையில் நிறுத்தியிருக்கிறது.

குஷ்புவை காதலிக்க ஆரம்பித்த பின்னர்தான் தனக்கு யோகம் பிறந்தது என்கிறார் சுந்தர்.

கார்த்திக்-நக்மா நடிக்கும் 'மேட்டுக்குடி' பட வேலைகளில் தீவிரமாக இருக்கிறார் சுந்தர். 'உள்ளத்தை அள்ளித் தா' படத்தை இந்தியில் இயக்கி வருகிறார்.

கே.எஸ். ரவிக்குமாரை அடுத்து மார்க்கெட்டில் சூடாகப் பேசப்படும் இயக்குநர் சுந்தர்தான்.

## புலித்தேவனாகும் நெப்போலியன்

'புலி பொறந்த மண்ணு' படத்தில் நெப்போலியன் புலித்தேவனாக நடிக்கிறார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரனின் உண்மைக் கதை.

புலித்தேவனாக நடிப்பதற்காக குதிரையேற்றம், கத்தி, வாள் சண்டைகள் போன்ற பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளார் நெப்போலியன்.

முக்கிய வேடம் ஒன்றில் அருண்பாண்டியன் நடிக்கிறார். பிரிட்டிஷ்காரராக ஆங்கில நடிகர் ஒருவரையே நடிக்க வைத்துள்ளார்கள்.

அருண்பாண்டியனின் சகோதரரான துரைபாண்டியன்தான் புலித்தேவன் படத்தை இயக்குகிறார். இதற்கு முன்னர் 'ஊழியன்' படத்தை இயக்கியவர் துரைபாண்டியன்.

இசை, தேவா. ஒளிப்பதிவு கே.வி.மணி.

## கொப்பி அடித்த பாடல்

ரஜினி நடித்த 'முத்து' இந்தியில் 'சிக்கந்தர் கா முக்கந்தர்' என்ற பெயரில் 'டப்' செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் 'முத்து' படத்தில் இடம்பெற்ற 'தில்லானா தில்லானா' பாடலை, 'ஜங்' என்ற இந்தி படத்திற்காக கொப்பி அடித்துள்ளார்கள். 'தில்லானா தில்லானா' என்பதை 'திவானா, திவானா' என்று மாற்றி இருக்கிறார்கள். அதே உடை, அதே நடன அமைப்பு என்று அப்பட்டமாக தழுவியிருக்கிறார்கள்.

## ஐந்து வருடமாக ஒரு கோடி

இந்தியாவிலேயே அதிக சம்பளம் பெறும் நடிகை விஜயசாந்திதான். இந்திய பண மதிப்பின்படி ஒரு கோடி ரூபாய் சம்பளம் வாங்குகிறார். கடந்த ஐந்து வருடங்களாக அவரது சம்பளம் அப்படியே இருக்கிறது. அதனால்தான் விஜயசாந்தியை 'சூப்பர் ஸ்டாரினி' என்று அழைக்கிறார்கள்.

அடிதடிப் படங்களில் நடித்தாலும் கவர்ச்சி காட்டி நடிப்பதிலும் விஜயசாந்தி வஞ்சகம் பண்ணுவதில்லை. அதனால்தான் பலதரப்பட்ட ரசிகர்கள் மத்தியிலும் நிலையான இடத்தை தக்கவைத்திருக்கிறார்.

'அபூர்வ சகோதரிகள்' படத்தில் சங்கவியோடு கவர்ச்சிப் போட்டியே நடத்துகிறார் விஜயசாந்தி. தனது இளமை ஒன்றும் குறைந்துவிடவில்லை என்று காட்டத்தான் இளம் நாயகியான சங்கவியை தன்னோடு நடிக்கவைத்திருக்கிறார் விஜயசாந்தி. அபூர்வ சகோதரிகள் படத்தில் விஜயசாந்திக்கு இரண்டு வேடம். அதில் ஒரு வேடம் படு கவர்ச்சியாக இருக்குமாம்.



நெப்போலியன்
படம்: புலி பொறந்த மண்ணு

## ராம்கி மறுப்பு

நிரோசாவை திருமணம் செய்யும் எண்ணமே தனக்குக் கிடையாது என்று அறிவித்துவிட்டார் ராம்கி. அதனால் நிரோசா வீட்டில்தான் பூகம்பம்.

'சொன்னேன்தானே, கேட்டியாடி.' என்று குத்திக் காட்டுகிறாராம் ராதிகா.

அனுபவப்பட்ட அக்கா ராதிகா சொன்னதை கேட்டிருக்கலாம் என்று நிரோசாவுக்கும் இப்போது தோன்றியிருக்கும்.

## எது முதலில் வரும்?

'லவ் பேர்ட்ஸ்' படத்தின் தோல்வியால் பிரபு தேவா நடித்துவரும் புதிய படத் தயாரிப்பாளர்கள் தலையைச் சொறிகிறார்கள். மின்சாரக் கனவு, மிஸ்டர் ரோமியோ இரண்டிலும் முதலில்வரும் படம் தள்ளாடவேண்டியிருக்கும் என்று தயாரிப்பாளர்கள் நினைக்கிறார்கள்.

ராசியான ஜோடி என்று கருதப்பட்ட பிரபுதேவா, நக்மா ஜோடி நடித்தும் லவ் பேர்ட்ஸ் காலை வாரிவிட்டது. மிஸ்டர் ரோமியோ என்னாகுமோ? என்று விநியோகஸ்தர்களும் தயக்கம் காட்டுகிறார்கள்.

லவ் பேர்ட்ஸில் நக்மாவை ஆவேசமாக பிரபுதேவா முத்தமிடும் காட்சி சென்சாரில் வெட்டப்பட்டு விட்டதாம். அப்படி பல சூடான காட்சிகளை தணிக்கை சாப்பிட்டுவிட்டதால்தான் படம் தொய்ந்தது என்கிறார்கள் லவ் பேர்ட்ஸ் தயாரிப்பாளர்கள்.

அந்த முத்தக் காட்சியில் நக்மாவும் பிரபுதேவாவும் மிக ஈடுபாட்டுடன் நடித்திருந்தார்களாம். பிரபுதேவா முதலில் வெட்கப்பட்டாராம். நக்மாதான் தைரியம் கொடுத்து, உற்சாகமும் கொடுத்தாராம். காட்சி முடிந்ததும் நக்மா அடித்த கொமண்ட், "வெட்கப் பட்டது பொய்தானே! அனுபவமுள்ள ஆளப்பா!" படம் தோல்வியடைந்தாலும் படப்பிடிப்புக் குழுவினர் மறக்காத சம்பவம் அது.



மந்த்ரா
படம்: பிரியம்

## ஏற்றுமதி நடிகைகள்

இந்தியில் இருந்து தமிழுக்கு மட்டும்தான் கதாநாயகிகள் இறக்குமதியாக முடியுமா என்ன. தங்கள் திறமையால் மூன்று கதாநாயகிகள் தமிழில் இருந்து ஹிந்திக்கு தாவுகிறார்கள்.

ஒருவர் மோகினி. அவர் ரிஷிகபூர் ஜோடியாக நடிக்கப்போகிறார். மற்றொரு ஏற்றுமதி கஸ்தூரி. 'நசர்' என்ற இந்திப்படத்தில் புதுமுக நாயகனுடன் நடிக்கிறார். மூன்றாமவர் கருத்தம்மா புகழ் ராஜஸ்ரீ. இந்தியில் ராஜஸ்ரீயும், கஸ்தூரியும் படு கவர்ச்சியாக நடிக்க சம்மதித்துள்ளனர். கஸ்தூரி நீச்சல் உடையிலும் நடிக்கப்போகிறார்.

'சின்... 'யாத... வாங்... எந்த... அ... கேட்... போ... தயா... முடி...

சத்... நடி... கின... இல... தான்... என்... நக்ம... விடு... திரும்... விட்ட... பாளர்... நாதன்... பின்னர்... ராஜுக்... யாக... ரோஜா... யும்... சங்கீதா... ஒப்பந்த... ராம்.

...மாமன்', ...மகள்' ...படங்களி... ...ராஜின் ...கதை ...பார்த்து நல்ல ...எடுத்தவர் ...அதனால் ... ...சிபாரிசு ... ...ராம் சத்யர...



படிப்பகம்

ஹீராவின்
டப்பிடிப்புக்
படி. என்றால்,
ண்டாட்டம். சில
மும், உற்சாகமும்

ஹீராவின் பிடியில்
ப்படி விடுபடுவது
ன். ஏனைய நடிகை
அஜித் நெருங்கிப்
அறிந்தால் ஹீரா
பது சண்டை போடு
தொல்லை பொறுக்
ரா போன் செய்
ரலைக் கேட்ட
ரிசீவரை வைத்து
அஜித்குமார்.

## தவிர்க்க முடியவில்லை

"'லவ்பேர்ட்ஸ்' படத்தில் என் தொப்புளில் பிரபுதேவா 'ஆம்லெட்' போடும் காட்சி பற்றி பலரும் கேட்கிறார்கள். நான் என்ன விரும்பியா இடம் கொடுத்தேன். அந்தக் காட்சியை தவிர்த்தால் என்ன வென்று இயக்குநரிடம் கேட்டேன். அவர்தான் 'ஒரு கிக்'காக இருக்கும் என்றார். நடிக்க வந்துவிட்டால் சில நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டுத் தானே ஆகவேண்டும். அதில் ஆபாசம் இல்லாவிட்டாலும் தரம் சிறிது குறைந்துவிட்டதாகவே நினைக்கிறேன்."

இப்படி சொல்லியிருப்பவர் நக்மாவேதான்.



# சினி விசிட்

## விருப்பப்படிதான் நான் வாழ்வேன்
## இளம் ஹீரோ அஜித் பேட்டி

இளம் ஹீரோக்களில் முன்னணியில் இருப்பவர் அஜித்குமார். கைவசம் நிறையப் படங்கள். நடிகைகள் பலர் மொய்த்துக்கொண்டிருக்கிறார்கள். பந்தா எதுவும் இல்லாமல் மோட்டர் சைக்கிளில்தான் படப்பிடிப்புக்குச் செல்கிறார்.

மோட்டார் சைக்கிள் பந்தய வீரராக இருந்தவர் என்பதால் படு வேகமாக சாலைகளில் பறக்கிறார். தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு அஜித்குமார் பேட்டியளித்தார். சூடான பேட்டி. நீங்களும் அதன் சூட்டை அறிய வேண்டாமா? அதற்காக இதோ அந்தப் பேட்டி.

**கேள்வி:-** **பல இலட்சம் ரூபாயில் ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கியிருக்கிறீர்கள். அதில்தான் படப்பிடிப்புக்கு செல்கிறீர்கள். இது உங்கள் ஹீரோ 'இமேஜ்' பாதிக்காதா?**

**பதில்:-** ஒரு நடிகர் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற 'இமேஜ்' பழைய ஹீரோக்கள் உருவாக்கிவிட்டு, தாங்களும் அதில் மாட்டிக்கொண்டார்கள். என்னைப் பொறுத்தவரை நடிப்பு ஒரு தொழில். இதற்கு மேல் நானும் ஒரு மனிதன். எனக்கும் உணர்ச்சிகள், ஆசைகள் இருக்கு. என் வாழ்க்கையை என் இஷ்டப்படிதான் வாழ்வேன். இதனை எதற்காகவும், யாருக்காகவும் விட்டுக் கொடுக்க நான் தயாராக இல்லை. இந்த விஷயத்தில் நான் ரஜினிசாரை ரொம்ப விரும்புறேன்.

**கேள்வி:-** **ரஜினியை அவரது ரசிகர்கள் தலைவர் என்று அழைப்பது சரி என்கிறீர்களா?**

**பதில்:-** ரஜினி சார் பெரிய தலைவராக பேசப்படுவது அவருடைய நடிப்புத் திறமையால் என்று சொல்லமுடியாது. அப்படிப் பார்த்தால் கமல் சார் ரஜினியை விட திறமையுள்ளவர். ஆனால் ஜனங்க ரஜினிசாரை ஏன் மதிக்கிறாங்கன்னா, அவர் போலித்தனம் இல்லாமல் ஒரு உண்மையான மனிதராக வாழ்கிறார். நான் உத்தமர் என்று காட்டிக்கொள்ளாமல், தானும் தவறுகள் பண்ணக்கூடிய சராசரி மனிதன்தான் என்ற உண்மையை ஒத்துக்கொள்கிறார். நிஜவாழ்க்கையில் நடிக்காமல் வாழ்கிறார். மனிதனாக வாழும் அவர் முயற்சி பாராட்டுக்குரியது. அதற்காக ஒரு நடிகரான ரஜினியை பின்பற்றுவது முட்டாள்தனம்.

**கேள்வி:-** **உங்களது வருங்கால மனைவி எப்படி இருக்கணும்னு நினைக்கிறீங்க? உங்கள் வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ள விருப்பம்?**

**பதில்:-** இப்போ இருபத்தைந்து வயதில் வருங்கால மனைவியைப் பற்றி எந்தக் கனவும் இல்லை. அதற்கு இன்னும் நாள் இருக்கு. ஆனால் நான் நாளைக்கு சந்திக்கப்போற பெண், என் மனைவியாகப் போகிறவள் கடந்தகாலத்தில் எப்படி வேணுமானாலும், யாருடைய கேர்ள் பிரண்டாக வேணுமானாலும் இருந்திருக்கலாம். அதனால் கவலையில்லை. என்னிடம் வந்தபிறகு எப்படி இருக்கிறாள் என்றுதான் பார்ப்பேன்.

**கேள்வி:-** **நீங்கள் பேசும் விஷயங்கள் நம் இந்தியப் பண்பாட்டுக்கு ஒத்துவராதே?**

**பதில்:-** இந்திய கலாச்சாரம் என்று எதைச் சொல்றீங்க? மற்றவர்களுக்குத் தெரியாமல் என்ன தவறு வேண்டுமானாலும் செய்யலாம் என்பதுதானே. நம்பளை நாமளே ஏமாற்றிக்கொள்ளும் இந்நிலை மாறவேண்டும். திரைமறைவில் தவறு செய்வதும், அடுத்த வீட்டு ஜன்னலை எட்டிப்பார்த்து அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதும், மற்றவர்கள் தவறாக நினைத்து விடுவார்களோ என்று பயந்து, பயந்து வாழ்வதும்தான் என்று சொன்னால் அந்தக் கலாச்சாரம் எனக்குத் தேவையில்லை."

**கேள்வி:-** **வாழ்க்கையில் இலட்சியம்...?**

**பதில்:-** அப்படி எல்லாம் ஒன்றும் கிடையாது. விருதுகளுக்காகவோ, கலைச்சேவைக்காகவோ நான் இத் தொழிலில் இல்லை. இனியொரு முறை பிறக்கப் போவதில்லை. கிடைத்த இந்த வாழ்க்கையை நல்லபடியாக வாழ்ந்துவிடவேண்டும். அவ்வளவுதான்.

## ...ஷ்பு குஷ்புதான்

...யாளத்தில் அதிக சம்பளம் வாங்கிய நடிகை குஷ்புதான். ...ம்பி' படம் வெற்றிகரமாக ஓடியபோது மலையாளத்தில் ... என்ற படத்தில் நடித்தார் குஷ்பு. அதற்காக குஷ்பு ... தொகை 10 இலட்சம். இதுவரை மலையாளத்தில் வேறு ...கையும் அந்தளவுக்கு வாங்கவில்லை.

...த்தில் ஒரு மலையாள படத் தயாரிப்பாளர் கௌதமியை ...னாராம். 14 இலட்சம் ...ராம் கௌதமி. மயக்கம் ... குறையாக ஓடிவிட்டாராம் ...ளர். கௌதமி குஷ்புவாக

## ...ளவிடு நக்மா

...ளல்' படத்தில் ...ின் ஜோடியாக ...மாவை அணு ...ளாம். 28 ... தந்தால் ...ப்பேன் ...ாம் ...

## மோகினியின் கூச்சல்

விஸ்வநாத் படத்தில் சரவணனுக்கு ஜோடியாக நடிக்கிறார் மோகினி. சரவணனுக்கு மார்க்கெட் சரியில்லையென்பதால் மோகினி பந்தா காட்டுகிறார்.

பாடல்காட்சியொன்றில் மோகினியை அணைத்து நடிக்க வேண்டும். மோகினியின் பந்தாவைக் கண்டு பயந்த சரவணன் முதலில் தயங்கினார். பின்னர் இயக்குநர்தான் 'பயப்படாமல் நடியுங்கள். அவங்க ஒத்துழைப்பாங்க' என்றாராம்.

பாடல்காட்சிப்படி மோகினியின் வயிற்றில் கை போட்டு அணைக்க வேண்டும். அப்படியே செய்தார் சரவணன். திடீரென்று ஒரே கூச்சல். கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் பண்ணியவர் மோகினிதான். "படாத இடத்தில் கை படலாமா? இவருக்கு காதல் காட்சிகளில் பக்குவமாக நடிக்கவே தெரியவில்லை" என்று சத்தம் போட்டாராம் மோகினி.

சரவணனுக்கு மட்டும் மார்க்கெட் சரியாக இருந்திருந்தால் மோகினி தானாகவே சாய்ந்திருப்பார் என்கிறார்கள் படப்பிடிப்புக் குழுவினர்.



விஜயசாந்தி-சங்கவி
படம்: அபூர்வ சகோதரிகள்



ராஜஸ்ரீ
படம்: ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே

* ஆர்.கே.செல்வமணி தயாரித்த 'பொன்விலங்கு' படத்தை இயக்கியவர் ராஜ்குமார். அப்படத்தோல்வியால் நான்கு ஆண்டுகளாக படவாய்ப்புக்கள் இல்லாதிருந்த இவர் புதிய படமொன்றை இயக்கவுள்ளார். இதில் கதாநாயகனாக நடிக்கிறார் பிரபு.

* மணிரத்னத்தின் 'ஆனந்தம்' படத்தில் நடிகர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டு அடிக்கடி மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாக வெளிவந்த தகவலின்படி ரேவதி புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

* 'பூஞ்சோலை' படத்தில் கதாநாயகனாக நடித்து வரும் கங்கை அமரனின் மகன் வெங்கட் பிரபு, 'மாணிக்கம்' படத்தில் தந்தையின் சகோதரரான இளையராஜாவின் மகன் கார்த்திக் ராஜா இசையில் பாடலொன்றைப் பாடியுள்ளார்.

* பாண்டியராஜனும், விக்னேஷும் இணைந்து புதிய படமொன்றில் நடிக்கவுள்ளனர். இந்தப்படத்தை கலைச்செல்வன் என்பவர் இயக்கவுள்ளார். இவர் 'பூந்தோட்டக் காவல் காரன்' செந்தில்நாதனிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றியவர்.

## மினி சினி



* பிரபு, கார்த்திக் ஆகியோருக்கு ஜோடியாக நடித்து வரும் நக்மா, 'தாயகம்' படத்தை அடுத்து ராவுத்தர் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் 'உளவுத்துறை' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடிக்கவுள்ளார்.

* இந்தியில் அஜய் தேவ்கன் கதாநாயகனாக அறிமுகமான 'ஃபூல் அவுர் காண்டே' படத்தில் இவருக்கு ஜோடியாக நடித்தவர் மது (நம்ம மதுபாலா தாங்க). நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இருவரும் புதிய படமொன்றில் மீண்டும் இணைகின்றனர்.

* கே.சுபாஷ் இயக்க, அஜித்குமார் நடிக்கும் படத்திற்கு 'நேசம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் கதாநாயகியாக புதுமுகம் ஒருவர் அறிமுகமாக இருக்கிறார்.

* கே.பாலச்சந்தர் இயக்கத்தில் 'கல்கி' படத்திலும் நான்கு மலையாளப்படங்களிலும் நடித்துவரும் ரகுமான், 'யுவ சைன்யம்' என்ற புதிய தெலுங்குப் படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* ராஜ்கபூர் இயக்கத்தில், சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் 'வள்ளல்' படத்தில் ரோஜா, மீனா, சங்கீதா ஆகியோர் கதாநாயகிகள். இதில் சங்கீதா சத்யராஜிற்கு தங்கையாக நடிக்கிறார்.

* ரஜினியின் 'முத்து' படத்தில் இடம்பெற்ற 'தில்லானா தில்லானா...' பாடலை தெலுங்கில் பாடியுள்ளவர் இலா அருண். இவர் 'கல்நாயக்' படத்தில் இடம்பெற்ற 'சோளி கே பீச்சே...' என்ற பாடலைப் பாடியவர்களில் ஒருவர்.

## 'மாப்ளே கவுண்டர்' பிரபுவின் புதிய படம்

'வைதேகி கல்யாணம்', 'பெரிய கவுண்டர் பொண்ணு' ஆகிய படங்களை இயக்கியவர் மணிவாசகம். இப்போது பிரபுவை வைத்து புதிய படம் ஒன்றை இயக்கப்போகிறார்.

புதிய படத்திற்கு மணிவாசகம் சூட்டியுள்ள பெயர் 'மாப்ளே கவுண்டர்', பிரபுவின் ஜோடியாக நடிக்க பிரபல கதாநாயகி ஒருவரை அணுகியுள்ளனர்.

நகைச்சுவை, குடும்ப பாசம் நிறைந்த கதை. விரைவில் படப்பிடிப்பு ஆரம்பமாகப்போகிறது.

## திரையில் இந்தியன்



கமல்
படம்: இந்தியன்

பெரும் எதிர்பார்ப்புடன் திரைக்கு வந்துள்ள படம் 'இந்தியன்'. சூப்பர் மசாலா கலந்து இலஞ்ச ஒழிப்புக் கருத்தை சொல்லுகிறார்கள். முதலில் கதைச்சுருக்கம்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் குதித்து, நேதாஜி சுபாஸ் சந்திரபோசின் படையில் சேர்ந்து போராடியவர் சேனாபதி. சுதந்திரப் போராட்டத்தின் பின்னர் மண வாழ்க்கையைத் தொடங்குகிறார். ஒரு மகள். ஒரு மகன். மகள் தீவிபத்தில் சிக்கி உயிருக்காகப் போராடுகிறாள். அவளைக் காப்பாற்ற ஒரு டாக்டரும், கிராம அதிகாரியும், பொலிசும் இலஞ்சம் கேட்கிறார்கள். இலஞ்சம் கொடுக்க மறுக்கிறார் சேனாபதி. மகள் இறக்கிறாள்.

கொதித்தெழுகிறார் சேனாபதி. இலஞ்சம் கேட்கும் அதிகாரிகளை வேட்டையாடும் இலட்சியத்தோடு புறப்படுகிறார். அதிகாரிகளை கத்தியால் குத்திச் சாய்க்கிறார்.

சேனாபதி இலஞ்ச ஒழிப்பில் குதித்திருக்க, அவர் மகனோ நேர் எதிராக இருக்கிறான். இலஞ்சம் வாங்குகிறான். குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கிறான். இறுதியில் தனது மகனைக் கொல்கிறார் சேனாபதி. கொன்றுவிட்டு இந்தியன் இன்னும் சாகவில்லை என்று கம்பீரமாக நடைபோடுகிறார்.

சேனாபதியாகவும், மகனாகவும் கமல் நடிக்கிறார். இளைய கமலை அப்பா கமல் கொல்வது சோகமாக இருந்தாலும் நியாயமாகப்படுகிறது.

அப்பா கமலுக்கு ஜோடி சுகன்யா. மலரும் நினைவுகளில் கமல்-சுகன்யா சம்பந்தப்பட்ட காட்சிகள் நயமாகப் படமாக்கப்பட்டுள்ளன.

சுதந்திரப் போராட்ட காலச் சம்பவங்கள் கறுப்பு-வெள்ளையில் காட்டப்படுகின்றன. கலர் இல்லாத பிரமாண்டம்.

[illegible] சொல்லும் காட்சியில் கமலின் ஆவேச நடிப்பு முத்திரை பதிக்கிறது.

பாடல் காட்சிகளில் தொழில் நுட்ப வித்தை வியப்பூட்டுகிறது. மிருகங்களையும், கமலையும் உருமாற்றிக் காட்டி அசத்தியிருக்கிறார்கள்.

பணத்தைக் கொட்டி அவுஸ்திரேலியாவில் படமாக்கப்பட்ட பாடல் காட்சி கண்களுக்கு விருந்து. கமல் மனிஷாவுடனும், கங்காருகளுடனும் துள்ளுகிறார்.

மனிஷாவுக்கும், ஊர்மிளாவுக்கும் நடிக்கவேண்டிய சிரமத்தைக் கொடுக்கவில்லை. சுவையான மசாலாவுக்காக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

ஏ.ஆர்.ரகுமானின் இசையும் படத்திற்கு உயிரூட்டுகிறது.

இயக்குநர் சங்கர் கமலை வைத்து உயிர்த்துடிப்பான பிரமாண்டம் காட்ட பலத்த முயற்சி செய்திருக்கிறார். தொய்வில்லாமல் படம் நகர்கிறது. படம் வெளியாக முன்னரே ஏகப்பட்ட எதிர்பார்ப்பு இருந்தமையால், 'அட இவ்வளவுதானா?' என்ற உணர்வு ஏற்படுவதைத் தவிர்க்க முடியவில்லை. படத்தின் பிரமாதமான வெற்றிக்கு அது ஒரு பலவீனமாகலாம்.

இந்தியா தவிர, உலகில் பலநாடுகளில் இந்தியன் [illegible] திரையிடப்பபட்டுள்ளது. சில நாடுகளில் புலிகள் இயக்கத்திற்கு சார்பான நிறுவனங்கள் இந்தியனை வாங்கித் திரையிட்டுள்ளன.

விரைவில் இலங்கையிலும் திரையிடப்படப் போகிறது இந்தியன்.

பல கோடி செலவில் உருவான 'இந்தியன்' வெற்றிப் படமாக அமைந்தாலும், போட்ட முதலை திருப்பி எடுக்கக்கூடியளவுக்கு வெள்ளி விழாப் படமாக மாறுமா?

முன்கூட்டியே உருவாக்கப்பட்ட பலத்த எதிர்பார்ப்பு படத்தின் சூப்பர் வசூலுக்கு பாதகமாகலாம் என்றே திரையுலக வட்டாரத்தில் பேசப்படுகிறது. இன்னும் ஒரு வாரம் சென்றால் தான் சரியான கணிப்பைச் சொல்லமுடியும்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# ஆதிக்கம் உதவாது

இந்தியாவில் சாகித்ய அக்கடமி பரிசு பெற்ற நாவலாசிரியர்களில் ஒருவர் பொன்னீலன். பெண்கள் தொடர்பான கேள்விகளுக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றில் இருந்து:

**இன்றைய சினிமாக்களிலும், நாவல்களிலும் இப்போது பெண்களை எப்படிக் காண்பிப்பதாக நினைக்கிறீர்கள்?**

சிறிது காலத்திற்கு முன்பு 'விதி' என்ற படத்தில் ஏமாற்றப்பட்ட ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் காட்டினார்கள். லேட்டஸ்டாக 'மறுபடியும்' என்ற படத்தில் தன்னை ஏமாற்றிய கணவனுக்கு மனைவி தந்த தண்டனையையும் காட்டினார்கள். இரண்டிலுமே கதாநாயகிகள் வாழாவெட்டிகளாகவே சித்தரிக்கப்பட்டிருக்கின்றனர். இது உண்மையில் போலித்தனமானது.

**சமீபகாலமாக ஆண்களிடமும், பெண்களிடமும் ஓரினச் சேர்க்கை முறை அதிகரித்து வருவதாக கூறப்படுவது பற்றி?**

ஓரினச் சேர்க்கை முறை என்பது மிக நீண்டகாலமாக சமூகத்தில் இருக்கிறது. சிலர் மட்டுமே சில நெருக்கடிகளில் இதனைத் தொடர்கின்றனர். இதை ஒரு தவறான விஷயமாக சொல்லமுடியாது. இது அனுதாபமாக நோக்க வேண்டிய தீர்வே ஒழிய, ஒரு கம்பீரமான தீர்வு அல்ல.

**இன்றைய சூழ்நிலையில் குடும்ப அமைப்பு என்பது தேவையா?**

குடும்ப அமைப்பு என்பது மனித நாகரிகம் மிக நீண்டகாலமாக கண்டுபிடித்த ஒரு அற்புதமான வடிவம். அது கண்டிப்பாகத் தேவை. ஆனால், அது



இறுகி, ஆதிக்க வடிவமாக மாறிவிடக்கூடாது. அப்படி மாறும் பட்சத்தில் அது உடைத் தெறியப்பட வேண்டியது அவசியம். குடும்பமும் ஜனநாயகமயப்படுத்தப்பட்டே ஆகவேண்டும்.

# கோடைகால ஸ்பெஷல்

## என்ன குடிக்கலாம்?

* கோடை வந்து விட்டாலே உடலில் இருந்து அளவுக்கதிகமாக வியர்வை வெளியேறுவதால் நிரந்தரமாக ஒரு தாகம் நம்மிடம் இருக்கும். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் ஏராளமாகத் தண்ணீரைப் பருகுங்கள்.
* செயற்கைக் குளிர்பானங்களைவிட பழச்சாறு மிகவும் ஏற்றது. ஐஸ்கட்டிகள் போட்டுத்தான் அருந்த வேண்டும் என்பதில்லை. அப்படியே கூட அருந்தலாம்.
* தோடம்பழம், திராட்சை, அப்பிள் போன்றவற்றின் சாறுகளையும் அருந்தலாம். இவற்றை விட இளநீர் அருந்துவது மிகவும் நல்லது.
* இளநீர் விலை கொஞ்சம் கூட என்று தோன்றினால் வீட்டில் தயார் செய்த குளிர்ந்த மோரைப் பருகலாம். கூடுமான வரை உப்பு, தாளிப்புகள் இல்லாமல் அருந்துவது நல்லது.
* எலுமிச்சம் பழச்சாற்றை அன்றாடம் ஒரு முறை அருந்துவது மிகவும் நல்லது.



செலவு குறைவான ஒன்றாகும்.

* மதுபான வகைகள், புகைபிடிக்கும் பழக்கம் போன்றவற்றைக் கோடை நாட்களில் அறவே தவிர்ப்பது மிகவும் நல்லதாகும்.
* குளிர்ந்த நீரில், காலை, மாலை ஆகிய இரண்டு வேளைகளிலும் நீராடுவது உடலுக்கு மிகவும் உகந்தது.

## குளிக்குமுன் கவனிக்கவும்

பச்சைத் தண்ணீரில் குளிக்கும்போது எடுத்த உடனேயே தலையில் தண்ணீரை ஊற்றக் கூடாது. முதலில் கால்கள், இடுப்பு, மார்பு என்று படிப்படியாகத் தண்ணீரை ஊற்றி உடலை நனைத்துக் கொண்ட பின் தலையில் தண்ணீரை ஊற்ற வேண்டும். இதனால் தடிமன், சளி, இருமல் போன்ற தொந்தரவுகள் ஏற்படாது.

உடல் உஷ்ணம் சமநிலை அடைந்து நீரின் குளிர்ச்சியை ஏற்றுக் கொள்வதால் புதிய இடங்களில் குளிப்பவர்கள், தண்ணீர் ஒத்துக் கொள்ளாதவர்கள் கூட இந்த முறையைப் பின்பற்றலாம். ஆறு, குளங்கள் என்றால் மெதுவாக இறங்கிச் சென்று குளிக்கலாம்.

## மாலையில் வேலை

* வாகனங்கள் வைத்திருப்போர், வர்த்தகப் பிரதிநிதிகள் போன்றவர்கள் காலையிலேயே தாங்கள் சந்திக்க வேண்டிய நபர்களைச் சந்தித்து விட்டு நண்பகலுக்கு முன்பாகவே தங்கள் இருப்பிடங்களை அடைந்து விட்டு, பிறகு மாலையில் தங்கள் பணிகளைத் துவக்கலாம்.
* கோடைக்காலத்தைப் பொறுத்தவரை பகல் பொழுது அதிகமாக இருப்பதாலும், சூரியோதயத்தின் நேரம் முன்னதாகவே இருப்பதாலும் அதிகாலையிலேயே எழுந்து நம் பணிகளைச் செய்து விடுவது நல்லது. காலை பத்து மணிக்குள்ளாக ஒரு நாளின் பாதி வேலைகளை நம்மால் செய்து விட முடியும்.
* மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் தலைக்குத் ஹெல்மெட்டும், கூலிங் கிளாசும் அணிந்து செல்வது மிகவும் நல்லது. ஓரளவு பயணக் களைப்பைப் போக்க அது உதவும். சைக்கிள்களில் பல இடங்களுக்குச் சென்று பணிபுரிவோர் டயர்களில் சற்றுக் குறைவாகக் காற்றடித்துச் செல்வதால், வழியில் டயர் பழுதாகும் வாய்ப்பைத் தவிர்க்கலாம்.



## பொருத்தமான ஆடைகள்



* நைலோன், நைலக்ஸ் போன்ற புடவைகள், ஜாக்கெட்டுக்களை அணிவதைவிட பருத்திப் புடவைகளை அணிவது மிகவும் நல்லது. அல்லது சுடிதார், மிடி போன்றவற்றை அணியலாம். காற்றோட்டத்திற்கு ஏதுவான உடைகளே மிகவும் சிறந்வை. ஆண்களும் கூடுமான வரை பருத்தியினால் ஆன ஆடைகளை அணிவது உடல் உஷ்ணத்தைத் தணித்து இதம் தரும்.
* முகத்துக்கு மேக்கப் போட்டுக் கொள்வதைப் பொறுத்தவரையில் அவரவர் தோலின் தன்மைக்கேற்ப அலங்காரங்களைச் செய்து கொள்வது மிகவும் சிறந்தது.
* பவுடர் போடுவதை கூடுமானவரைத் தவிர்த்துவிட்டு சாதாரணமாக மேக்கப்போட்டுக் கொள்வதுதான் சிறந்தது.

## என்ன சாப்பிடலாம்?

* தினந்தோறும் கீரைகளில் ஒரு வகையை உணவில் அவசியம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
* சாப்பாட்டில் நெய் சேர்த்துக் கொள்ளலாம்.
* கோழிக்கறி, கடல்மீன் உணவு வகைகளைத் தவிர்த்து விட வேண்டும். அவற்றிற்குப் பதிலாக ஆட்டிறைச்சியைச் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம்.
* வெள்ளரிப் பிஞ்சு, உலர் திராட்சை, பேரீச்சம்பழங்கள் சாப்பிடுவது நல்லது.
* உணவில் காரம், புளி, உப்பு எந்த அளவு குறைவாகச் சேர்க்க முடியுமோ, அவ்வளவு குறைவாகவே சேர்க்க வேண்டும்.
* சைவ உணவு சாப்பிடுவோர் காய்கறி சூப், அசைவ உணவு சாப்பிடுவோர் மட்டன் சூப் பருகலாம்.
* நன்னாரி நீர், வெட்டிவேர் நீர், இளநீர், நீர்மோர் போன்றவை தாகம் தீர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது.
* பூண்டு, இஞ்சி, ஊறுகாய் உடல் உஷ்ணத்தை அதிகரிக்கும் தன்மையுடையன. எனவே இவற்றைக் கோடையில் தவிர்க்க வேண்டும்.
* தினமும் குறைந்தது 4 லீட்டர் குளிர்ந்த நீரைப் பருக வேண்டும்.
* குளிக்கும் போது சோப் உபயோகிப்பதை விட, கோடை காலத்தில் கடலை மாவு, அல்லது பயத்தம் மாவு உடலுக்கு இதம் தரும். சருமத்தில் வறட்சி, வெடிப்பு ஏற்படாது.

# தயிரோ தயிர்

ஒவ்வொரு வீட்டிலும் கோடை காலத்தில் பொதுவாகத் தயிர் உபயோகப்படுத்த வேண்டும். ஏனெனில் கோடைகாலத்தில் தயிரை உபயோகப்படுத்துவதால் மனிதருடைய மூளைக்குக் குளிர்ச்சியைத் தருவதோடு வயிற்றின் வளர்ச்சியையும் தடுக்கிறது.

தயிர் ஆரோக்கிய உணவில் முக்கிய பங்கு வகிக்கிறது. எலும்பு வளர்ச்சிக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்து தயிரில் அதிகமாக உள்ளது. தலையில் ஏற்படும் இளம் வழுக்கையை, அதாவது முடி உதிர்வதைத் தடுக்கிறது. எப்படி என்கிறீர்களா?

தினசரி காலையில் எழுந்து குளிக்கச் செல்லும் முன் தலையில் அரை மணிநேரம் தயிர் மசாஜ் செய்து பின்னர் ஓடும் தண்ணீரில் குளித்து வந்தால் இளம் வழுக்கையைத் தடுக்கலாம். இதே போல் உழுத்தம் மாவையும், தயிரையும் கலந்து பிசைந்து முகத்தில் பூசி வந்தால் நாள்பட்ட முகப்பருக்கள் கூட நீங்கி விடும்.

வருடம் முழுவதும் தயிர் சாப்பிட்டு

## லேடீஸ் ஸ்பெஷல்



வருவதால் ஆபிரிக்காவில் உள்ள மலைஜாதியினர்களுக்கு மாரடைப்பு நோயே வருவதில்லை எனச் சில மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.

# ஒலிம்பிக் திருவிழா

## தோற்றமும்–சாதனைகளும்

ஒலிம்பிக் விளையாட்டுகள் கிறிஸ்துவுக்கு முன்னர் 1370ல் ஆரம்பமானது என்று சொல்லப்பட்ட போதும், கி.மு.776 ஜூலையில் நடைபெற்ற பின்னர்தான் முறையான பதிவுகள் இடம்பெற்றன. எனினும் இத்தாலி-மிலான் நகரில் கி.பி. 393ல் உரோமாபுரி அரசனால் ஒலிம்பிக் தடை செய்யப்பட்டது.

தற்கால ஒலிம்பிக் போட்டிகள் கிறீசிலுள்ள ஏதன்ஸ் நகரில் கி.பி. 1896 ஏப்ரல் 6ல் தொடங்கியது. அன்று தொடக்கம் 1992 வரை 23 கோடை கால விளையாட்டுகள் உலகின் பல்வேறு நகரங்களில் நடைபெற்றுள்ளன. இந்த விளையாட்டுகளில் அவுஸ்திரேலியா, ஃபிரான்ஸ், கிறீஸ், பிரித்தானியா, சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளே தவறாமல் பங்கு பற்றியுள்ளன.



### அதிகமான விளையாட்டு வீரர்கள்

ஸ்பெயின் நாட்டின் பார்சேலோனா நகரில்-1992ல் நடைபெற்ற கோடைகால விளையாட்டுகளில் தான் அதிகமான விளையாட்டு வீரர்கள் பங்கு பற்றினர். இதில் 6659 ஆண்களும் 2710 பெண்களுமாக மொத்தம் 9369 வீரர்கள் பங்கேற்றனர்.

### அதிகமான பார்வையாளர்கள்

நோர்வேயில் ஒஸ்லோ நகருக்கு அணித்தாக ஹொல்மென் கோலனில் 1952ல் ஒலிம்பிக்-பனிக்கால-பனிச்சறுக்கல் போட்டிகளைப் பார்க்கவே மிக அதிகமான பார்வையாளர்கள் குவிந்தனர், இவர்களின் எண்ணிக்கை 10 இலட்சத்து 41 ஆயிரத்தி 2 பேர்.

ஜப்பான் தலை நகரான டொக்கியோவில் 1964 ஒக்டோபரில் இடம் பெற்ற தொடர் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்டோரின்-ஓட்டப் போட்டியாளர்கள் சென்று கொண்டிருந்த பாதைகளில் நின்று பார்வையிட்டோரின் தொகை 5 இலட்சம் முதல் 15 இலட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸில் 1984ல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டோர் தொகை-57 இலட்சத்து 923 பேர்.

### தங்கப் பதக்கங்கள்

அமெரிக்க வீரரான ரெய்மண்ட் கிளாரன்ஸ் எவ்ரே என்ற வீரர் 1873 முதல் 1937 வரையில் தடகளப்போட்டிகளில் பங்கேற்று மொத்தம் 10 தங்கப் பதக்கங்களை வென்ற சாதனையாளராவார்.

செக்கோஸ்லவாக்கியாவைச் சேர்ந்த பெண் வீராங்கனையான வெரா காஸ்லவ்ஸ்கா ஒட்லொஸில்- ஜிம்னாஸ்ரிக் உடற்பயிற்சி சாதனைகளுக்காக 7 தங்கப் பதக்கங்களை வென்றார்.

மியுனிச் நகரில் 1972ல் நடைபெற்ற நீச்சல் போட்டிகள் பலவற்றில் கலந்து கொண்டு ஒரே நபர் 7 தங்கப் பதக்கங்களைப் பெற்றார். இவர் அமெரிக்க நாட்டவரான மார்க் அன்ட்று ஸ்பிட்ஸ் ஆவார்.

### ஜிம்னாஸ்ரிக் தங்கப் பதக்கங்கள்

சோவியத் யூனியனைச் சேர்ந்த லரிஸ்ரா லட்டினினா என்பவர் ஜிம்னாஸ்ரிக்-பயிற்சிகளுக்காக 18 தங்கப் பதக்கங்களை வென்றார். ஆண்களுக்கான இதேபோட்டிகளில் 15 தங்கப்பதக்கங்களை வென்றவர் நிக்கோலாய் ஆன்டிரியானோவ். 1980ல் நடைபெற்ற ஜிம்னாஸ்ரிக் போட்டிகளில் சோவியத் யூனியனைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் டிற்ரியாட்டின் 7 தங்கப்பதக்கங்களை வென்றார்.

ஹில்டா லோர்னா ஜோன்ஸ்ரன் என்பவர் தனது எழுபதாவது பிறந்த நாளைக் கொண்டாடி ஐந்தாவது நாளில் 1972ம் ஆண்டு ஒலிம்பிக்ஸில் கலந்து கொண்டார். இவர் பிரிட்டனைச் சேர்ந்தவர். பிரிட்டனைச் சேர்ந்த 11 வயது 73 நாள் பராயமுடைய மகதலேனா செசிலியா கொல்லேஜ்-1932ல் நடைபெற்ற ஒலிம்பிக்ஸில் பங்கேற்ற வயது குறைந்த போட்டியாளராவார்.

டென்மார்க்கைச் சேர்ந்த டாக்டர் இவான் ஒஸிர் தனது 77 வது வயது வாழ்க்கையில் 40 வருடங்களுக்குள் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் எல்லாவற்றிலும் பங்கு பற்றியுள்ளார். வாள் வீச்சு இவருடைய துறை.

# விரலுக்கு ஏற்ற வீக்கம்

## இல்லத்தரசிகளுக்கு யோசனை

வழக்கமான வருமானத்தில் திடீர் என்று வரவு குறைந்துவிட்டால் கடன் வாங்காமல் எப்படிச் சமாளிக்கலாம் என்று இல்லத்தரசிகளுக்குச் சில யோசனைகள்:

* வருமானம் குறையும் போது வசதிகளைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ள வேண்டும்.
* சாப்பாட்டு விஷயங்களில் சிலவற்றைக் குறைத்துக் கொள்ளலாம்.
* சாப்பாட்டை அளவுக்கு அதிகமாகச் செய்து கொட்டாமல் அளவாகச் செய்யலாம்.
* வீட்டில் அநாவசியமாக மின் உபகரணங்களைப் பயன்படுத்தாது மின்சாரச் செலவைக் குறைக்கலாம்.
* புதுத்துணிமணிகள் எடுப்பதையும், ஷொப்பிங் செல்வதையும் குறையுங்கள்.
* குழந்தைகளுக்கு அன்றாடம் கடையில் காசு கொடுத்துப் பண்டங்களை வாங்கிக் கொடுப்பதைத் தவிர்த்து வீட்டில் எளிமையாக ஏதாவது பண்டங்கள் செய்து கொடுக்கலாம்.
* ஹோட்டல்களுக்குப் போய்ச் சாப்பிடுவதை விட்டு விடலாம்.
* சினிமாவுக்குப் போவதைத் தவிர்த்து விடலாம்.
* விலை குறைவாக உள்ள காய்கறிகளை வாங்கிப் பயன்படுத்தலாம்.
* ஒவ்வொரு நேரமும் தனித்தனியே சமையல் செய்து கொண்டிருக்காமல், இரண்டு நேரத்திற்கு சேர்த்தே சமையல் செய்து விடலாம். இதனால் நிறைய செலவுகளைக் குறைக்கலாம்.
* இதே போன்று வருமானம் அதிகமாகும் போது தாம் தூம் என்று செலவு செய்து விடாமல், வீட்டிற்குத் தேவையான தளபாடங்களையும், மின் உபகரணங்களையும் வாங்கலாம்.



* கடன்களை அடைக்கலாம்.
* வங்கியில் சேமிப்புக் கணக்கில் போடலாம்.
* துணிமணிகள், நகைகளை எடுக்கலாம்.
* வீட்டில் உள்ள பழுதுகளைச் சரி செய்யலாம்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது **சுகந்தினி**

## வாழைப்பழ நட்ஸ் ஐஸ்கிறீம்

**தேவையானவை:**

பெரிய வாழைப்பழம்-4
காய்ச்சிய பால்-2கப்
சீனி- 2 தேக்கரண்டி
முந்திரிப் பருப்பு-10
பாதாம் பருப்பு- 5
பிஸ்தா பருப்பு- 5
ஏலப்பொடி- 1/2தேக்கரண்டி

**செய்முறை:**

வாழைப்பழம், சீனி, ஏலப்பொடி, பால் ஆகியவற்றை சேர்த்து மிக்ஸியில் அரைத்து ப்ரிட்ஜில் வைக்கவும். ஐஸ்கிரீம் உறைபருவம் ஆனதும் அதன் மேல் முந்திரிப்பருப்பு, பதாம் பருப்பு, பிஸ்தா பருப்பு ஆகியவற்றைத் தூளாக்கி, ஐஸ்கிறீமின்மீது பரவலாகத் தூவி விடவும். இப்போது வாழைப்பழ- நட்ஸ் ஐஸ்கிறீமை எடுத்துப் பரிமாறலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** T

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15-06-1996

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## நீர்கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான். | அஜானி பர்னாந்து<br>மஸாஹிரா லேன், நீர்கொழும்பு. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com

## நெஞ்சுக்குள் நடுங்கும் நெருப்புச் சுவாலை

எனது சுவடுகளைத்
தேடித் தேடித்
தொடரும் விதியை
விரட்டியடிக்க முடியாமல்
வாழ்வை வெறுத்தேன்!

இரு கையில் தூக்க மாத்திரையும்
மறுகையில் தூக்குக் கயிறுமாகத்
தண்ணீர்க் கிண்ணமொன்றையும்
தொங்கக் கிளையொன்றையும்
தேடியலைந்த போதுதான்
மனிதர்களிடையேயிருந்து
எனது ஆன்மாவுக்கு
ரசப்பட்ட ஆதரவுகள்
எழுந்து வரத் தொடங்கின!

சவப்பெட்டிக்குள்
சரித்து வைக்கப்பட்டுப்
பாதி உயிருடன்
பாடையில் போய்க்கொண்டிருந்த
எனது வாழ்க்கையை
மீட்டெடுத்து
மறுவாழ்வு கொடுக்கப்பட்டது!

சோக மந்திரங்களால்
கட்டப்பட்டு
நடைப்பிணமாகியிருந்த நான்
என்னில் தூவப்பட்ட
வாழ்த்துக்களால்
புத்துயிர் பெற்றுச்
சிலிர்த்தெழுந்தேன்!

உனது நயவஞ்சகம்
என் வாழ்வின்
தொண்டைக்குழியைக் கடித்து
இரத்தம் உறுஞ்சிக்
கொண்டிருந்த
வேளையில்தான்
கோரப்பல் முளைத்த-உன்
காதலின்
கேவலம் புரிந்தது!

ஒற்றை ரோஜாவாய்
என் இதயத்தில்
இருந்த நீ – இன்று
வன்னிக் கழுதையாகி
நெய்தல் நிலங்களில்
நொண்டியடிக்கிறாய்!

ஏய்...!
கொஞ்சம் நிமிர்ந்து பார்!
இந்தச் செல்லப் புறாவின்
தங்கக் கூட்டுக்கும்
மணற்தரைகளில்
புதைந்தெழும்–உனது
பாதங்களுக்கும்
உள்ள தொலைவை....!

இப்போதெல்லாம்
காதலெனும்
குருட்டுத் திரை
கண்களை மறைக்காத படியால்
இருவருக்குமிடையேயுள்ள
இமாலய இடைவெளியை
உணர முடிகிறது!

பஹீமா ஜஹான், தொடகொல்ல, மெல்சிரிபுர.

## காதல் அவஸ்தைகள்!

கண்ணீரைக் குடித்து
சோகத்தை உண்டு
என் பொழுதுகள்
விடிகின்றன.
**
புன்னகையோடு வந்து
துயரத்தை பரிசளித்துவிட்டு
ஓடிவிட்டாள் [illegible]
**
இலட்சியங்களை இணைத்து
நான் கட்டியெழுப்பிய
காதல் மாளிகை, ஒரு
நொடிப் பொழுதில்
நொருங்கிப் போயிற்று!
**
காதலின்
இன்பப் பொழுதில்
கல்லாயிருந்த போன
என் வாலிபம்
மீள முடியாத
அவஸ்தைச் சிறைக்குள்
அகப்பட்டுக் கொண்டது.
**
வாழ வராத
அவளுக்காய்
காத்திருந்து.. காத்திருந்து
நரைத்துப் போயிற்று
எனது நம்பிக்கை!
**
வாழ்க்கையின் இனிய
அர்த்தத்தை தொலைத்து விட்ட
விரக்தியில்.
உயிர் மெல்ல-மெல்ல
அழிந்து போகும்.
இரு தருணம்...
**
ஓ...
காதலே!
என் முகவரியையும்
நீ
கொள்ளையடித்த காதலர்களின்
பட்டியலில் எழுதி விடு..!

கே.எம்.மாஹிக், அல்லை நகர், தோப்பூர்-05

## கஷ்டமான கவிதை

புவியின் கவர்ச்சி விசை
என்னை மட்டும்
புறக்கணித்துவிட்டது!

எருக்கிலைப் பஞ்சாய்
காற்றிலே மிதந்து
புவியைவிட்டு உயர்ந்தேன்!

சந்தோசத்தால்
இதயம் வெடித்துச் சிதறியது!

உயிரை
உயிராய் மதிக்காத
உலகை விட்டுப் போவதில்
எனக்கு
உடன்பாடுதான்!

இந்த கேடுகெட்ட மனிதர்கள்
இல்லாத வாழ்க்கை
எத்தனை மகத்தானது
தெரியுமா?

தாயில்லாத் துயர்
இன்றுதான்
என்னை துன்புறுத்தியது!
இல்லையென்றால்
இந்த வாழ்க்கையே
சொர்க்கமென்பேன்!

பல்லாயிரம் மைல்கள்
மேலே சென்றிருப்பேன்!
உருண்டையொன்று
என்னை நெருங்கியதோடு
கவர்ந்திழுப்பதுவும் விளங்கியது!

புவி என்னை
துரத்தியபோது
அது என்னை
அணைத்துக் கொள்ள
அழைப்பது
மனதுக்குள்
மத்தாப்பு வெடிக்க வைத்தது!

காலூன்றினேன்:
அது பெரியதோர் கோள்!
புவி அதன்
குட்டியாக இருக்கலாம்!

தேசங்களெல்லாம்
அவுஸ்திரேலியாவாக,
காஷ்மீராக,
நுவரெலியாவாக
பச்சைப்பசேல் என்று...

குயில்களெல்லாம்
புதுக்கவிதையில் கூவின;
சிட்டுக் குருவிகள்
"ஹைக்கூ" சொல்லிக்
கத்தின!
அது கவிதை தேசம்தான்!
சமாதானத்திற்கு
பஞ்சமில்லை!

இதயம் விரிந்து
பல மடங்காய்
மலர்ந்தது!

டக்டக் காலடியோசை...
துப்பாக்கி வேட்டுக்கள்...
இலங்கை மொழியில்
கூக்குரல்கள்...
நம்மவர்கள்தான்!
ஓடிச் சென்று
உற்றுப்பார்த்தேன்!

இரத்தம் சொட்டச் சொட்ட
மனித மாமிசத்தை
சப்பிச்சப்பி...
பல்லை கிழித்து
வள்ளென்றது நாய்!

மீராவோடை எஸ்.நளீம்

## அந்தநாள் முதல் இந்தநாள்வரை....

தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி சிறு வயதில் எப்படி இருந்தார்? அதன் பிறகு ஒவ்வொரு காலகட்டத்திலும் எப்படி இருந்தார் என்பதைக் காட்டும் அரிய படங்கள்.




## 'எல்லோரும் உதவோம்..'

விலகு! விலகு!
வழி விடு!
எதிரே
இழுக்க முடியாத
மாட்டில் ஏறி
சமாதானம்
உலா வருகின்றது.
எந்நேரமும்
மாடு
படுத்து விடலாம்.
***
வண்டிக்காரனோ
குடிகாரன் போல
நிமிடத்துக்கு
ஒரு பேச்சு...!
விலகு! விலகு!
வழி விடு!
இன்றே-தன்
இலக்கை அடையட்டும்!
***
எஸ்.ஸ்ரீ, மண்ணம்பிட்டி.

## தேன் கிண்ணம்

## சந்தேகம்?

தொற்றக்
கூடாதது:
தொற்றினால்
பாசப் பற்றுக்கலி
அரித்துவிடும்
புற்றுக்
கறையான்!

அன்புக்
கட்டிடத்தை
அஸ்திவாரத்தோடு
சாய்த்து விடும்
அதிசய பூதம்!

புரிந்துணர்வு
இல்லாதவர்களின்
புகலிடம்,
சரிந்து
போகும்
வாழ்க்கைக்கு
ஓர் சாட்சி!

அன்பிற்கு
அவமானச்
சின்னம்....
அழிவிற்கு
விசாலமான
பாதை......!

செல்வி.சுப்ரமணியம் வாணீஸ்வரி, அப்பர் கலஹா.

## காதல் தேடல்கள்

அன்பே....!
என்
இதயம்முழுக்க
ஈரப்படுத்தியது....
உன்
பனித்துளிப் பார்வைகள்.
**
நீ சொல்லவில்லையே–
உன்
முற்றமே
மூங்கில்தோப்பானதை...!
**
நமக்குள்
நெருக்கமான 'தூரம்'
தேய்ந்து போனது–
தென்றல் தூதுவனால்....!
**
உன் சிரிப்புச்சத்தம்
என் இதய அரங்கில்
சிலம்புகட்டி
நள்ளிரவெல்லாம்
நர்த்தனமாடும்....
**
ஊதாப்பூ
உதட்டழகியே
நான்
உஷ்ணப்படும் போது,
உன் இதழோரம்
ஈரலித்துப் போகிறதாம்...!
**
நம்
மௌன அகராதியிலிருந்து
இனி, காதலின்
உயிர் மெய்யெழுத்தை
உச்சரிப்போம் வா–
நிலா முற்றத்துக்கு...!
**
உன்–
மறைத்தலின் அழகினாலும்
"கத்தரிக்கா(த)"
பார்வையினாலும்
நான்
வார்த்தை(ச்)சுத்திரத்துள்
மூச்சுத் திணறி
மௌனித்துப் போகிறேன்...!
**
நான்
வாலிபத்தை
வடித்து(த்) தருகிறேன்....
உன் கிண்ணங்களில்
ஊற்றிக்கொள்ள,
உருகித்துடிக்கும்
இதழ்களால்
ஒருமித்தே
பருகிக் கொள்ளலாம்
இருவரும்....

வாசமதி, பொத்துவில்-02.

## இந்த வாரம் உங்கள் பலன்

( 09.06.96 முதல் 15.06.96 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன், புதன், செவ்வாய். |
| மிதுனம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |

சந்திரன்- கும்பம், மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப 1 மணி |
| திங்கள்- கடன் தொல்லை, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- துயர் நீங்கும், கௌரவம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| சனி- முயற்சி பலிதம், கடன் படல். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| திங்கள்- வீண் கலகம், பணக் கஷ்டம். | காலை 7 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், துயர் நீங்கும். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வியாழன்-பெரியோர் நட்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை 6 மணி |
| சனி- மனக் கலக்கம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| சனி- தொழில் மந்தம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், தொழில் இழப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| புதன்- இனசன விரோதம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| புதன்- பணக் கஷ்டம், கடன் படல். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, தொழில் கஷ்டம். | காலை 7 மணி |
| வெள்ளி- வீண் கலக்கம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி- தொழில் மந்தம், பொருள் செலவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- காரியானுகூலம், பொருள் வரவு. | காலை 9 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, பொருள் விரயம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| சனி- வெளியிடப் பயணம், கௌரவம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, பண வரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன் - வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை 7 மணி |
| சனி- புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- இனசன நன்மை, கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பண வரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- மனக் கலக்கம், அந்நியர் உதவி. | காலை 7 மணி |
| வியாழன்-துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| சனி- தொழில் சிறப்பு, இனசன நன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்-தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- வீண் முயற்சி, இனசன நன்மை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | காலை 7 மணி |
| வெள்ளி- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | காலை 6 மணி |
| சனி- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, காரியானுகூலம். | காலை 7 மணி |
| செவ்வாய்- பலவித பேறு, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| புதன்- இனசன நன்மை, பண வரவு. | காலை 7 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பலவித பேறு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| சனி- தொழில் பேறு, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- இனசன நன்மை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- வெளியிட பயணம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| வெள்ளி-அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| சனி- வீண் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, இனசன நன்மை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பண வரவு. | காலை 8 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | காலை 6 மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், தொழில் சிறப்பு. | பி.ப. 3 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1



படிப்பகம்

www.padippakam.com





## பனையின் பாடம் கற்கணும்

விசி எறிந்த பனையின் விதைகள்
விரைந்து வருகுது
மாசி லாமல் மாந்தர் களுக்குத்
தன்னைத் தருகுது!

உரமும் இன்றி நீரும் இன்றி
உயர்ந்து வளருது
உடலை முழுதும் உலகிற் காக
உவந்த ளிக்குது!

நெடிய வளர்ந்த ஆனைக் கால் போல்
நெருடு பனைமரம்;
கடிய இரும்புத் தூணைப் போன்ற
கருப்புப் பனைமரம்!

பனையைப் போல பயன்கள் செய்யும்
பாடம் கற்கணும்;
இணையி லாத நன்மை செய்ய
இன்றே நிற்கணும்!

ஏ.கோவிந்தராஜு.

சின்னஞ்சிறு குருவிபோலே-நீ
திரிந்து பறந்து வா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு- நீ
மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா!

-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை



# புதிதாய் வந்த ருசி

அம்மா தோட்டத்தில் வேலை செய்து விட்டுக் களைத்துப் போய் வந்தாள். கணவனை இழந்த அவள் தனது மகன் முத்துவைப் படிக்க வைப்பதற்காகத் தோட்ட வேலை செய்து வருகிறாள்.

பாடசாலையில் இருந்து வந்து திண்ணையில் முத்து வீட்டுப் பாடங்களை எழுதிக் கொண்டிருந்தான். தாயைக் கண்டதும் அவன்,"அம்மா பசிக்குது" என்றான்.

அவனைச் சிறிது நேரம் இருக்கச் சொல்லி விட்டு அவசர அவசரமாகச் சோறு சமைத்தாள். வாழைக்காய் ஒன்று இருந்தது. அதைப் பொரியல் செய்தாள். உருளைக் கிழங்கும், பருப்பும் சேர்த்து ஒரு கறி சமைத்தாள்.

பிறகு "முத்து சாப்பிட வா" என்று கூப்பிட்டு அலுமீனியத் தட்டை கழுவிப் போட்டாள். தண்ணீர் எடுத்து வைத்தாள்.

முத்து கை, கால் கழுவிக் கொண்டு வந்து சாப்பிட உட்கார்ந்தான். அவன் அம்மா தட்டில் சோற்றைப் போட்டு அதன் மேல் கறியை ஊற்றினாள். தட்டில் ஓரமாக வாழைக்காய் பொரியலை வைத்தாள்.

பின்னர் முத்துவைச் சாப்பிடச் சொன்னாள்.

ஒரு வாய் எடுத்துச் சாப்பிட்டிருப்பான் முத்து. 'தூ' என்று அதைக் கீழே துப்பினான்.

"என்ன முத்து?" என்று கேட்டாள் அம்மா.

"சோறு, கறி, பொரியல் ஒன்றுமே நன்றாக இல்லை.... ஒன்றுமே தொண்டைக்குள் இறங்க மாட்டேங்குது...எனக்கு ஒன்றும் வேண்டாம்!" என்று கோபமாக எழுந்து சென்று விட்டான் முத்து.

கொஞ்ச நாட்களாகவே முத்து இப்படிச் செய்து வருவது அம்மாவுக்கு ஞாபகத்திற்கு வந்தது. சோறு, கறி, பொரியல் ஆகியவற்றைப் பிசைந்து இரண்டு வாய் சாப்பிட்டுப் பார்த்தாள். எல்லாமே நன்றாக ருசியாகவே இருந்தன. ஏன் நன்றாக இல்லை என்று சொன்னான் என்று யோசித்தாள் அம்மா.

அன்று சனிக்கிழமை. அதனால் முத்து பாடசாலை செல்லவில்லை.

"முத்து இன்று என்னுடன் தோட்டத்திற்கு வா" என்று கூப்பிட்டாள்.

எப்போதுமே 'படி படி' என்று சொல்லும் அம்மா, தன்னோடு தோட்டத்திற்கு வா என்று கூப்பிட்டது முத்துவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவனுக்கும் அம்மாவுடன் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்ய வேண்டுமென்று வெகுநாட்களாக மனதில் ஒரு ஆசை இருந்தது. அம்மா கூப்பிட்டதும் உடனே அவன் புறப்பட்டு விட்டான்.

அம்மா அவனுக்கு ஒரு சாக்குப் பையைக் கொடுத்தாள். அவள் பறிக்கும் மிளகாய்களைச் சேகரிக்கும் வேலைதான் முத்துவுக்கு.

அம்மா ஒய்வு ஒழிச்சலின்றி மிளகாய்களைப் பறித்துப் போட்டுக் கொண்டே இருந்தாள். அவைகளைப் பொறுக்கிப் பொறுக்கி சாக்குகளில்போட்டு நிரப்பிக் கொண்டிருந்தான் முத்து. ஒரு நிமிஷம் கூட அவன் உட்காரவில்லை. காலைபோய், மதியம் போய், மாலை வந்தது. அப்போது தான் ஒரு வழியாக வேலை முடிந்தது.

குடிசைக்கு இருவரும் வந்தார்கள். அம்மா குளித்துவிட்டு சமையல் செய்ய ஆரம்பித்தாள். சிறிது நேரத்திலேயே சோறு. உருளைக்கிழங்கு, பருப்புச் சேர்த்து ஒரு கறி, வாழைக்காய் பொரியல் என்று சமைத்து விட்டாள்.

தட்டில் சாப்பாடு போட்டு மகனை அழைத்தாள். வழக்கம் போலவே கை, கால் அலம்பி விட்டு சாப்பிட உட்கார்ந்து கொண்டான்.

சோற்றைப் பிசைந்து பொரியலைத் தொட்டுக்கொண்டு சாப்பிட ஆரம்பித்தவன், "அம்மா இன்னும் கொஞ்சம் சோறு போடுங்கள், கறி ஊற்றுங்கள். கொஞ்சம் பொரியல் வையுங்கள்." என்றபடி சாப்பிட்டான்.

அம்மாவும் அவன் சாப்பிடுவதைப் பார்த்தபடியே இருந்தாள். சோற்றைப் பிசைந்து கவளம் கவளமாகச் சாப்பிட்டுக் கொண்டே தாயைப் பார்த்து,

"அம்மா நேற்று நீங்கள் இதே மாதிரி சமைத்தீர்கள். அவை நேற்று நன்றாக இல்லை. ஆனால் இப்போது மட்டும் இவ்வளவு சுவையாக இருக்கிறதே அம்மா?" என்று கேட்டான் முத்து.

"முத்து...நேற்று உடல் வருத்தி உழைக்கவில்லை. இன்று உன் வயதுக்கும் மீறி வேலை செய்தாய். அதனால் உனக்குப் பசி அதிகமாக உண்டாகியது. அதனால் தான் நேற்றைப் போலவே இன்று நான் சமைத்தாலும் அவை இன்று மிகவும் ருசியாக இருக்கின்றன," என்றாள் அம்மா.

பள்ளிக்கூடம் சென்றாலும் தினசரி ஏதாவது சிறிது உழைத்து விட்டுத் தான் சாப்பிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான் முத்து.

## மொஸாம்பிக் வாரம் ஒரு நாடு



**தலைநகர்**- மாபுடோ
**பரப்பு**- 7,83,030 சதுர கிலோமீட்டர்
**மக்கள் தொகை**- 1.53 கோடி
**மொழி**- போர்த்துக்கீஸ், பாண்டு
**எழுத்தறிவு**-30%
**சமயம்**- பரம்பரை நம்பிக்கைகள், இஸ்லாம், கிறிஸ்தவம்,
**நாணயம்**- மெட்டிக்கல்
**தனிநபர் வருமானம்**- 120 டொலர்.

**அமைவிடம்:-**
மொஸாம்பிக் பண்டைய போர்த்துக்கீஸியக் கிழக்கு ஆபிரிக்கா ஆகும். இந்தியக் கடலில் உள்ள மொஸாம்பிக் கால்வாய், கிழக்கில் இதனைச் சூழ்ந்துள்ளது. பெரும்பான்மையான மக்கள் பாண்டுப் பழங்குடிகள்.

**வரலாறு:-**
போர்த்துக்கல்லில் இருந்து 1975 ஜூனில் சுதந்திரம் பெற்றது. 250 உறுப்பினர்கள் கொண்ட அசெம்பளி உடையது. ஒரே கட்சி(மார்க்சிஸ்ட்) ஆட்சி.

**பொருளாதாரம்:-**
தானியங்கள், தேயிலை முக்கிய உற்பத்திப் பொருட்கள். விவசாயம் மறுமலர்ச்சி அடைந்து வருகிறது. நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. உலக 'டேன்டலைட்' இருப்பில் மூன்றில் இரண்டு பங்கு மொஸாம்பிக்கில் உள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.06.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 144
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 142

**பரிசுக்குரியவர்:**
செல்வி. எம். பாத்திமா பைரூஸா.
ஹில்ஸ் ரோட், தெஹிவளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ஆர்.பி. இம்மானுவேல். சாந்தி மாவத்தை, கலுகல, கட்டுகஸ்தோட்டை. | க. தேவிகா. வெஸ்ஹோல் தமிழ் வித்தியாலயம். |
| செல்வன். துஷ்யந்தன். ராஜா மாவத்தை வீதி, கொழும்பு-15. | செல்வன். ராகுல்ராஜ் நடராஜ். ரிப்பிக்கன் சர்வதேச பாடசாலை, நுவரெலியா. |
| செல்வன். சே. கௌதமன். சென் மேரிஸ் பாலர் பாடசாலை, மட்டக்களப்பு. | என். பானு. இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| செல்வி. ச. அர்ச்சனாராய். தர்மவிஜய மாவத்தை, பண்டாரவளை. | த. ஸ்கந்தரூபன். கல்பொத்த வீதி, கொழும்பு-13. |
| வடிவேலு பாலசந்திரன். டெஸ்போர்ட் த.வி., நானு ஓயா. | தேனுகா ராஜகுலேந்திரன், சூரியமல்புர பிளட்ஸ், கொழும்பு-13. |

## விட்டமின்கள்

♦ **விட்டமின்கள் என்றால் என்ன?**
நாம் உண்ணும் உணவில் இருக்கும் உயிர்ச்சத்து ஆகும்.

♦ **விட்டமின் பி1 யாரால் கண்டுபிடிக்கப் பட்டது?**
கிறிஸ்டியன் ஈஸ்மன் என்ற மருத்துவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

♦ **இங்கிலாந்து கப்பலோட்டிகளை ஏன் 'லைமீஸ்' என்று சொல்கிறார்கள்?**
அவர்கள் பல நாட்கள் கப்பலில் பயணம் செய்வதால் ஸ்கேவி எனப்படும் நோயால் தாக்கப்படும் அபாயம் உள்ளது. ஸ்கேவி வராமல் தடுக்க விட்டமின் சி பயன்படுகிறது. இது எலுமிச்சம்பழச்சாற்றில் அதிகமாக இருப்பதால் கப்பலோட்டிகள் எலுமிச்சம் பழச்சாற்றை அடிக்கடி குடிக்கிறார்கள். அதனால்தான் அவர்களை லைமீஸ் என்று சொல்கிறார்கள்.

எலுமிச்சைக்கு ஆங்கிலச் சொல்-லைம்-(LIME).




♦ **ஃபோலிக் அஸிட்டைக் கண்டுபிடித்தவர் யார்?**
டாக்டர் எல்லபிரகதா சுபாரோ மற்றும் அவரது குழுவினரான அமெரிக்க விஞ்ஞானிகள்.

♦ **விட்டமின் டியை எப்போது கண்டுபிடித்தார்கள்?**
ரிக்கட்ஸ் என்னும் நோயால் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். அப்போது மீன் எண்ணெயை குழந்தைகள் கட்டாயம் சாப்பிடும்படி சொன்னார்கள். அந்த எண்ணெயில் இருந்த ஒருவகை உயிர்ச்சத்து இந்த நோயைக் குணப்படுத்துவதாக 1919ம் ஆண்டு சேர் எட்வேர்ட் மெலனிபை என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார். அந்த சத்திற்கு விட்டமின் டி. என்ற பெயரை 1931ல் தான் வைத்தார்கள்.

## கடலில் பெரிது

படத்தின் இருப்பதின் பெயர் லொப்ஸ்டர். இது நண்டு போன்றதொரு பெரிய கடல்வாழ் உயிரினம். இது வருடத்திற்கு ஒரு முறை தனது இருப்பிடத்தை விட்டு வேறு இடத்திற்கு உணவு தேடிச் சென்று வரும். அப்படிப் போகும்போது நிறைய லொப்ஸ்டர்கள் சேர்ந்து ஒரே வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாகச் செல்லும். இப்படி இவை வரிசை யாகச் செல்லும் போது இவற்றின் உணர்வுக் கொம்புகள் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டு போகும். குறைந்தது 150 கிலோ மீட்டர் தூரமாவது சென்று விட்டுத்தான் இவை திரும்பி வரும்.



## எது தெரியுமா?

1. ஐரோப்பாவின் போர்க்களம் என அழைக்கப்படுவது எது?
2. துருக்கியின் ஏரி என அழைக்கப்படுவது எது?
3. அரண்மனை நகரம் என அழைக்கப்படுவது எது?
4. அழிவில்லாத நகரம் என அழைக்கப்படுவது எது?
5. ஆயிரம் யானைகளின் நகரம் என அழைக்கப்படுவது எது?
6. கருங்கல் நகரம் என அழைக்கப்படுவது எது?
7. உப்பு நகரம் என அழைக்கப்படுவது எது?
8. விண்ணை முட்டும் நகரம் என அழைக்கப்படுவது எது?
9. தடுக்கப்பட்ட நகரமென அழைக்கப்படுவது எது?

**விடைகள்**

| | |
|---|---|
| 1. பெல்ஜியம் | 2. கருங்கடல் |
| 3. கல்கத்தா | 4. ரோம் |
| 5. லாவோஸ் | 6. அபர்டீன் |
| 7. வெலிஸ்கோ | 8. நியூயோர்க் |
| 9. லாசா. | |

தொகுப்பு: பி.வி.நாதன்.

## தந்தைகள் பட்டியல்

* **உடல் உறுப்புகளின் அமைப்பியல் தந்தை:** அன்டிரியஸ் வெஸாலியஸ் (பெல்ஜியம்)
* **இரசாயனவியலின் தந்தை:** றொபேட் பொயில் (அயர்லாந்து)
* **பொருளாதாரத்தின் தந்தை:** அடம் ஸ்மித் (ஸ்கொட்லாந்து)
* **ஆங்கிலக் கவிதையின் தந்தை:** ஜியோஃபெரி சௌஸர் (இங்கிலாந்து)
* **கேத்திரகணிதத்தின் தந்தை:** யூக்ளிட் (கிரேக்கம்)
* **மருத்துவத்துறையின் தந்தை:** ஹிப்போகிராட்ஸ் (கிரேக்கம்)
* **நன்னெறித் தத்துவத்தின் தந்தை:** சென்தோமஸ் அக்கியூனஸ் (இத்தாலி)
* **கம்பியில்லா தந்தியின் தந்தை:** குகில்மோ மார்க்கோனி (இத்தாலி)
* **அணு ஆற்றல் பௌதீகத்தின் தந்தை:** லோர்ட் லூதர் போர்ட் (இங்கிலாந்து)

தொகுப்பு-எம்.சங்கீதா.



படிப்பகம்

www.padippakam.com

# நீ! நீயா!

**மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமார்**

அபிராமியைப் பார்த்துவிட்டு படியிறங்கி வந்த ராஜாவும் ஜென்னியும் பார்வையிலேயே கேள்விகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

"என்ன?"

கைகளை விரித்தாள் ஜென்னி, "இந்தக் குடும்பமே பெரிய ஏமாற்றுக் குடும்பமாகத் தெரிகிறது பாஸ்!"

"எப்படிச் சொல்கிறாயாம்?"

"பாருங்களேன் பின்னே. ஆளுக்கு ஆள் பொய் சொல்றாங்க."

"அதாவது!"

"அங்கே அந்த ராஜேஸ்வரி என்கிற ராஜி, உயிரோட இருக்கிற அம்மாவையே இல்லை என்கிறாள்."

"ஒன்று".

"இங்கே வந்தால் இந்த அம்மாள் முடமாகிப் போன தன்னை யாருமே கவனிக்கிறதில்லை என்றவள்-எழுந்து போயிருக்கிறாள்."

"பறந்து போயிருக்கலாம். விடு. அப்புறம்."

"அந்த அபிராமியையும் அவள் பேசுகிற விதத்தையும் பார்த்தால் சுட்டுத் தள்ளினால் என்னன்னு ஆத்திரம் வருகிறது."

"ஆமாம்! எத்தனை அலட்சியம்! ஆனால் அதில் பார் ஜென்னி! அந்த அலட்சியத்திலும் கூட ஓர் அழகு இருக்கத்தான் செய்கிறது." என்றவன்-,

அவள் முறைத்ததும்,

"ஒரு... ஒரு இதுக்கு சொன்னேன். அவளிடம் என்ன இருக்கிறது? திமிரைத் தவிர?"

"சரி வாங்க. போய்விடலாம்," என்று வாசலுக்குப் போனவர்கள்-

ஓர் அறைக் கதவைத் திறந்து தாயம்மா வெளிப்பட்டு தொடர்ந்து, கிட்டத் தட்ட இடுப்பில் தாங்காத குறையாக ஏந்தினாற்போல் நடத்திக் கூட்டிவந்தாள்-

அந்த அம்மாவை!

கதவை தாங்கி நிற்கச்சொல்லிவிட்டு வந்த தாயம்மா சக்கரவண்டியை தள்ளிப் போனாள். கவனமாக அவரை நாற்காலியில் அமர்த்தினாள்.

உதவிக்குப் போன ஜென்னியைத் தடுத்துவிட்டாள்.

"இருக்கட்டும். இப்ப ஒரு தடவை உதவிட்டால் என்ன பிரமாதமாக நடந்து விடப் போகிறது? நாளைக்கும் அவள் தானே தனியாக அவதிப்படணும்."

நாற்காலியைத் தள்ளிப் போய் நடுஹாலில் விட்ட ஜென்னியைத் திரும்பிப் பார்த்துக் கேட்டார் அம்மையார்.

"பார்த்தீங்களா அவளை?"

"ஆமாம்."

"என்ன சொல்கிறாள்? எதுக்காக என்னைத் தவிர்க்கிறாளாம்?"

உண்மையைச் சொல்லத் தயக்கமாக இருந்தது ராஜாவுக்கும் ஜென்னிக்கும்-

"உங்களை இந்த நிலையில் பார்க்க அந்நியர்கள் எங்களுக்கே சங்கடமாயிருக்கிறச்ச அவங்க சொந்த மகள். அவங்களால எப்படி தாங்கிக்க முடியும்?"

பெருமூச்சு விட்டாள் அம்மாள்.

"அதெல்லாம் வெறும் பூசி மெழுகல். அவளுக்கு என் மேலே கோபம். என்னமோ கோபம்."

"எப்படிச் சொல்றீங்க?"

"கொஞ்ச நாளாக அவள் நடத்தையே எனக்கு விசித்திரமாப் படுது. மூணு நாளைக்கு முன்னால் இரும்பு கடற்கரை ஹோட்டல்லேர்ந்து ஒரு பெண் போன் செய்தாள். நான் இங்கே இருக்கிற போன் மூலமாக ஒட்டுக்கேட்டேன்."

"என்னவாம்?"

"எவ்வளவு நேரமா அவங்க காத்திருக்கிறாங்க. சீக்கிரமா வந்து தொலையேன்னு எரிஞ்சு விழுந்தார். உடனே இவளும் கிளம்பிப் போய் விட்டாள்."

ராஜாவும் ஜென்னியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"மூணு நாள் முன்னாலயா?"

அவர்கள் மேலும் பேச முயலும் முன்பாக- அம்மாள் "வாம்மா." என்று யாரையோ வரவேற்பதைக் கேட்டு திரும்பி வாசலைப் பார்த்து வியந்தார்கள்.

ஜோதி நின்றிருந்தாள்.

"ஹாய் ஜோதி!" என்ற ஜென்னியின் குரலுக்குத் தான் அடையாளமே கண்டு பிடித்தாள்.

"நீங்க எங்கே இங்கே?"

"மிஸ் அபிராமியைப் பார்க்க வந்தோம். நீ எங்கே வந்தே?"

"நானும் அவளைத் தேடித்தான் வந்தேன்."

"நாங்க இங்கே இருக்கிறது உனக்கெப்படி தெரியும்?"

"எனக்குத் தெரியாதே! எங்க அண்ணி ராஜேஸ்வரி நீங்க வந்து போனதையும் பேசினதையும் சொன்னாங்க. அதான் அந்த அபிராமியைப் பார்த்து நறுக்குன்னு நாலு வார்த்தை கேட்டுட்டுப் போகத்தான் வந்தேன்."

"என்ன கேட்கப் போறே?"

"சிகரெட்லைட்டர் எடுக்கிற சாக்கில ஏண்டி என் வைர நெக்லஸைத் திருடினேன்னு கேட்கத்தான் போறேன்."

"பிரயோஜனம் இருக்காதுன்னுதான் தோணுது."

"ஏன் மிஸ்டர் ராஜா?"

"அதையே தான் நாங்க கேட்டாச்சே!"

"என்ன சொல்றா?"




"சுத்தம்மா மறுக்கிறா. சத்தமாக கத்துகிறாள்."

"என்னவாம்?"

"உன்னைப் பற்றி வாய்க்கு வந்தபடி பேசறாள். உன் காதலனை அவள் ஓரம் கட்டப்பார்த்ததாகச் சண்டை போட்டாயாம். பிறகு அவர் வேறெ ஒருத்தியோட ஓடினதை நிரூபிச்ச பிறகு மன்னிப்புக் கேட்டாளாமே."

"ஆமாம்."

"மாறி இருப்பேன்னு நினைச்சுத்தான் உன்னோட நெருங்கிப் பழகப் பார்த்தாளாம். இப்ப திருடிப் பட்டம் கட்டறாளேன்னு பெரிசா கத்தறா. இந்த சந்தர்ப்பத்தில நீ அவளை சந்திக்கிறது உசிதமில்லே."

"வந்து-"

"ஆமாம். எங்ககிட்டயே அவ்வளவு தூரம் ஆவேசப்பட்டவள் உன்னைப் பார்த்தால் என்னதான் சொல்லமாட்டாள்?"

ஜோதி முகத்தில் கொஞ்சமாகப் பயம் வந்தது.

"என்ன ஜோதி! உங்க அண்ணி என்ன சொல்றா?" அம்மாள் கேட்டாள். "என்னைக் காவது தனக்கொரு அம்மா இருக்கிறதா ஞாபகப்படுத்திக்கிறாளா இல்லையா?"

"என்ன அத்தை இப்படி பேசறிங்க? இப்ப நான் இங்கே தான் போகப் போறேன்னு தெரிஞ்சதும் கதறிட்டாங்க. அவங்களாலதான் நேரில் வந்து பார்க்க முடியல. என்னையாவது போய் விசாரிச்சிட்டு வரச் சொல்லிச் சொன்னாங்க."

"ஏதோ நினைவு இருந்தால் சரி."

ராஜா பேச்சை மாற்ற விரும்பினான்.

"ஏன் ஜென்னி! வெறு பேச்சாகப் பேசிக்கிட்டிருக்காமல் கொஞ்சம் உருப்படியான வேலை செய்தால் எப்படி?"

"என்ன செய்யலாம்? நீங்களே சொல்லுங்க பாஸ்!"

"இவங்க ஆபீஸுக்கு போகலாம். அந்த வைர நெக்லஸ் சாவி போட்டுத் திறக்கக் கூடிய லாக்கர் இருக்கிற இருப்பையும் சூழ்நிலையையும் பார்த்துட்டு வரலாமே."

"அதுவும் நல்ல யோசனைதான்." அந்த ஜோதி கிளம்பினாள். "வாங்க. எங்க காரிலேயே போயிடலாம்."

"வேண்டாம். எங்கள் காரில் நாங்க வருகிறோம். நீ உன் காரில் முன்னால் போய் வழிகாட்டு."

"அதுவும் சரி. வாங்க போகலாம். வரேன் ஆன்ட்டி."

"வரோம்மா."

அம்மையார் கும்பிட்டார். "போய்ட்டு வாங்க."

அந்த அலுவலகம் இருந்த இடம் நெடுஞ்சாலையிலிருந்த உயரக் கட்டடத்தின் ஐந்தாவது மாடியிலிருந்தது.

வரவேற்பறையில் டெலிபோன் கூண்டு விர் விர்ரென்று புலம்ப அதைக்கூட கவனிக்காமல் வரவேற்பாளப் பெண் ஒரு மர்ம நாவலை சுவாரசியமாகப் படித்துக் கொண்டிருந்தவள்-

ஜோதியைக் கண்டதும், அரக்கப் பறக்க எழுந்து கொண்டாள். "குட்மார்னிங் மேடம்!"

"குட் ஆப்டர் நூன்னு சொல்லு. முதல்ல போன் யாருது பாரு?"

விசையைத் தட்டிவிட்டு போனை காதில் பொருத்தினாள், "இல்லே" என்றவள் சலிப்புடன் போனை வைத்தாள். "காலையிலேர்ந்து என்னமோ ராங் நம்பராவே வருதும்மா."

"சரி கவனமா வேலையைப் பார்" என்றவள் "வாங்க" என்று இவர்களை அழைத்துக் கொண்டு கண்ணாடிக் கதவைத் தள்ளிக்கொண்டு போனாள்.

நிறைய கதவுகளுடன் தனித்தனி அறைகளிருந்தனவே. தவிர ஹாலில் அதிகமாக நடமாட்டமே இல்லை.

சரஸ்வதியம்மா-எம்.டி.என்று பிளாஸ்டிக் பட்டை எழுத்து போட்ட அறை வாசலில் ஸ்டூலில் அமர்ந்திருந்த ஆபீஸ் பையன் குனிந்த தலை தள்ளாட, தூங்கிக் கொண்டிருந்தான்.

"ஒண்ணு செய்யுங்க." கிசுகிசுப்புடன் சொன்னாள் ஜோதி. "அவனை எழுப்பாம கதவைத் திறந்து உள்ளே போங்க."

"டேய் முண்டம்" என்ற ஜோதியின் பெரியதான அதட்டலுக்கு வெலவெலத்துப் போய் எழுந்து நின்றான் பையன்.

> **"இவங்க ஆபீஸ்க்கு போகலாம். அந்த வைர நெக்லஸ் சாவி போட்டுத் திறக்கக் கூடிய லாக்கர் இருக்கிற இருப்பையும் சூழ்நிலையையும் பார்த்துட்டு வரலாமே!"**
>
> **–ராஜா**

"தூங்கறியா?"

"இல்லையம்மா. ராத்திரி இரண்டாவது ஆட்டம் 'கொடி பறக்குது' போனேன். அதான் கொஞ்சம் தூக்கக் கலக்கமாயிருக்கு."

"கொஞ்சமில்லே. நிறையவே. யாராவது வந்தாங்களா?"

"இல்லையம்மா?"

"அம்மாவைத் தேடி?"

"யாரும் வரலீங்களே. நான் இங்கே தானே இருக்கிறேன். என்னைத் தாண்டி எப்படி உள்ளே போகமுடியும்?"

"கதவைத் திறந்து பார்." என்றவள்-

திறந்து பார்த்து திடுக்கிட்டுப் போனான். "யார் சார் நீங்க? எப்படி உள்ளே போனீங்க? யாரைக் கேட்டு உள்ளே வந்தீங்க?"

"என்னைக் கேட்டுத்தான். ராஸ்கல்! அவங்களை உள்ளே அனுப்பினேன். உள்ளே போகிறது கூட தெரியாத அளவு தூங்கறே நீ? ராஸ்கல். அம்மா வரட்டும். முதல் வேலையா உன் சீட்டை கிழிக்கச் சொல்லிடறேன்."

அவன் கெஞ்சி விட்டு, "போ வெளியே" என்று அவள் கத்தியதும் வெளியே போய் விட்டான் நடுக்கமாக.

"இந்த மாதிரி காவலே இல்லாத இடத்தில யாருக்கும் புகுந்து திருடற ஆசை வரும்தான். இது தான் இந்த பீரோவா?"

"எல்லாம் அந்தச் சிறுக்கியால் வருகிற வினை. முன்பு மாஜி ராணுவ வீரன் ஒருத்தரை காவலுக்குப் போட்டிருந்தோம். இந்த அபிராமிதான் அவன் பற்றி அம்மாவிடம் கண்டபடி கோள் சொல்லி நம்ப வைச்சு வெளியே துரத்தி விட்டாங்க."

"அபிராமியா? அவளுக்கும் இந்த ஆபீஸுக்கும் என்ன சம்பந்தம்?"

"எந்த சம்பந்தமுமில்லே. ஆனாலும் அவள் எங்கேயும் புகுந்து புறப்பட்டு வருவாள். ஆண் பொறுக்கி அவள்."

"மோசமான வார்த்தை."

"ஆனா தப்பான வார்த்தையில்லை ஜென்னி! என் காதலனைத்தான் விழுங்கப் பார்த்தான்னு நெனைச்சேன்."

"அந்தக் கணக்குதான் தப்பாகிப் போச்சே."

"ஆனா-அப்புறம் என் அண்ணனையே கைக்குள்ளே போட்டுக் கொண்டு விட்டாள்."

"என்ன பேசற? உன் அண்ணனையா? அந்த அபிராமி உங்க அண்ணியோட சொந்த தங்கையில்லே?"

"அதனாலதான் பழகறதுக்கு வாய்ப்பும் அதிகமாகிப் போச்சு. அப்பாவி அண்ணி. சொந்தத் தங்கையே தன் கணவனைப் பறிக்கப் பார்க்கிறது கூட தெரியாத அளவு அப்பாவி!"

"நிஜமாகவே அவங்களுக்குத் தெரியாதா?"

"சுத்தமாகத் தெரியாதுன்னுதான் நினைக்கிறேன்."

"எப்படி அவ்வளவு நிச்சயமாச் சொல்கிறே?"

"தெரிஞ்சிருந்தா வீடு ரெண்டுபட்டிருக்குமே. தேடி வந்து தங்கையை செருப்பால் அடிச்சிருப்பாள். அண்ணியைப் பார்த்தால் தெரியாது."

"ஏன் என்ன?"

"பார்த்தால் பசு. ஆனா பாய்ஞ்சா அசல் புலி."

"அப்படியா?" ஜென்னி கிளம்பினாள். "சரி. நாங்க கிளம்பறோம்."

"இருங்க அந்த சண்டாளியைப் பற்றி இன்னமும் நிறையச் சொல்லணுமே."

"இன்னொரு சமயம் கேட்டுக்கறோம். வாங்க பாஸ்! நாம் போகலாம்" என்று அவசரமாக ராஜாவை இழுத்துப் போனாள்.

போகிற போக்கில் ஆபீஸ் பையனை உசுப்பிவிட்டாள். "தூங்காதே தம்பி." என்று சிரித்தாள். "முறைக்காதே. முறைக்காதே."

காரில் திரும்பும் போது ஜென்னி சொன்னாள்."என்னன்னு சொல்லத் தெரியல்ல. என் மூளைக்குள்ளே பளிச்சுன்னு ஒரு பல்ப் எரிகிற மாதிரி உணர்வு வருது பாஸ்!" என்றாள்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: ஏ. ஜெயராஜ்.
வயது: 19
முகவரி: 68/47, பேஸ்லைன் வீதி, தெமட்டகொடை, கொழும்பு-09.
பொழுது போக்கு: கிரிக்கெட்.



பெயர்: எம். மனாஸிர்
வயது: 17
முகவரி: 38, ஹுஸைன் அவெனியூ, மாத்தளை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, ரீ.வி.



பெயர்: கே. தயானந்தன்
வயது: 26
முகவரி: REST POSLI, ZENTRAL STR.37, 8003- ZURICH, SWITZERLAND.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், ரீ.வி., புத்தகம்.



பெயர்: ஏ. தியாகராஜா.
வயது: 25
முகவரி: வேவல்வத்தை, இரத்தினபுரி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, ரீ.வி.



பெயர்: எஸ். மௌபியா.
முகவரி: BLOCK NO.1. ROAD NO. 1. HOUSE NO.18, BAYAN, KUWAIT.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: எம். சபீக்.
வயது: 24
முகவரி: ARRAYAN POOLS, P.O.BOX-3366, DOHA, QATAR.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். அமானுல்லாஹ்.
வயது: 19
முகவரி: 16, உயன் வத்தை, தெவனகல, மாவனல்லை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். மிக்ராம்
வயது: 18
முகவரி: 69, சவர்ணசைத்திய வீதி, கிராண்ட் பாஸ், கொழும்பு-14.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. ஜெக்சன்.
வயது: 19
முகவரி: 100, கொட்டுவேகொட, இராஜகிரிய.
பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட்.

பெயர்: பி. பிரதீபன்.
வயது: 14
முகவரி: 169, பிரதான வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எம். ஜெயரட்ணம்.
வயது: 29
முகவரி: ஸ்ரெலன்பேர்க் எஸ்டேட், புப்புரஸ்ஸ.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ஏ. அஸீஸ்.
வயது: 15
முகவரி: 517, அல்-ஹிலால் வீதி, சாய்ந்தமருது-14.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, பேனா நட்பு.




படிப்பகம்

www.padippakam.com

# தாய் 79

## மக்சீம் கார்க்கி



"என் வேலை போய் விடும். அது நிச்சயம்தான். ஆனால், அது என்னைக் கொஞ்சம்கூடப் பாதிக்கவில்லை. மேஜையடியிலே உட்கார்ந்து, குதிரைகள் வைத்திராத விவசாயிகளைக் கணக்கு எடுத்து எடுத்து எனக்கே எரிச்சலாய்ப் போய் விட்டது."

யாரோ ஒரு ராக்ஷதன் திடும் வெறியோடு வெளியிலிருந்து சுவர்களை உலுக்கி வீட்டிலுள்ள சாமான்களை உருட்டித் தள்ளிய மாதிரி, அந்த அறையே ஒரே அலங்கோலமாய்க் கிடப்பதைத் தாய் கண்டாள். படங்கள் எல்லாம் தரை மீது இறைந்து கிடந்தன. சுவரில் ஒட்டியிருந்த காகிதமெல்லாம் கிழிபட்டு, துண்டு துண்டாக நாடாக்களைப்போல் தொங்கிக் கொண்டிருந்தன. ஒரு புறத்தில் தரையில் பதித்திருந்த பலகை அகற்றப்பட்டுக் கிடந்தது; ஒரு கண்ணாடிச் சட்டம் தகர்த்தப்பட்டிருந்தது. அடுப்புக் கரியும் சாம்பலும் தரையில் பரவிக்கிடந்தன. தனக்கு ஏற்கெனவே பழகிப் போன இந்தக் காட்சியைக் கண்டு தலையை அசைத்துக் கொண்டாள் தாய். நிகலாயின் முகத்திலே தோன்றும் ஒரு புதிய தன்மையை உணர்ந்து அவனையே கூர்ந்து நோக்கினாள்.

ஆறிப்போன தேநீர் பாத்திரம், கழுவப்படாத ஏனைய தட்டுக்களோடு மேஜை மீது அப்படியே இருந்தது. தட்டுக்களில் வாங்கி வராமல், தாளில் பொட்டலம் கட்டி வாங்கி வந்த பாலாடையும், சாஸேஜும் அந்தந்த காகிதத்தில் அப்படியப்படியே கிடந்தன. மேஜைத் துணி முழுவதிலும் அடுப்புக் கரியும் ரொட்டித் துண்டுகளும், புத்தகங்களும் குவிந்து கிடந்தன. தாய் லேசாகச் சிரித்தாள், நிகலாயும் பதிலுக்குக் குழப்பமாகப் புன்னகை புரிந்தான்.

"இந்த மாதிரிக் குழப்பத்தில் என் பங்கும் உண்டு. ஆனால், அது சரியாய் போயிற்று, நீலவ்னா! அவர்கள் திரும்பவும் வரக்கூடும் என்று நினைத்தேன். எனவேதான் நான் இவற்றை ஒழுங்கு படுத்தவில்லை. சரி, அது கிடக்கட்டும். நீங்கள் போய் வந்த விவரத்தைச் சொல்லுங்கள்."

அந்தக் கேள்வி அவள் இதயத்தில் திடுக்கென விழுந்து உலுப்பியது. மீண்டும் அவள் கண் முன்னால் ரீபினின் உருவம் தோன்றியது. வந்தவுடனேயே அவனைப் பற்றிப் பேசாதிருந்ததைக் குற்றம் என்றே அவள் உணர்ந்தாள். அவள் நிகலாயின் பக்கமாகக் குனிந்து, தான் போய் வந்த விவரத்தை அமைதியாக ஒன்று விடாமல் சொல்லத் தொடங்கினாள்.

"அவர்கள் அவனைக் கைது செய்து விட்டார்கள்..."

நிகலாயின் முகத்தில் ஒரு நடுக்கம் ஓடி மறைந்தது.

"அப்படியா?"

அவனைக் கையமர்த்தி விட்டு, தான் ஏதோ நியாய தேவதையின் சந்நிதியில் நிற்பது போலவும், அந்த தேவதையிடம் ஒரு மனிதனுக்கு இழைக்கப்பட்ட சித்ரவதையைப்பற்றி வாதாடி வழக்காடுவது போலவும், அவள் மேலும் பேசத் தொடங்கினாள். நிகலாய் நாற்காலியில் சாய்ந்து கொண்டும், வெளிறிய முகத்தோடு அடிக்கடி உதட்டைக் கடித்துக் கொண்டும் அவள் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் தன் கண்ணாடியை மெதுவாகக் கழற்றியெடுத்து அதை மேஜைமீது வைத்தான், தன் முகத்தில் ஏதோ கண்ணுக்குத் தெரியாத நூலாம்படை படிந்து விட்டது போல் முகத்தைத் துடைத்து விட்டுக் கொண்டான்.

அவனது முகபாவம் திடீரெனக் கூர்மை பெற்றது. கன்ன எலும்புகள் புடைத்துத் துருத்தின; நாசித் துவாரங்கள் நடுநடுங்கின. இந்த மாதிரி என்றுமே அவனை அவள் பார்த்ததில்லை; அவனது தோற்றம் அவளை பயமுறுத்தியது.

அவள் பேசி முடிந்தபிறகு அவன் எழுந்து தனது முஷ்டிகளைப் பைகளுக்குள் அழுத்தி ஊன்றியவாறு கீழும் மேலும் நடந்தான்.

"அவன் ஒரு மகா புருஷனாய்த் தானிருக்க வேண்டும்" என்று பற்களை இறுகக் கடித்தவாறே அவன் முணுமுணுத்தான். "சிறையில் இருப்பது அவனுக்குக் கஷ்டமாய்த் தானிருக்கும். அவன்போன்ற ஆட்களுக்கு அது சிரமம்தான்."

அவன் தனது முஷ்டிகளை அழுத்தியவாறே தனது உணர்ச்சி வேகத்தைத் தணித்துப் பார்த்தான். எனினும் அவனது நிலைமையைத் தாய் உணர்ந்து கொண்டாள்; அது தாய்க்குத் தானாகவே தெரிந்தது. அவன் தன் கண்களைச் சுருக்கினான்; கண்கள் கத்தி முனையைப்போல் நீண்டு சுருங்கின. மீண்டும் அவன் மேலும் கீழும் நடந்தவாறே அடங்கிக் குமுறும் கோபத்தோடு பேசத்தொடங்கினான்:

"இந்தப் பயங்கரத்தை எண்ணிப் பாருங்கள். ஜனங்களின் மீது தமக்குள்ள ஆதிக்கத்தை நிலை நிறுத்தவேண்டும் என்ற வெறியுணர்ச்சியில், ஒரு சில அயோக்கிய நபர்கள் ஒவ்வொருவரையும் உதைக்கிறார்கள்; நெரிக்கிறார்கள்; நசுக்குகிறார்கள். காட்டுமிராண்டித்தனம் பெருகிவருகிறது; கொடுமையே வாழ்க்கையின் நியதியாகி விடுகிறது! இதைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அவர்களில் சிலர் ஜனங்களை

> **அதிகாரிகள் ஜனங்களை அடித்து நொறுக்கி, மிருகங்களைப்போல் நடந்து கொள்கிறார்கள். சட்டம் தங்களை எதுவும் செய்யாது என்பதால் சித்திரவதை செய்வதில் அவர்கள் மோகவிகாரம் கொண்டு திரிகிறார்கள். தான்வாங்கிய அடி உதைகளால் சிலர் ஊமையாகவும் செவிடாகவும் போகிறார்கள். வேறு சிலர் பழிக்குப் பழி வாங்கும் விஷ ஆசைக்கு ஆளாகிறார்கள்.—நிகலாய்**

> **என்றாவது ஒருநாள் ருஷ்ய தேசம்தான் உலகிலேயே தலை சிறந்த ஜனநாயக நாடாக விளங்கப் போகிறது.**

அடித்து நொறுக்கி, மிருகங்களைப்போல் நடந்துகொள்கின்றார்கள். ஏனெனில் சட்டம் தங்களை எதுவும் செய்யாது என்பதை அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். சித்ரவதை செய்வதில் அவர்கள் மோக விகாரம் கொண்டு திரிகிறார்கள். அடிமைகளின் அடங்காத பைத்திய வெறியைப் பயன்படுத்தி, அந்த அடிமை மக்களின் அடிமை உணர்ச்சிகளையும், மிருக குணங்களையும் அவற்றின் பரிபூரண வேகத்தோடு பாய்ந்து குதறும்படி அவிழ்த்துவிட்டு விடுகிறார்கள். வேறு சிலர் பழிக்குப் பழி வாங்கும் விஷ ஆசைக்கு ஆளாகிறார்கள். தான் வாங்கிய அடி உதைகளால் ஊமையாகவும் செவிடாவும் போகிறார்கள், சிலர். மக்கள் குலத்தையே சீர்குலைத்து விட்டார்கள்!"

அவன் பேச்சை நிறுத்திவிட்டு மௌனமாகப் பற்களைக் கடித்தான்.

"இந்த மாதிரியான மிருக வாழ்க்கையில், நீ உன்னையும் மீறி மிருகமாகிவிட முடிகிறது!"

அவன் தன் உத்வேகத்தை அடக்கி ஆண்டவாறே அழுது கொண்டிருந்த தாயின் பக்கமாக அமைதியோடு திரும்பி, தனது கண்களில் பிரகாசிக்கும் நிலையான ஒளியோடு அவளைப் பார்த்தான்.

"நாம் நேரத்தை வீணில் போக்கக்கூடாது, நீலவ்னா. நாமே முன்னின்று நமது காரியங்களை கவனிக்கலாம்......"

சோகம் நிறைந்த புன்னகையோடு அவள் பக்கமாகச் சென்று அவள் கரத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு கேட்டான்:

"உங்கள் பெட்டி எங்கே?"

"சமையலறையில்."

"நம் வீட்டு வாசலில் உளவாளிகள் திரிகிறார்கள். அதிலுள்ள அவ்வளவையும் அவர்கள் கண்ணில் படாமல் நாம் வெளியே கொண்டுபோக முடியாது. அவற்றை மறைத்து வைப்பதற்கும் இடமில்லை. இன்று ராத்திரி அவர்கள் மீண்டும் சோதனை போட வருவார்கள் என்றே நினைக்கிறேன். எனவே எவ்வளவு வருத்தம் தரத்தக்கதாயிருந்தாலும் சரி—நாம் அவற்றைச் சுட்டுப் பொசுக்கிவிட வேண்டியதுதான்."

"எவற்றை?"

"டிரங்குப் பெட்டியிலிருக்கிறதே—அவற்றை!"

தாய் புரிந்து கொண்டாள். அவள் எவ்வளவுதான் வருத்தங்கொண்டிருந்த போதிலும், தனது காரிய சாதனையை எண்ணி அவள் மனத்தில் ஏற்பட்ட பெருமையுணர்ச்சி புன்னகையாக உருவெடுப்பதை அவளால் தடுக்க முடியவில்லை.

"அதில் ஒன்றுமே கிடையாது— அதில் ஒரு துண்டுக் கடுதாசி கூடக் கிடையாது!" என்று கூறிவிட்டு, அதன் பின்னர் தான் ஸ்திபான் சுமக்கோவைச் சந்தித்த விவரத்தை யெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக உற்சாகத்துடன் சொல்ல ஆரம்பித்தாள்.

ஆரம்பத்தில் நிகலாய் முகத்தைச் சுழித்தவாறே ஆர்வத்தோடு கேட்டான்; ஆனால் அந்தச் சுழிப்பு சீக்கிரமே மறைந்து, அவன் முகத்தில் வியப்புக் குறி படர்ந்தது. இறுதியில் அவன் உணர்ச்சிப் பரவசமாகி அவள் பேச்சில் குறுக்கிட்டுக் கத்தினான்:

"அபாரம்! மாபெரும் வேலை!"

அவன் அவள் கைகளை இறுகப் பற்றி மெதுவாகச் சொன்னான்:

"உங்களுக்கு ஜனங்களிடம் ஆழ்ந்த நம்பிக்கை இருக்கிறது....உங்களை நான் என் சொந்தத் தாய் போலவே நேசிக்கிறேன்!"

அவன் ஏன் இப்படி உணர்ச்சிவசப்பட்டு உற்சாகமடைகிறான் என்பதைப் புரிய முடியாமல் அவனை வியப்போடு கூர்ந்து நோக்கியவாறே புன்னகை புரிந்தாள் தாய்.

"பொதுவாக, இது மகத்தான காரியம்!" என்று கூறிக்கொண்டே அவன் தன் கைகளைத் தேய்த்துக் கொண்டான்; மெதுவாகச் சிரித்தான். "கடந்த சில நாட்களில், எனக்குப் பொழுது மிகவும் அருமையாகக் கழிந்தது. முழுநேரமும் தொழிலாளர்கள் மத்தியிலேயே கழிந்தது; அவர்களுக்கு நான் பாடம் சொன்னேன்; அவர்களோடு பேசினேன்; அவர்களைக் கண்டுணர்ந்தேன். என் இதயத்திலே ஏதோ ஒரு புனிதமான பரிபூரணமாக வியப்பூட்டும் உணர்ச்சி நிறைந்து ததும்புகிறது. அவர்கள் எவ்வளவு அருமையான மனிதர்கள், நீலவ்னா! நான் வாலிபத் தொழிலாளர்களைப் பற்றி பேசுகிறேன். அவர்கள் எவ்வளவு பலமும், உணர்ச்சியும் அறிவுத் தாகமும் பெற்றவர்களாயிருக்கிறார்கள்! அவர்களைப் பார்க்கும்போது என்றாவது ஒரு நாள் ருஷ்ய தேசம்தான் உலகிலேயே தலை சிறந்த ஜனநாயக நாடாக விளங்கப் போகிறது என்ற எண்ணம்தான் நமக்கு உண்டாகும்!"

அவன் தன் கூற்றை அழுத்தமாக ஆமோதிப் பதைப்போல், சபதம் எடுப்பது போல் கரத்தை நீட்டினான். பிறகு ஒரு கண நேரம் கழித்து மேலும் பேசத் தொடங்கினான்.

"இந்தப் புத்தகங்களோடும் உருவங்களோடும் உட்கார்ந்து உட்கார்ந்து எனக்குப் புளித்தே போய்விட்டது. சுமார் ஒரு வருஷ காலம் இந்த மாதிரி வாழ்க்கையை—பயங்கர வாழ்க்கையை—வாழ்ந்தாயிற்று. நான் தொழிலாளரோடு வாழ்ந்து பழக்கப்பட்டவன். ஆனால், நான் மிகுந்த சிரமத்தோடும், பதனத்தோடும் அவர்களிடமிருந்து தனிமைப்பட்டு வாழ்வதாகவும் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் இப்போதோ நான் மீண்டும் சுதந்திர புருஷனாக வாழ்கிறேன். நான் இனிமேல் முழு நேரம் அவர்களோடு வாழவேண்டும். அவர்களோடு உழைக்க வேண்டும். நான் சொல்வது புரிந்ததா? இளமை நிறைந்த சிருஷ்டி சக்தியின் முன்னிலையிலே, புதிய சிந்தனைகள் என்னும் பிள்ளைத் தொட்டிலருகேயே நான் வளர்ச்சிபெற வேண்டும். அது அபூர்வமான அழகான வளர்ச்சி, பிரமாண்டமான உணர்ச்சிக் கிளர்ச்சி. அப்படிப்பட்ட வாழ்க்கை ஒரு மனிதனை இளைஞனாக்குகிறது; பலசாலியாக்குகிறது. அதுவே வாழ்க்கையின் செழிப்பு நிறைந்த மார்க்கம்!"

அவன் ஆனந்த பரவசத்தோடும் குழப்பத்தோடும் சிரித்தான். அவனது ஆனந்தத்தைத் தானும் உணர்ந்து, அதில் பங்கெடுத்துக் கொண்டாள் தாய்.

"மேலும்— நீங்கள் ஓர் அற்புதமான பிறவி" என்றான் நிகலாய். "எவ்வளவு தெள்ளத் தெளிவாக மக்களைப்பற்றி வருணிக்கிறீர்கள்! எவ்வளவு நன்றாக அவர்களைப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்!"

அவன் தாயின் அருகே உட்கார்ந்தான். முதலில் தனது பிரகாசம் பொருந்திய முகத்தை ஒரு புறமாகத் திருப்பிக்கொண்டு, தனது உணர்ச்சிக் குழப்பத்தை மறைப்பதற்காக, பிடரி மயிரைக் கோதிவிட்டுக் கொண்டிருந்தான். ஆனால் சீக்கிரமே அவன் தாயைத் திரும்பி நோக்கினான். அவளோ தனது அனுபவங்களை ஒன்று விடாமல், தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவதுபோல, எளிய வார்த்தைகளால் விவரித்துச் சொன்னாள்.

"பேரதிருஷ்டம்தான்!" என்று வியந்தான் அவன்: "உங்களைச் சிறையில் தள்ளுவதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன, இருந்தாலும்...... ஆமாம், விவசாயிகள் விழிப்புற்று எழத் தொடங்கிவிட்டார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது; அது ஒன்றும் அதிசயமில்லை. இயற்கைதானே! அந்தப் பெண்—அவளை நான் நன்றாக கற்பனை செய்து பார்க்க முடிகிறது.... கிராமாந்திரப் பிரதேசங்களில் உழைப்பதற்கென்று நாம் சில பிரத்தியேக ஆட்களை நியமிக்க வேண்டும். ஆட்கள்! நம்மில் போதுமான ஆட்கள் இல்லையே! நமக்கு நூற்றுக்கணக்கான தோழர்கள் வேண்டும்!"

(தொடர்ந்து வரும்)

---

# அறுவடை

## ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

செந்தில்வேள் மாஸ்டர் ஸ்தம்பித்துப்போனார். மானிப்பாயிலிருந்து வந்ததும் வராததுமாய் மகன் உப்பிடியொரு குண்டைத்தூக்கிப் போடுவானென்று அவர் கனவிலும் நினைத்திருக்கவில்லை. பாரதியை வேண்டாமென்று சொன்னகையோடு போய் நல்லூர் சாம்பசிவம் வர்த்தகரின் மகளை பதிவுத் திருமணம் செய்து விட்டு வந்து நிற்கிறான் அரவிந்தன். 'எவ்வளவு நெஞ்சழுத்தம்' என்று தோள்துண்டை உதறிக்கொண்டு மனைவியைத் தேடினார். கைபிசைந்தபடி முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்த மனைவியைப் பார்த்துக் கத்தினார்.

"டியே....எங்கையடி உன்ர தறுதலை? அவனை ரெண்டு கேள்விகேட்க வேணும்..... படிச்ச மகாராசா..... செய்துவிட்டிருக்கிற பஞ்சமாபாதகத்தைக் கேள்...... பாரதிக்கு என்ன கதியெண்டு சொல்." உக்கிரமாய் வெளிவந்த வார்த்தைகளுக்குப் பயந்து மனைவி மௌனமாகி விட்டாள்.

சற்று வேளைக்கெல்லாம் அரவிந்தன் வந்தான். "இஞ்ச நில்லும்மேன்" நின்றான். "உப்பிடி வா....." வந்தான். "டேய் பரதேசி நீ செய்திருக்கிற வேலை சரியோ.....? ஊருலகத்துக்கு நானென்ன பதில் சொல்லட்டும்.....?" அரவிந்தன் அலட்சியமாய்ப் பதில் சொன்னான். "எனக்குச் சரியெண்டு படுறதைச் செய்ய எனக்கு உரிமையிருக்கு. பாரதியைத் தான் செய்ய வேணுமெண்டது விதியில்லை..... துளசிதான் பொருத்தம்!"

"காசுப் பொருத்தமே?"

"ஓம்.... காசும் பொருத்தம் தான். கஷ்டப்பட்ட நாங்கள் இனியும் கஷ்டப் படவேணுமெண்டு தலைவிதியே.....? சௌகர்யமாய் வாழ நினைச்சதில என்ன பிழை?"

"சாம்பசிவத்தின்ர கறுப்புப் பணம் தான் உன்னை வாழவைக்குமெண்டு எண்ணினியோ?"

"நிச்சயம்... சர்வநிச்சயமாய்...... பணம் தான் முக்கியம்! அது எந்த வழியிலை சேர்க்கப்பட்டதென்கிறது எனக்கு அவசியமில்லை.

"டவுணுக்கை கடை, டவுணுக்கை வீடு, கார்..... சுருட்டுக் கொம்பனி, இனாம் பத்து லெட்சம். எல்லாம் எழுதிட்டினம்."

"இவ்வளவுதான் உன்ரை லெட்சியம்.... வாழ்க்கை பூராவும் காப்பாற்றும் இனி ஒரு செக்கன் இந்த மண்ணிலை நிக்க உரிமையில்லை.... ஓடு.....தலைச்சனொண்டு தெறிச்சுப் போட்டுது எண்டு வாழுவன். போடா... போ! உன்னைப் படிப்பிச்சுப் பட்டதாரியாக்கி கௌரவமான ஒரு இடத்தைக் கொடுத்தது இவ்வளவுக்கும் தான்! ச்சேச்...... அற்பம் ஊரவன்ரை வயிறுவாயெரியச் சேர்த்த பணம், எப்பிடிப் போகுதெண்ணு நானும் பார்க்கத்தான் போறன்.....அந்த அநியாயத்திலை எங்களுக்கு ஒரு செம்புக்காசுகூட வேணாம்..... போ...அங்கை போய்ச் சேரு."

மாஸ்டர் முடிவாய் அலறியது கேட்ட அரவிந்தன் சிறிது சஞ்சலப்பட்டாலும் பின் பரபரவெனத் தன் உடைமைகளை அள்ளித் திணித்துக் கொண்டு ஒரேயடியாய்ப் போய் விட்டான்.

பாரதி மாஸ்டரின் தங்கை மகள் குழந்தையிலையே பெற்றோரை இழந்து இவர்களோடு வளர்ந்து விட்டவள். ஒரு பிகொம் பட்டதாரியாகி வங்கியில்வேலை. ஓவர்டைமும் சேர்த்து மாசாமாசம் பத்தாயிரத்துக்கு மேல் கொட்டுற உழைப்பாளி. சிறு வயதிலிருந்தே அரவிந்தனுக்குப் பாரதியென்பது ஊரறிந்த கதை. இப்போது தன் மகன் காசுக்காகப் போய் கையொப்பம் போட்டதை மாஸ்டரால் ஜீரணிக்க முடியவில்லை. ஆவேசமாய் புலம்பிக் கொண்டிருந்தார். வீடு அமர்க்களமானது கண்ட பாரதிக்கு விஷயம் சட்டெனப் பிடிபட்டது. கதிகலங்கிப் போகாமல் நிதானமாய் கதைத்தாள்:

"மெய்யே மாமா.... அரவிந்தனத்தான் செய்ததிலை என்ன பிழை? அவை வசதியாய் இருக்கினம்.....இவரும் வசதியாய் வாழப் பிரியப்பட்டதிலை என்ன பிழையிருக்கு? அரவிந்தனத்தான் இல்லாட்டில் சிவாத்தான் இருக்கிறாரெல்லே? பேந்தேன் யோசிக்கிறீங்கள்....?" சில்ரென்று தாக்கிய உணர்வோடு அவளை விழியகலப் பார்த்தார் மாஸ்டர். "பாரதீய்ய்" அடிவயிற்றிலிருந்து புறப்பட்ட ஒலம் குபுக்கென வெளியேறியது.

"நீ என்ன பேச்சுப் பேசுறாய்...? விசர்ப் பேச்சு! சிவாவை உனக்குச் செய்யுறதே...? இந்த பஞ்சமாபாதகத்தை நான் செய்யவே ஊருலகம் என்னைக் காறியுமிழவே.....?"

"ஏன்.... மாமா சிவாத்தான்லை என்ன குறை?"

"குறையே...உன்ர படிப்பென்ன? உத்தி



யோகமென்ன? சிவா என்ன படிச்சவனெண்டு தெரியுமோ?"

"ஓலெவல் பாஸ்"

"தெரிஞ்சிட்டு.... பேய்க்கதை கதைக்கிறாய்...."

"இப்ப சிவாத்தான் இருபத்தைஞ்சு பேருக்கு சோறு போடுற முதலாளி! அதை நினைச்சுப்பாருங்கோ!"

"இருக்கலாம் ஆனால்.... உன்ரை லெவலுக்குச் சரிப்பட்டு வராது."

"அரவிந்தன்ரை துளசி என்ன படிச்சவ எண்டு தெரியுமே மாமா....? ஐஞ்சாம் வகுப்பு!"

"அதுக்கு?"

"எம் எஸ்ஸி முடிச்ச அரவிந்தன் அத்தான் ஐஞ்சாம் வகுப்புமட்டும் படிச்ச துளசியைச் செய்யலாமெண்டால்.... ஓலெவலும் பாஸ் பண்ணி தன்ரை சொந்தக் காலிலை நிண்டு தோட்டம் துரவு கடையெண்டு உழைக்கிற சிவாத்தானைச் செய்யுறதில என்ன தடை மாமா?"

"உத்தியோகம் புருஷலெட்சணம் புரிஞ்சுக்கோ பாரதி...... வீணாய் கண்ணீர் வடியாதை!"

"அது முன்னொரு காலம் மாமா..... இப்போ மனைவியை வெளியிலை அனுப்பிட்டு மனுஷன்மார் வீட்டிலை நிருவாகம் நடத்துற காலம்.... இப்போ உத்தியோகம் பொம்பிளை லெட்சணம்."

"இதுதான் உன்ரை முடிவோ?"

"சர்வ நிச்சயமாய்...... இந்தக் குடும்பத்தோட எனக்குள்ள உறவு ஜென்ம ஜென்மாந்திரமானது. அதை வலுப்படுத்த வேணுமெண்டால் சிவாத்தானைச் செய்யுறதுதான் ஒரே வழி. இதிலென்ன சங்கடம்? நமக்குள்ளை என்ன தகுதியும் தராதரமும்.....? மண்ணாங்கட்டி.." பாரதி உறுதியாய் நின்றதோடு அந்தத் திருமணம் நிறைவு பெற்றது. அரவிந்தனுக்கும் அந்தக் குடும்பத்துத் தொடர்பு அற்றுப் போயிருந்தது.

✧ ✧ ✧

சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை ஆரம்பமானதைத் தொடர்ந்து நேர்ந்த அவலங்களை ஜீரணிக்க முடியாது கதிகலங்கிப் போய் நிற்கின்றான் அரவிந்தன். கிளிநொச்சியில் சிவாவும் பாரதியும் இருப்பது தெரிந்து சிறிது ஆறுதல் பிறந்தது. எல்லாம் இழந்து கையில் ஒரு பயணப் பொதியோடு நடந்து களைத்தவனை செந்தில்வேள் மாஸ்டர் கண்டு கொண்டார்; தன் மனைவியிடம் சொன்னார்:

"உன்ரை லெட்சாதிபதி சீமான்.... கோடீஸ்வரத்தியோட ராசுவின்ர படலையடியில நிக்கிறார்! மகன்ரை கையில ஒரு கிசுகிசுப்பைதான் இருக்கு....! தெய்வம் நிண்டறுக்குமெண்டது பின்ன பொய்யே?" கறுவிக் கொண்டார்.

பாரதிக்கு வேதனை கிளர்ந்தது. "என்ன மாமா.... இந்த அந்தரிச்ச நேரத்தில வன்மம் பாராட்டுறதே? போங்கோ போய்க் கூட்டியாங்கோ."

"நானோ... நடக்காது.... ஒருகாலும் நடவாது." என்றுவிட்டு அமர்ந்துவிட்டார்.

பாரதிக்குப் பொறுக்கவில்லை. விர்ரென படலை தாண்டியோடினாள். எதிரே அரவிந்தனும் துளசியும் தயங்கிக் கொண்டு நின்றார்கள். "வாங்கோத்தான் வாங்கோ துளசி.... ஏன் உதில நிக்கிறீங்கள்." பரபரவென துளசியின் கரங்களைப் பிடித்து இழுத்து வந்தாள். பின்னால் அரவிந்தன் தலைநிமிராது வந்தமர்ந்தான். அரக்கப் பரக்கத் திரிந்து காய்ச்சுவதிலும் பரிமாறுவதிலும் கண்ணாயிருக்கும் பாரதியைப் பார்த்துக் கண் கலங்கிற்று அவனுக்கு. தனக்கு எந்தவகையிலும் பொருத்தமேயில்லாத தன் தம்பியை ஏற்றுக்கொண்டு, தன் குடும்பத்தையே கட்டிக்காப்பாற்றும் பாரதியை நினைத்து வியந்தான்.

"துளசியின்ர தேப்பன் தாற சொத்தும் சுகமும் ஒரு பிரச்சனை வந்தால் புஸ்வாணமாகிப் போகும்..... பாரதி அப்பிடியில்லை. காமதேனுடா காலாகாலமாய் உழைச்சுப் போட்டு எங்களைக் கட்டியாளக்கூடியவள்" என்று தன் தகப்பன் முன்பு கூறியவையெல்லாம் அவனுள் மீண்டும் மீண்டும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

"இந்த ஊர்ல இருக்கேலாது ரவுண்ல வீடு வேணும்." என்றவன் எல்லாம் இழந்து போய் நிற்கிறான். பாரதி ஒரு அழியாச்சொத்தாய் பரிணமிக்கிறாள்.



படிப்பகம்

www.padippakam.com

ஸ்டிக்கர் பொட்டை நகர்த்தி மையத்தில் ஒட்டினாள்.

மெலிதாக பவுடர் தூவி கன்னம் ஒற்றினாள். உதடுகளை ஈரப் படுத்திக் கொண்டாள். கண்ணாடி பார்த்தாள்.

'யார் இந்த தேவதை?' கண் சிமிட்டினாள்.

கைக்குட்டையை மடித்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டாள்.

கண்ணாடியில் அம்மாவின் உருவம் தெரிந்தது.

இடுப்பில் கை வைத்துக் கொண்டு முறைத்தாள். சிரிப்பு வந்தது. அம்மாவின் அருகில் போனாள். இறுக்கிக் கொண்டாள். கன்னத்தில் சப்தம் எழ முத்தமிட்டாள்.

"போதும்... போதும்... ரொம்ப அட்டூழியம் பண்றே நர்மதா...!"

அம்மாவின் கன்னம் தட்டினாள்.

"அப்பா எவ்வளவு நேரம் காத்திட்டு இருக்காரு தெரியுமா?"

"ஒஹோ-அவ்வளவு அவசரம்னா உன் சின்னப் பையன்.

ஏ.எல். படிப்பவன்.

"ஏம்மா.. ஏன்?"

"தெரியலை."

"சரி.. வா.. சாரு வீட்டுக்குப் போகலாம்."

"உனக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தோம்."

"பஸ் வேண்டாம்... ரெண்டு ஆட்டோ பிடி... யாரெல்லாம் வர்றது?"

கிளம்பினார்கள்.

"என்னப்பா விஷயம்?"

"தெரியலை நரு... நம்ப விக்ரம் வந்து சொல்லித்தான் தெரியும்.

"விக்ரம் எங்கே?"

"முன்னால போயிருக்கான்."

"எப்படி?"

"பூச்சி மருந்து.. நைட் சாப்பிட்டுப் படுத்துட்டான்.. காலையிலேதான் தெரிஞ்சிருக்கு..!"

"ஹொஸ்பிட்டல் கொண்டு போனாங்களா?"



"இல்லை..."

தலையசைத்தான்.

"பிறகு என்ன?"

சொன்னான்.

"நோ.."

கூவினாள்.

"நிஜம் நர்மதா...

நம்ப மறுத்தாள்.

தீர்மானமாகச் சொன்னான்.

"சரி.. அங்க நேரே போவோம்...!"

விக்ரம் யோசித்து பின் தலையசைத்தான்.

**மதுமிதா**

**அ**ப்பா ரௌத்ரமானார்.

நர்மதாவின் கன்னத்தில் அறைந்தார்.

அம்மா குறுக்கே பாய்ந்தாள்.

"உங்களுக்கு என்ன பைத்தியம் பிடிச்சிருக்கா?"

"எனக்கா பைத்தியம்...? உன் பொண்ணுக்கு தான் பைத்தியம்..."

# மாறாட்டம் நியாயங்கள்...

புருஷனை போகச் சொல்றது தானே?...!"

"யேய்.. இவளே... என் புருஷனா?"

தலையசைத்தாள்.

"அவருக்கு ஆயிரம் வேலை இருக்குடி... அதை விட்டுட்டு உன்னை கார்ல கொலேஜுக்கு கொண்டு போய் விடுறாரே... அந்த மனுஷனைச் சொல்லணும்...!"

"அப்பா வந்துட்டார் பார்!"

"வாங்க.. உங்க பொண்ணு சொல்றதைக் கேளுங்க...!"

அப்பா சிரித்தார்.

"நரு குட்டி... என்ன அம்மா சண்டை போடறாளா?"

அவர் அருகில் போய் கைகளைக் கோர்த்துக் கொண்டாள்.

நாக்கு நீட்டி அம்மாவுக்கு பழிப்புக் காட்டினாள்.

அம்மா இவளை அடிக்க கை ஓங்கிக் கொண்டு வந்தாள்.

அப்பா சிரித்துக் கொண்டே அம்மா கையைப் பற்றி மடக்கினார்.

அம்மா சிரித்தாள்.

"சரி.. சரி.. நேரமாச்சு...!"

கிளம்பினார்கள்.

கல்லூரி வாசலில் இறங்கிக் கொண்டாள். அப்பாவுக்கு டாட்டா சொன்னாள்.

கார் நகர்ந்தது.

உள்ளே போனாள்.

**எ**ல்லாரும் கூட்டமாய் நின்று கொண்டிருந்தார்கள்.

வனஜா ஓடி வந்தாள்.

"என்ன வனஜ்... ஏன் இப்படி ஓடி வர்றே! என்னாச்சு?"

வனஜா மூச்சுவாங்க பேசினாள்.

"நம்ப சாரு... நம்ப சாரு..!"

நர்மதா பதறினாள்.

"சாருவுக்கு என்னாச்சு?"

"அவளோட தம்பி சுகுமாரன் தற்கொலை பண்ணிக்கிட்டான்."

சுகுமாரன்.

சுகு.

"இல்லே.. எல்லாம் முடிஞ்ச பிறகு எதற்கு ஹொஸ்பிட்டல்?"

"எதுக்காகப்பா.. ரொம்ப சின்னப் பையனாச்சே!"

"தெரியலப்பா.. வீட்ல என்ன சொன்னாங்களோ?"

மேலே பேச முடியாமல் மௌனமானார்கள்.

**வீ**ட்டு வாசலில் கூட்டமாய் இருந்தது.

உள்ளே போனார்கள்.

சாருமதி பாய்ந்து வந்து இவளைக் கட்டிக் கொண்டாள்.

"சுகு போயிட்டான் நரு...!"

கதறினாள்.

சுகுமாரனைப் படுக்க வைத்திருந்தார்கள். முகம் சாந்தமாயிருந்தது.

தூங்குபவனைப் போல் இருந்தான்.

கண்ணீர் பொங்கியது.

'நரு அக்கா.. நரு அக்கா...'

அவன் குரல் மனசுக்குள் கேட்டது.

'ஏன் சுகு இப்படி செய்தாய்?

எவ்வளவு கனவுகள் வைத்திருந்தாய்?

கம்ப்யூட்டரில் பெரிய ஆளாக வேண்டும்: அமெரிக்கா போக வேண்டும். எல்லாவற்றையும் ஏன் உதறினாய்?'

மெல்ல அவன் அருகில் போனாள்.

குனிந்தாள்.

அவன் தலைமயிர் கோதினாள்.

சுகுமாரனின் அம்மா கதறினாள்.

இவள் கால்களைக் கட்டிக் கொண்டாள்.

நர்மதா அப்படியே சரிந்து அவளைக் கட்டிக் கொண்டாள்.

விக்ரம் இவள் தோளை தொட்டான்.

கண் ஜாடை காட்டி வெளியே கூப்பிட்டான்.

பின்னால் போனாள்.

யாரும் கவனிக்கவில்லை.

"என்ன விக்ரம்?"

"சுகு எப்படி செத்தான் தெரியுமா?"

"தெரியலே.. ஏதாவது லவ் ஃபெய்லியரா?"

அப்பா கோபத்தில் கத்தினார்.

நர்மதா மௌனமாக அப்பாவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அம்மா உலுக்கினாள்.

"என்னடி பண்ணினே..? உன் அப்பாவுக்கு உன் மீது கோபம் வந்ததே கிடையாதே!"

அம்மாவின் கை விலக்கினாள்.

"போதை மருந்து சாப்பிட்டு வந்தேன்...."

அம்மா தலையிலடித்துக் கொண்டாள்.

"அடிப்பாவி...!"

"பாவி... யார் நானா? உன் புருஷனா...?"

அப்பா முறைத்தார்.

"வேண்டாம் நரு... கெட்ட பழக்கம்... விட முடியாது... செத்துடுவே...!"

"ஏம்பா... உன் புள்ளைக்கு ஒரு நியாயம்... ஊரான் புள்ளைக்கு ஒரு நியாயமா..?"

"என்ன உளர்றே?"

"எனக்கு எல்லாம் தெரியும்.. ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம்னு சொல்லிட்டு என்ன பண்றேன்னு தெரியும்.. போதை மருந்த சப்ளை பண்றியே... எனக்கு தெரியும்பா..!"

அம்மா அதிர்ந்தாள்.

"சாருவோட தம்பி சுகுமாரன்.. புத்திசாலிப் பையன்... பெரிய ஆளா வர வேண்டியவன்... கல்லூரி, ஸ்கூல் வாசல்லே கஞ்சா, அபின் வியாபாரம் பண்றாங்களே உங்க ஆளுங்க... அவங்ககிட்ட பழகிட்டான். போதை மருந்தை விட முடியலை... வீட்ல திட்டிருக்காங்க.. தற்கொலை பண்ணிக்கிட்டான்."

அப்பா தலை குனிந்தார்.

"நானும் பழகிக்கிறேன்... ஒவ்வோர் இடமாய்த் தேடிப் போய் வாங்கி சாப்பிடப் போறேன்."

அப்பா அவளையே பார்த்தார்.

மெல்ல நடந்தார்.

தொலைபேசி எடுத்தார்.

"டானியல்..! கல்லூரிகளின் வாசல்களில் இருக்கிற நம்ப ஆளுங்க எல்லாரையும் உடனே கம்பெனிக்கு வரச்சொல்..!" அப்பா நேராக பூஜை அறைக்குள் போனார்.

---

**மா**லை மணி நான்கு. குபேரா ஹோட்டல் அறை எண் பதினெட்டில் ஓர் இளம் ஜோடி......

விஜய், எங்கேயோ வெறித்தபடி உட்கார்ந்திருந்தான். வித்யா, தன் முகத்தை முழங்காலில் புதைத்து உட்கார்ந்திருந்தாள்.

"வித்யா!" மெல்லிய குரலில் கூப்பிட்டான் விஜய். வித்யா, மெல்ல நிமிர்ந்து பார்த்தாள். அவள் விழிகள் அழுது சிவந்திருந்தன.

"முடிவு பண்ணிட்டியா, வித்யா?"

"முடிவோட தானே விஜய் வந்திருக்கோம்!"

"இனிமேல், இந்த உலகம் நமக்குச் சொந்தம் கிடையாது. எல்லாத்தையும் மறந்துடு வித்யா!"

"நான் எப்பவோ மறந்துட்டேன் விஜய்!"

"லெட்டர் எழுதி வெச்சிட்டியா?"

"நீங்க எழுதுங்க விஜய்."

விஜய், தன் சட்டைப் பையில் இருந்த பேனாவை எடுத்து எழுதத் தொடங்கினான்.

**டம்ளரில் இருந்த பாலை எடுத்தான். அதில் விஷத்தை கலந்தான். பாதியை ஒரு டம்ளரில் ஊற்றி வித்யாவிடம் கொடுத்தான்.**

*"எங்கள் மறைவுக்கு யாரும் காரணம் இல்லை. எங்கள் காதலை உலகம் ஏற்கவில்லை. அதனால், இந்த உலகத்தை நாங்கள் ஏற்கவில்லை, இறந்த பின்பு எங்கள் உயிரற்ற உடல்களையாவது ஒன்றாக அடக்கம் செய்யவும்."*

**-விஜய்,வித்யா.**

கடிதத்தை முடித்து விட்டு வித்யாவை நிமிர்ந்து பார்த்தான். அவள் கன்னங்களில் கண்ணீர் வழிந்தது.

# உயிருள்ளவரை, உதயா!

டம்ளரில் இருந்த பாலை எடுத்தான். அதில் விஷத்தை ஊற்றினான். ஒன்றாகக் கலந்தான். பாதியை ஒரு டம்ளரில் ஊற்றி, வித்யாவிடம் கொடுத்தான். தானும் ஒன்றை அருந்தினான்.

இருவரும் ஒன்றாக டம்ளர்களைக் கீழே வைத்தனர்.

வித்யா, தேம்பித் தேம்பி அழுதாள்.

"அழாதே வித்யா" அவள் கண்களை மென்மையாகத் துடைத்தான்.

கைகளைக் கோர்த்தபடி, சில வினாடிகளில் கீழே சரிந்தனர்.

"கட்" என்று உரத்த குரலில் சொன்ன டைரக்டர் மணிமாறன் கைகளைத் தட்டினார். "இந்த ஷாட் ரொம்பப் பிரமாதம்! மதுமிதா, தினேஷ் எழுந்திருங்க. நிஜத்திலும் ஒரு காதல் இப்படி இருக்காது. அசத்திட்டீங்க. உங்களுக்கு இந்தப் படத்தில் 'அவார்ட்' நிச்சயம்!"



**வி.பிரபாதேவி**

முன்னணி நட்சத்திரங்கள் மதுமிதாவும் தினேசும் கோரசாகச் சிரித்தனர்.

டைரக்டர் மணிமாறன் அதோடு அன்றைய காட்சிகளை முடித்துக் கொண்டு வீட்டுக்கு கிளம்பினார்.

மறுநாள் காலை, மணிமாறன் தன் வீட்டில் ஷூட்டிங்கிற்குக் கிளம்பிக் கொண்டிருந்தார். ஃபோன் மணி அடித்தது.

எதிர் முனையில் புரொடக்ஷன் மானேஜர் சண்முகம் 'குட்மோர்னிங்' சொன்னார்.

"குட்மோர்னிங் இருக்கட்டும். என்ன விஷயம் சொல்லு?"

"சேர்! இன்னிக்கு ஷூட்டிங் கேன்சல் பண்ணியாகணும்...."

"ஏன், என்னாச்சு?" என்றார் மணிமாறன், படபடப்பாக.

"நம்ம ஹீரோயின் மதுமிதாவோட அம்மாவுக்கு 'ஹார்ட் அட்டாக்' காம். நேத்து நைட் மெஸேஜ் வந்து, ஊருக்குப் போயிட்டாங்களாம். மதுமிதாவோட மானேஜர் போன் பண்ணி இப்பத்தான் சொன்னார்."

"ஆமா, நாளைக்கு வந்துடுவாளா மதுமிதா?"

"ரெண்டு நாளாகுமாம்."

"ஓ.கே. எல்லோருக்கும் போன் பண்ணிச் சொல்லிடு. ரெண்டு நாள் ஷூட்டிங் கேன்சல்'னு"

"சொல்லிடறேன் சேர்."

"சரி, வெச்சிடு."

ஃபோனை வைத்துவிட்டுத் திரும்பிய மணிமாறன் முன், அவரது ஒரே மகள் கீர்த்தனா வந்து நின்றாள்.

"என்னம்மா,கல்லூரிக்கு கிளம்பலையா?"

"இல்லப்பா, இன்னிக்கு லீவு போடப் போறேன்."

"ஏன்?"

"உங்களுக்கு இன்னிக்கு ஷூட்டிங்க் கேன்சல்'னு போன்ல பேசிட்டிருந்ததைக் கேட்டேன். ஓய்வா இருக்கற உங்கக்கிட்ட நான் ஒரு முக்கியமான விஷயம் பேசணும்."

"ஏற்கனவே நீ பேசின விஷயம் தானே, உன் லவ் பத்தித்தான்."

"ஆமாம் டாடி, நான் அந்த உதயகுமாரையே மேரேஜ் பண்ணிக்கிறதா இருக்கேன்."

"ஷட் அப்! நான் தான் ஏற்கனவே சொல்லிட்டேனே கீர்த்தி. இன்னிக்குத் தமிழ் நாட்டிலேயே பெரிய புரடியூசர் கே.வி.எம். தன் ஒரே பையனை, உனக்குத் தர காத்துக் கிட்டிருக்கார். இன்னும் மூணு மாசத்தில உன் படிப்பு முடிஞ்சதும், உனக்கும் அவர் பையனுக்கும் கல்யாணம். அந்த வெறும்பயல் உதயகுமாரை மறந்துடு. நான் சொன்னா சொன்னதுதான்."

- என்று மணிமாறன் சொன்ன வினாடியில் கீர்த்தி, தன் மூடியிருந்த இடது கையைப் பிரித்துத் தந்தையின் முன் காட்டினாள். அதில், கிட்டத்தட்ட இருபது மாத்திரைகள் மஞ்சள் நிறத்தில் மினுமினுத்தன.

மணிமாறன், 'என்ன-ஏது' என்று சுதாரித்துக் கேட்குமுன், அத்தனையும் வாயில் போட்டுக் கொண்டு, அருகில் மேசையில் இருந்த டம்ளர் தண்ணீரை 'கட கட' வென்று குடித்து மாத்திரைகளை விழுங்கினாள்.

"டாடி! நான் நேத்து குபேரா ஹோட்டலில் நடந்த உங்க ஷூட்டிங்க் பார்க்க வந்திருந்தேன். காதல் தோல்வியால சாகிற மாதிரி ஸீன் எடுத்தீங்க. உங்க பட கதாநாயகியோட முடிவை நானும் எடுத்திட்டேன். நான் இப்போ சாப்பிட்டது பவர்புல் தூக்க மாத்திரைகள். உதயாவை மறந்து வாழ்றதைவிட சாகறதே...." என்று சொல்லிக் கொண்டிருந்தபோதே, கீழே சரிந்து விழுந்தாள். அவளது விழிகள் உறக்க மயக்கத்தில் செருகின.

வியர்த்துப் போன மணிமாறன் பதட்டத்துடன், உடனே டாக்டருக்கு போன் செய்துவிட்டு, மகளின் அருகில் அமர்ந்து கண்கலங்கி புலம்பினார்.

"உனக்கு 'உயிரை விட, உதயா முக்கியம்'னா அவனையே கல்யாணம் பண்ணி வெச்சிருப்பேனே. நீ எனக்கு ஒரே பொண்ணாச்சே! நீ போயிட்டா நான் என்ன பண்ணுவேன்?"

குழந்தை மாதிரி அழுத தந்தையின் புலம்பலைக் கேட்டு தரையிலிருந்த கீர்த்தனா, துள்ளி எழுந்தாள்!

"டாடி! நேத்து உங்க பட ஹீரோயின் நடிச்ச மாதிரி நானும் நடிச்சேன்! நான் சாப்பிட்டது விட்டமின் மாத்திரைதான். பேச்சு மாறாம உதயாவையே எனக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும், இல்லேன்னா, நிஜமாவே தூக்கமாத்திரை சாப்பிட்டு செத்துருவேன்."

"இல்லேம்மா, நீ உதயாவையே கல்யாணம் செஞ்சுக்க" என்றபடி மகளின் தலையைக் கனிவாகக் கோதிவிட்டார். டைரக்டர் மணிமாறன்.

---

# அது போதும்....

**க**ல்யாண வீடு களைகட்டிக் கொண்டிருந்தது. அங்குமிங்கும் ஓடி, ஓடி அலுவல்களை கவனித்துக் கொண்டிருந்தார்கள். முத்துக்குமரன் ஆலயத்தில் இருந்து மணமக்கள் இங்கு வருகை தர இருக்கிறார்கள்.

அனைத்தையும் ஒரு ஓரமாக நின்று அவதானித்துக் கொண்டிருந்தாள் பிரியா! அவளது கடைசித் தம்பி வசந்தனின் திருமணம் இன்று! எத்தனை சிரமத்தின் மத்தியில் இவனைப் படிப்பித்து இந்த உயர்நிலைப் பதவிக்கு உயர்த்தியவள் இந்த பிரியா! சாதாரண ஆசிரிய பதவிக்குள் இரு பிள்ளைகளுடன் வசந்தனையும் கவனித்தாக வேண்டும். வசந்தனின் வளர்ச்சியில் சிறிய பங்கும் கூட இல்லாத அவர்களின் மூத்த சகோதர, சகோதரிகள் மார்பு தட்டிக் கொண்டு, 'எங்கள் தம்பி' என்று தம்பட்டம் தட்டுகிறார்கள்.

எதுவுமே அறியாதவள் போல் பிரியா ஒதுங்கி நிற்கிறாள்.

90ம் ஆண்டு சுற்றிவளைப்பிலே காணாமல் போன நூற்றுக்கணக்கானோரில் பிரியாவின் கணவனும் ஒருவர். தேடாத இடமே இல்லை. இதுவரைக்கும் விடுபடவில்லை.



ஆனால் பிரியாவால், 'மரணமடைந்துவிட்டார்' என்ற முடிவுக்கு வரமுடியவில்லை. அவள் இதயத்தில் நித்தியமாய் கணவன் வாழ்கிறார்.

நடைமுறை வாழ்க்கையில் அவள் பட்ட வேதனைகள் எம்மாத்திரம்! அவைகளை எல்லாம் வெளிக்காட்டி, மற்றவரின் கணநேர அனுதாபங்களைப் பெற அவள் விரும்ப வில்லை. அதில் நம்பிக்கையும் இல்லை.

'வாராயென் தோழி வாராயோ' பாடல் நாதஸ்வரத்தில் உச்சமாக ஒலிக்கிறது. 'வீடியோ' காரர்கள் விழுந்தடித்து படமாக்கிக் கொண்டிருந்தார்கள். எவருமே பெரிதாக பிரியாவை நினைத்ததாகத் தெரியவில்லை. வாசலுக்கு வசந்தன் தம்பதி வந்து விட்டனர். மணம் முடிந்த கையோடு வீட்டிற்கு வருகின்ற வருகையல்லவா? வலது காலை எடுத்து வைத்து வருகின்றனர் தம்பதியினர்! "மஞ்சள் எங்கே? ஆராத்தி தட்டு எங்கே? குத்து விளக்கைப் பிடியுங்கள்." திருமணவீட்டு சொந்தங்களின் குரல்கள் அவை! வசந்தனின் கண்கள் மட்டும் எதையோ தேடின!

ஓரமாய் நின்றிருந்து...ஆனந்தக் கண்ணீர் பெருக்கினாள், பிரியா!

சைகையால் அழைத்தான் வசந்தன்;

கண்களைத் துடைத்தபடி அருகில் வந்தாள் பிரியா!

காதுக்குள் மெதுவாக கூறினான்! "அக்கா! நீ தான் எங்களுக்கு ஆராத்த

**கனகசபை தேவகடாட்சம்**

வேணும்." மறுப்பு கூற முனைந்தாள் பிரியா. "தேவையில்லாத கதை ஒண்டும் வேணாம், நான் சொன்னதைச் செய்" வியர்த்துக் கொட்டியது அவளுக்கு!

நெற்றி வியர்வை, அவள் குங்குமத்தை சுற்றி படர்ந்திருந்தது. குங்குமம் சிதைவடையாதவாறு மெதுவாக தன் கைக்குட்டையால் நெற்றி வியர்வையை ஒற்றி எடுத்தாள்.

மனதில் ஏதோ உத்வேகம் தள்ள, விறுவிறுவென சென்று ஆராத்தித் தட்டை தூக்கினாள் பிரியா.

மூலைக்கு மூலை முணுமுணுப்பு! குசுகுசுப்பு!

இவர்களின் ஏக பிரதிநிதியாக பிரியாவின் சகோதரி பேசினாள்! "இஞ்சபார்...பிரியா! நீயேன் இந்த வேலைகளை செய்து கஷ்டப்பட வேணும்-" என்று கூறியபடி ஆராத்தித் தட்டை பிரியாவின் கையிலிருந்து லாவகமாக பெற முற்பட்டாள். எரிமலையானாள் பிரியா!

வசந்தனுக்கு இன்றைய மணநாளை விட மகிழ்ச்சி, அவனின் இதய ஆதங்கம்; வார்த்தைகளாக கொட்டின!

"இந்த நிலைக்கு என்னைக் கொண்டு வந்த பிரியா அக்காவை தள்ளிவைச்சா கலியாண வீடு நடத்தச் சொல்லுறியள்? என்ட படிப்பு செலவுக்கு சகோதரங்கள் எண்டு நீங்கள் ஒரு சதம் தந்திருப்பியளா? சடங்கும், சம்பிரதாயமும் பார்க்க வந்திட்டியள். பிரியா அக்கா எப்படியானாலும் என்னை வாழ வைத்த தெய்வம். அவதான் முழு சம்பிரதாய சடங்கும் செய்யணும்." தொடர்ந்து சொன்னான்;

"ம்...ம்... பிரியாக்கா! என்ன பார்க்கிறாய்? ஆராத்தி எடுத்து, குத்து விளக்கை வை"

பொரிந்து தள்ளி விட்டு, தன் புது மனைவியை நோக்கினான் வசந்தன். கண்ணால் ஆமோதித்து சிறு புன்னகை உதிர்த்தாள், அவள்!

அது போதும் அவனுக்கு!



படிப்பகம்

www.padippakam.com



# மூட மறுத்த விழிகள்

தருவது ரசிகன்

வானமகள் நெற்றியில் நிலவுப் பொட்டு. அதன் வெளிச்ச வீச்சில் இருள் விலகி ஓடிக்கொண்டிருந்தது.

அந்தப்புரத்தில் அழகிய பஞ்சணையில் சந்திரகலா. அவள் நெஞ்சத்தில் நினைவுகளின் உலா.

நிலவு வெளிச்சத்தில் அவள் விழிகள் வலைவீசித் தேடிக்கொண்டிருந்தன. தேடப்பட்டவன் இளைய நம்பி. அவன் தேவைப்பட்டது காதலன் என்பதால்.

இப்போதுதான் அவளைவிட்டு பிரிந்துசென்றான். நாட்டின் இளவரசன் இளையநம்பியை மன்னன் அவசரமாக அழைத்தான். அருகில்தான் மன்னனின் மாளிகை.

"அவசரமான காரணமாக இருக்கலாம். உடனே வருகிறேன். விழியை மூடாமல், வழியைப் பார்த்திரு. வந்ததும் உன்னை மூடுவேன் காத்திரு!" விஷமமாய் சொல்லிவிட்டு விரைந்து போய்விட்டான்.

அவனுக்கு கேட்கக்கூடியதாக உரத்துச் சொன்னாள்: "எனக்கு தூக்கம் வருகிறது. தூங்கப் போகிறேன்!"

சென்றவன் வாயில்படியில் நின்று திரும்பி, மெல்லிய கோடாய் உதட்டில் தெரிந்த புன்னகையுடன் சொன்னான்: "முடியாது உன்னால். முயன்றுபார்!"

"ஏன்?"

"கொய்யப்பட்ட கனி மரம்புகாது. உண்ணப்படவேண்டும். அல்லது உரு மாறிவிடும். தட்டி எழுப்பப்பட்ட புலி தூங்காது. இரைதான் தேடும்." கண்களை சிமிட்டிவிட்டு சென்றுவிட்டான்.

அவன் சொன்னதின் அர்த்தம் என்ன? சந்திரகலா யோசித்தாள்.

தூக்கம் வராது என்பது மெய்யிலும் மெய்தான்! அவன் வரும்வரை விழிமூடாது என்பதும் மெய்தான்.

ஏன் மூட மறுக்கின்றன?

காதலனைக் காணவில்லை என்ற சோகமா? அது எப்படி? இப்போதுதானே இங்கிருந்து போனார். அதுவும் அருகில்தானே போனார். இப்போது திரும்ப வரவும்தானே போகிறார்.

மூட மறுப்பது சோகத்தால் அல்ல. என் தேகம் சுடுவது பிரிவுத் துயரத்தாலும் அல்ல.

எனவே-எதனால்?

புரிகிறது. புத்தியிலே காரணம் புகுந்ததும் நெஞ்சுக்குள் வெட்கம் வருகிறது.

'என் விழிகள் மூட மறுப்பது மோகத்தால்! காளையவன் வளர்த்துவிட்டுப்போன விரகதாபத்தால்! ஊதி ஊதி சிறு பொறியை பெரு நெருப்பாக்குவதுபோல, அணைத்தும், அதரங்களை நனைத்தும், செவிக்குள் ஆசை வார்த்தைகளை நுழைத்தும் என் ஆசைத்தீயை அகலத்தீயாக்கி விட்டுப் போய்விட்டாரே! தேகம் சுடத்தானே செய்யும். தேவை அறிந்து விழி திறந்திருக்கத்தானே செய்யும்' என்று நினைத்தாள் சந்திரகலா.

'அவர் சொன்னது சரிதான். கொய்யப்பட்ட கனியின் நிலைதான் எனது நிலையும் இடறப்பட்ட புலியின் நிலைதான் எனது மோகமும்.' மனம் ஆமோதித்தபோதே, அவன் மீது சிறிது கோபமும் பிறந்தது.

இடறிவிடுவானேன், இடைநடுவில் விலகி ஓடுவானேன்.

அவன் செயல்களை நினைத்தால், மனதில் இன்பம்கலந்த சிரிப்பும் எழுந்தது.

"கண்களைத் துணியால் கட்டிக் கொண்டு, ஒரு போட்டி வைக்கலாமா?" என்று கேட்டான்.

"யார் கண்களை?"

"என் கண்களைத்தான்!"

"அதுதானே பார்த்தேன். என் கண்களை என்றால் ஓடிவிடலாமோ என்று நினைத்தேன்!"

"ஏன் பயமா?"

"பயம்தான் கண்களைத் திறந்திருக்கும் போதே இந்தப் பாடு என்றால், கண்களையும் மூடியிருந்தால், அப்பப்பா உங்களை நம்ப முடியுமா?"

"கண்கள் திறந்திருந்தாலும் இன்று நீ தப்பமுடியுமா? சரி, போட்டியை ஆரம்பிக்கலாமா?"

"என்ன போட்டி?"

"நீ எங்கே மறைந்திருந்தாலும் நான் கண்டுபிடித்துவிடுவேன்."

"அது முடியாது!"

"முடிந்தால்!"

"முடியாது!"

"சரி, முடிந்தால் நான் கேட்பதை நீ தரவேண்டும்."

"என்ன கேட்பீர்கள்?"

"நம்பிக்கை இருந்தால் இந்தக் கேள்விக்கே இடமில்லையே! நீ தானே வெல்லப் போகிறாய்!"

"அதுதானே! நான் தயார்"

அவன் கண்களைக் கட்டிக் கொண்டான். அவள் புள்ளி மானாய் உள்ளே ஓடி அறையின் திரைமறைவில் ஒளித்துக் கொண்டாள்.

இளையநம்பி அறையின் வாயிலில் நின்று நிதானித்தான். அவளுக்கு எதிர்ப்புறமாய் சென்று கைகளை வீசித் தேடினான்.

பின்னர் அவள் நிற்கும் இடம்நோக்கி வந்து திரைச் சீலையை தொட்டுப் பார்த்தான். பின்னர் கைகளை நகர்த்தி வீசிப் பார்த்து இடதுகரத்தால் தொட்டான். தொட்டது அவள் இடையில்.

'என்ன இது? சந்திரகலா நீ எங்கே இருக்கிறாய்?' கேட்டுக்கொண்டே இடையில் இருந்து வருடியபடியே, அறியும் முயற்சி போல கையை மேலே கொண்டு சென்றான்.

அவனுக்கும் தெரியும். அவளுக்கும் தெரியும். அவனும் நடித்தான். அவன் நடிப்பை தெரியாத அப்பாவிபோல அவளும் நடித்தாள்.

அவனுக்கு எழில் மேனியைத் தொட ஒரு நாடகம் தேவைப்பட்டது. அவன் தொட அனுமதிக்கவும், அதை ரசிக்கவும் அவளுக்கும் அந்த நாடகம் தோதாக இருந்தது.

மூச்சை இழுத்துப்பிடித்தபடி அப்படியே நின்றாள். "இப்படி ஒரு சிலையா? சிலைதான்." என்று சொல்லிக்கொண்டே அவன் கை பட்ட இடம் கண்டு, கண்களை மூடிக்கொண்டாள் சந்திரகலா.

"சிலைக்கு எதற்கு துணிபோட்டு வைத்திருக்கிறார்கள்?" கேட்டுக்கொண்டே மேலாடையில் கைதொட, சந்திரகலா அவன் கையைப் பிடித்து நிறுத்தினாள்.

"சிலைக்கு உயிர் உண்டா? அய்யய்யோ மாய மோகினியோ?" என்று பொய்யாகப் பதறினான்.

"போதும், போதும். பொய்யை உதறி, மெய் திறக்கலாம். முதலில் கட்டை அவிழுங்கள்." அவளே அவனது கண் கண்டை அவிழ்த்துவிட்டாள்.

"அட...நீயா?"

"உடம்பெல்லாம் உங்களுக்குப் பொய்!"

"உன் உடம்பில் கண்டதெல்லாம் மெய் தானே?"

"ச்சே..."

"பந்தயத்தை மறக்கலாமா?"

"யார் மறந்தது? என்ன வேண்டும்?"

"கேட்கவா, எடுக்கவா?"

"வேண்டாம், கேளுங்கள், முடிந்தால் தருகிறேன்!"

"முடிந்தால் அல்ல, முனைந்தால் தரலாம்! அசுரப்பசி!"

"உணவுதானே வேண்டும்?"

"கனி இருக்க காய் எதற்கு?"

அவளை எட்டிப் பிடித்து சிறைப்படுத்தினான். வசப்படுத்தினான்.

அப்போதுதான் கதவு தட்டப்பட்டது. உடைகளை சரிப்படுத்திக்கொண்டு சென்று கதவு திறக்க, மன்னன் அழைத்த செய்தி சொல்லப்பட்டது.

'வயதானால் சிலருக்கு நேர காலமே தெரிவதில்லை.' மன்னன்மீது மெல்லிய கோபம் வந்தது.

அவன் வருகிறானா விழி தேடியது. நிலவு வெளிச்சத்தில் தேடல் வசதியாக இருந்தது. சட்டென்று ஒரு மேகம் நிலவை மூட இருள் எட்டிப்பார்த்தது.

சந்திரகலா நிமிர்ந்து சன்னல் வழியாக நிலவைப் பார்த்தாள். மேகம் தழுவிவிலக, நிலவு மீண்டும் வெளிச்சமடித்தது.

நிலவிடம் பேசினாள் சந்திரகலா, "பிரியாது கலந்து, பிரிந்தவர் வரவில்லை. தேடுகின்றன என் விழிகள். கண்ணார அவரைக் காணும் வரை மறையாதே மதியே! விலகாதே வெண்ணிலவே!" என்றாள்.

நிலவு வெளிச்சத்தில் காதலனை விழி வலைவீசித் தேடும் காதலி நிலவோடு பேசுவதாக திருவள்ளுவர் சொன்ன குறள் இதோ.

"விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப் படாஅதி வாழி மதி."

குறள்-1210, அதிகாரம்-121.




## சிந்தியா பதில்கள்

* காதல் தோல்விக்கு முக்கிய காரணம் எது?

ஏ.எஸ்.எம்.நவ்சாத், அக்குறனை.

அவசரம்! ஆரம்பிக்கும்போதும் சரி, முற்றுப்புள்ளியிடும்போதும்சரி, நின்று நிதானிக்க நேரமில்லாத மனதின் அவசரம்.

* பணத்தைக் கண்டதும் சிலரது குணமே மாறுகிறதே?

சி.புவனேஸ்வரி, கண்டி.

தப்பு, குணம் மாறினால்தான் இப்போதெல்லாம் பணம் சேர்க்கமுடிகிறது.

* 'இந்தியன்' படம் வெற்றியா, தோல்வியா? நம் கமலின் நடிப்பு எப்படி?

ஆர்.தயாளன், குருநாகல்.

கதையில் அப்படி ஒன்றும் சத்துக் கிடையாது. கமலின் வயதான கெட் அப்பும், ஸ்டைலும் ஏ வன். படம் பார்க்கும்வரை கவனம் அங்கே இங்கே சிதறாத விறுவிறு வேகம். படம் பார்த்து முடிந்தபின் யோசித்துப் பார்த்தால் கமலின் வயதான நடிப்பின் தூள் கிளப்பல் தவிர புதிதாக என்ன இருக்கிறது? அப்படியிருந்தும் ஏதோ ஒன்று கவர்ந்து கட்டிப்போட்டு வைத்திருக்கிறதே அது என்ன? விடை பிரமாண்டமும், தொழில்நுட்பமும். என்றாலும், படம் வெள்ளி விழா காணக்கூடியதுதான்! இன்னொரு செய்தி, படத்தின் மையக்கருத்தே ஊழல் கூடாது என்பதுதான். ஆனால் இந்தியாவில் 'இந்தியன்' பட ரிக்கெட் கறுப்புச் சந்தையில் தான் வாங்கமுடிகிறதாம். இது எப்படி?! கமலே வருத்தப்பட்டிருக்கிறார்.

* தமிழக முதல்வர் கருணாநிதி தனது மகனுக்கு பதவி கொடுக்காதது பற்றி என்ன நினைக்கிறீர்?

வே. வடிவேலு, பதுளை.

கொடுத்திருந்தால், 'பாரடா குடும்ப ஆட்சியை' என்றிருப்பார்கள். கொடுக்காமல் விட்டதால், 'கொடுத்திருக்கலாமே, தவறில்லையே' என்ற அபிப்பிராயமும் உருவாகிக் கொண்டிருக்கிறது. கலைஞர் எதிர்பார்த்தது அதுதான். காலம் கனியும்போது கொடுக்கத்தான் போகிறார்.

* மின்சாரசபை ஊழியர்களின் வேலை நிறுத்தம் பற்றி?

கே.ஜவாஹர், கொழும்பு-6.

யார் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்னும் பொறுப்பின்மையின் வெளிப்பாடு!

### இந்தியனில் என்ன இருக்கிறது?

அவர்கள் தரப்பில் உள்ள நியாயத்தைக்கூட அவர்களது செயற்பாடு தகர்த்துப்போட்டுவிட்டது. மருத்துவமனையிலும் கைவரிசையைக் காட்டியது தண்டிக்கப்படவேண்டிய அநியாயம். குறிப்பிட்ட சிலரின் அடாவடித்தனத்தால் மின்சாரசபை ஊழியர்கள் சகலர் மீதும் வெறுப்பை பூசிய நடவடிக்கை.

* தமிழ் சினிமாவில் பாடல் காட்சிகள் இல்லையென்றால் எப்படி இருக்கும்?

செல்வன். ஆர்.சந்தானம், அக்கரப்பத்தனை.

கண்களுக்கு குளிர்ச்சி இருக்காது. ஜொள்ளுப்பிரியர்களுக்கு வண்ண வண்ண கனவு தோன்றாது. நடிகைகள் பலருக்கு தங்கள் கலைச் சேவையை வெளிப்படுத்தவே முடியவில்லையே என்று கடுமையான சோகம் ஏற்படும் என்றெல்லாம் சொல்ல மாட்டேன். பாடல்கள் இல்லாத கடமை கண்ணியம் கட்டுப்பாடு, குருதிப்புனல் போன்ற படங்கள் வசூலில் அடித்து தூள் பண்ணவில்லையா என்ன?

* இந்தியாவில் புதிய ஆட்சி எத்தனைகாலம் நீடிக்கும்?

க. அரியநாயகம், நீர்கொழும்பு.

காங்கிரஸ் கட்சியும், நரசிம்மராவும் அனுமதிக்கும்வரை.

* யாழ்ப்பாணம் வழமைக்கு திரும்பிவிட்டதா?

ம. விக்கினேஸ்வரன், கொழும்பு-10.

பின்னோக்கிச் சென்றுவிட்டது வெகு தூரம் என்பதால், வழமைக்கு திரும்புவதற்கும் காலம் எடுக்கும்.

* ஜெயலலிதாவைவிட்டு சசிகலாவை பிரிக்க முடியுமா?

செல்வி. கே.சுவர்ணலதா, கண்டி.

ம்ஹீம்....ஆட்சியே போனாலும், கட்சியே அழிந்தாலும் பிரிக்க முடியாத பந்தம் அது. சசியின்பிடி கிடுக்குப்பிடி. அவரும் பிடியை விடமாட்டார். ஜெயாவும் விடுபட விரும்ப மாட்டார்.

* எந்தவொரு இலங்கைத்தமிழ் அமைப்பையும் தனியாக ஆதரிக்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறாரே கருணாநிதி?

ஜெ. வின்சன், மருதானை.

அவளைத் தொடுவானேன், அவதிப்படுவானேன் என்பது மாதிரியான எண்ணம்.

* வேலை நிறுத்தங்களை கண்டித்து நடைபெற்றுவரும் போராட்டங்கள் தொடர்பாக என்ன சொல்கிறீர்?

எம்.என்.பௌஸர், கல்முனை.

ஆளும்கட்சி தனது 'பவரை' காட்டுகிறது.

* புலிகள் மீண்டும் எழுவார்களா சிந்தியா?

எம்.எச். இல்யாஸ், காத்தான்குடி.

விழுந்துவிட்ட பின்னர் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

* இரவு ஒன்பது மணிக்கு பின்னர் தொலைக் காட்சிகளை பார்க்க முடியாதாமே. நமக்கென்ன பொழுதுபோக்கு?

செல்வன். ஏ.சசிகுமார், மொரட்டுவ.

தொலைக்காட்சிகளில் அநேகமான நிகழ்ச்சிகள் பொழுதைக் கொல்வதாக எனது தாழ்மையான அபிப்பிராயம். மேலும் தூசி வாசனை கலந்த தமிழ்ப்படங்களை தேடிப் பிடிக்கும் தொலைக்காட்சி தமிழ்ப் பிரிவுகளது தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்குத்தான் சுவாரசியமான பொழுதுபோக்கு இல்லாமல் போய்விடலாம். அதுதான் எனது கவலை.

* தமிழ்த் திரைப்படங்களில் காதல் காட்சிகள் ஆபாசமாக இருக்கிறதே?

செ. மாதவன், நுவரெலியா.

கலைக்கண்ணோடு பாரும் மாதவன். 'கதைப்படி அவசியம் ஏற்பட்டால் தவிர' தங்கள் அழகைக் காட்டாதவர்கள் நடிகைகள். அவர்களே அதனை பலமுறை அடி அடி யென்று அடித்துச் சொல்லியும் ஏன்தான் நம்பமறுக்கிறீர்களோ?

## சிந்தியா பதில்கள்

* தொலைக்காட்சிப் படங்களில் அடிக்கடி முத்தம் கொடுத்து நம்மையெல்லாம் கெடுக்கிறார்களே? நிறுத்த முடியாதா?

ஆர்.ஆர்., வெல்லம்பிட்டிய.

அங்கே கொடுத்தால் இங்கே உமக்கென்ன? ஒன்றுசெய்யலாம், அலர்ஜி என்றால் நீர் தொலைக்காட்சியை நிறுத்தலாம்.

* காதலைப் பற்றி சொல்லுங்கள்?

தமிழ்ச் செல்வி இராமநாதன், ஹட்டன்.

"சுவாசிப்பதைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது." என்றொரு கவிதை உண்டு. அர்த்தம் அபாரமல்லவா.

* டியர் சிந்தியா! என் காதலி சில நேரங்களில் சிரிக்கிறாள். சில சமயம் சிரிக்கவே மாட்டேன் என்கிறாள். என்ன காரணம்?

ஆர்.ஜேக்கப், பசறை.

அடிக்கடி பவர் கட். என்ன காரணம்? மின் நெருக்கடிதான்! போதிய மழையாக நீர் பொழிந்துவிடும் அன்பை. 'பவர் கட்' இருக்காது.



# "என்னைப் போலவே ஆடுகிறார்"

## டெண்டுல்கரைப் புகழ்ந்தார் பிரட்மன்

அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர் பிரட்மன் வெகு பிரபலமானவர்.

டெஸ்ட் ஆட்டங்களில் சராசரியாக 99.94 ரன்களும், முதல்தர கிரிக்கெட் ஆட்டங்களில் சராசரியாக 110.19 ரன்களும் குவித்து கிரிக்கெட் இரசிகர்கள் மத்தியில் நிலையான இடத்தைப் பிடித்தவர்.

அவரது இரசிகர்கள் பலர் தமது பிள்ளைகளுக்கு பிரட்மன் என்று பெயர் சூட்டு மளவுக்கு கொடிகட்டிப் பறந்தவர்.



தற்போது அவருக்கு 87 வயது. கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றபின்னர் தொலைக்காட்சிகளில் தோன்ற மறுத்து வந்தார். பத்திரிகையாளர்களை சந்திப்பதையும் தவிர்த்துவந்தார்.

கிட்டத்தட்ட 40 வருடங்கள் அமைதியாக இருந்த பிரட்மன் சமீபத்தில் முதன்முதலாக அவுஸ்திரேலிய தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்தார். 'பிரட்மன் நொட் அவுட் 87' என்ற பெயரில் அவரது பேட்டி ஒளிபரப்பானது.

தனது பேட்டியில் டெண்டுல்கரையும், லாராவையும் பாராட்டியிருக்கிறார் பிரட்மன்.

டெண்டுல்கர் பற்றி பிரட்மன் பின்வருமாறு கூறியிருக்கிறார்: "தற்போது கிரிக்கெட் உலகில் தலைசிறந்த வீரர்களில் ஒருவர் டெண்டுல்கர்.

நான் விளையாடுவது போலவே டெண்டுல்கர் விளையாடுகிறார். அவர் துடுப்பாட்டத்தில் கையாளும் நுணுக்கங்கள், பந்தை அடிக்கும் முறை எல்லாமே எனது ஆட்டத்தைப் போலவே உள்ளன.

லாராவுடன் டெண்டுல்கரை ஒப்பிட்டால் லாரா அதிக ஆக்ரோசத்துடன் விளையாடுகிறார். ஆட்டம் இழந்தாலும் பரவாயில்லை என்று லாராவின் ஆட்டத்தில் தெரியும்." என்று கூறியுள்ளார் பிரட்மன்.

டெண்டுல்கருக்கு பிரட்மனின் பாராட்டு 'வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டம்' கிடைத்தமாதிரித்தான்.

இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் மூன்று ஒரு நாள் போட்டிகளில் இந்தியா படுதோல்வி கண்டது. ஒரு போட்டி தவிர ஏனைய இரு போட்டிகளிலும் டெண்டுல்கர் துடுப்பாட்டத்தில் சோபிக்கவில்லை.

அதனால் மனம் வருந்திக்கொண்டிருந்த டெண்டுல்கருக்கு பிரட்மனின் பாராட்டு தெம்பைக் கொடுத்திருக்கும்.

# இந்திய அணிக்குள் மோதல்

## அசார்மீது பாயும் குற்றச்சாட்டுக்கள்

இங்கிலாந்து சுற்றுப் பயணத்தின் இடை நடுவே இந்தியா திரும்பியிருக்கிறார் சித்து.

இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற மூன்று சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இரு போட்டிகளில் சித்து விளையாடினார். மூன்றாவது போட்டியில் சித்து அணியில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

அதனால் மனமுடைந்த சித்து, சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஒதுங்குவதாக அறிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி நிர்வாகத்தின் நடவடிக்கைகள் தனது சுயகௌரவத்தை பாதிப்பதாக சித்து கூறியிருந்தார்.

அதன்பின்னர் இந்திய அணி மனேஜர், மற்றும் டெண்டுல்கர், கிரிக்கெட் அணி வீரர்கள் அனைவரும் சித்துவை சந்தித்துப் பேசினார்கள். அவரது முடிவை மாற்றுமாறு கோரினார்கள். கப்டன் அசாருதீன் மட்டும் சித்துவை சந்திக்கவில்லை.

"சர்வதேசப் போட்டிகளில் இருந்து விலகும் முடிவை பரிசீலிக்கலாம். இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் தொடர்ந்து கலந்து கொள்ளமாட்டேன்" என்று கூறிவிட்டு சித்து இந்தியா திரும்பிவிட்டார்.

"சித்து சிறுபிள்ளைபோல நடந்து கொள்கிறார். அணியில் ஒருமுறை இடம்பெறாவிட்டால் திரும்பி ஓடுவதா?" என்று சாடியுள்ளார் அசாருதீன்.

இதேவேளை கபில்தேவும் அசாருதீன் மீது குற்றம் சாட்டியுள்ளார். "சித்துவின் விலகலுக்கு அசாருதீன்தான் காரணம். அணியினரை தனது சகோதரர்கள் போல நடத்த வேண்டும்" என்று கபில்தேவ் கூறியுள்ளார்.

ஏற்கெனவே இந்திய அணி நிர்வாகம்மீது படு கோபத்தில் இருப்பவர் மனோஜ் பிரபாகர். சித்து விலகியதும் அவருக்கு ஆதரவாகப் போர்க்கொடி உயர்த்தி, அசாருதீனை ஒரு பிடி பிடித்திருக்கிறார் மனோஜ் பிரபாகர்.

"தன்னை நீக்கிவிட்டு வேறு யாரையாவது கப்டனாக நியமித்துவிடுவார்கள் என்ற பயத்தில் அசாருதீன் மூத்த வீரர்களை அவமானப்படுத்தி வருகிறார். கபில் தேவையும், என்னையும் இந்திய அணியில் இருந்து வெளியேற்றுவதில் வெற்றிகண்ட அசாருதீன் இப்போது சித்துவையும் வெளியேற்றி விட்டார்.

கப்டனாக வரவாய்ப்புள்ள சஞ்சய் மஞ்ரேக்கர்தான் அசாருதீனின் அடுத்த குறியாக இருப்பார் என்று நினைக்கிறேன்" என்று ஆத்திரத்தை கொட்டித்தீர்த்திருக்கிறார் மனோஜ் பிரபாகர்.

இந்திய அணிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளால் அதன் வெற்றிவாய்ப்புக்கள் மேலும் மோசமாகலாம் என்று கிரிக்கெட் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை இந்திய அணியில் வேகப் பந்து வீச்சாளர் சலில் அங்கோலா மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து சுற்றுப் பயணம் முடிந்து இந்திய அணி திரும்பியதும் அணியில் பல மாற்றங்கள் ஏற்படலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 34

இராமபிரான் வீரதீரத்தைப் பற்றி அகம்பன் வாயால் கேட்ட இலங்கேஸ்வரன் இராவணன் சற்று நிலைகுலைந்தான்; எனினும் இராமரின் பத்தினி சீதையின் அழகினைப் பற்றி அகம்பன் கூறிய வார்த்தைகளால் தடுமாற்றமடைந்தான். பல வருடங்களுக்கு முன்னர் ஒரு நொடிப் பொழுதில் மட்டும் அவளுடைய எழிலுருவத்தைக் கண்டு விபரிக்க முடியாத வேட்கை கொண்டவன். தன்னால் தூக்கி நிறுத்தவே முடியாத சிவதனுசினை ஒரே கையால் தூக்கி நிறுத்தி நொடிப் பொழுதில் நாணேற்றி, அவ்வில்லை இரு துண்டுகளாக முறிந்து விழும்படி செய்தவன் இராமன். அப்போது அவன் பால்மணம் மாறாச் சிறுவன் போல் காட்சி தந்தவன்.

இராமன் சிவதனுசினை முறித்தமையினால் ஏற்பட்ட ஏமாற்றமும் வெறுப்பும், சீதையைக் கண்டமையினால் ஏற்பட்ட வியப்புணர்வை அன்றே ஓரளவு அணைத்திருந்தது. இன்று அதே சீதையின் பேரெழிலை அகம்பன் மூலம் கேட்டதும் இராவணனின் எண்ணங்கள் சிறகடித்துப் பறந்தன. எப்படியாவது அந்த அழகியைத் தன்னுடைமையாக்கி விட வேண்டும்: இதனால் தனது தம்பிமாரையும் அரக்கர் படையினையும் அழித்தவனைப் பழிவாங்கலாம். அதுமட்டுமல்லாமல் மிதிலை அரசவையில் தன்னையே வெட்கித் தலைகுனிய வைத்த இராமனுக்கு எப்படியாவது தலை குனிவை ஏற்படுத்தலாம்.

சீதையைக் கவர்வதன் மூலம் இராமருக்குப் பாடம் புகட்டலாம் என்ற எண்ணத்துடன் தனது தாய் மாமனான மாரீசனை நாடி இலங்கேஸ்வரன் தனது வானரதத்தில் புறப்பட்டான்.

## தாடகையின் தனயன்

மாரீசனைப் பற்றி வாசகர்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? சுகேது என்ற யட்சகுல மன்னனுக்கு பிரம்மாவின் வரத்தினால் தாடகை என்ற அழகி பிறந்தாள். அவளை சுந்தன் என்பவன் மணந்தான். இவர்களுக்கு மகனாகப் பிறந்தவனே மாரீசன். சுந்தன் தனது அகந்தையால் அகத்திய மாமுனிவருடன்மோதி இறந்தான். இதனால் கோபமடைந்த தாடகையும் மகன் மாரீசனும் அகத்தியருடன் போரிடச் சென்றனர். இவர்களைக் கொன்றுவிடாமல் நரமாமிசம் உண்ணும் இராக்கதர்களாகும்படி முனிவர் சாபமிட்டார்.

அரக்கர்களால் தங்கள் யாகங்கள் பாழடிக்கப்படுவதைத் தடுக்க அயோத்தியிலிருந்து விசுவாமித்திர மாமுனிவர் இராமரையும் இலக்குவனையும் தமது தவோவனத்துக்கு அழைத்து வருகிறார். வேள்வியை நடத்த விடாமல் பாழடிக்கவந்த தாடகையையும் ஏனைய அரக்கர்களையும் தமது பாணங்களுக்கு இராம-இலக்குமணர் இரையாக்கு கின்றனர். மாரீசனின் உயிரை இராமர் பறிக்க வில்லை. அவர் ஏவிய பாணம் மாரீசனை பல காததூரம் தூக்கிச் சென்று சமுத்திரத்தில் வீசுகிறது.

இராமபிரானின் வீர தீரத்தை நேரில் கண்டு அனுபவித்தவன் மாரீசன். இராமர் ஒரு தெய்வீக புருடர் என்பதை உணர்ந்து தனது தீய குணங்களனைத்தையும் விட்டொழித்து தவ வாழ்க்கையை மேற்கொள்ளலானான். ஒரு மலையடிவாரத்தில் தவோவனம் அமைத்து இறைவனை நோக்கித் தவமிருந்தான்.

இலங்கேஸ்வரனின் அரசவையில் எக்காரியத்திலும் ஆலோசனைகளை வழங்க அமைச்சர்கள் இருந்தார்கள். அரக்கர் குருவும் இருந்தார். நாள், கோள், நட்சத்திரங்களைக் கொண்டு ஆருடம் கணிக்கும் சோதிடர்களும் இருந்தனர். இருப்பினும் அரசியலிலோ அல்லது அன்றாட வாழ்விலோ தனக்கு ஏற்படும் சிக்கல்களையிட்டு அறிவுரை கூறுவதற்கு, தனது தாய் மாமனாகிய மாரீசனையே இராவணன் நாடுவது வழக்கம். இதற்கமைய சீதையைக் கவர்வது தொடர்பாக ஆலோசனை பெற மாரீசனை நாடி ஓடினான் இராவணன்.

## மாமனும் மருமகனும்

வான வீதியில் விமானத்தில் பறந்து வரும் தனது மருமகன் இராவணனைக் கண்ட மாரீசன், அவனை வரவேற்க ஆயத்தமானான். தரை இறங்கியதும் இராவணனை கைலாகு கொடுத்து இறக்கி வரவேற்று தகுந்த உபசரணைகளை இராவணனுக்குத் தந்தான். மருமகனின் முகத்தில் வாட்டம் கண்ட மாரீசன்,

"இலங்காதிபதியே! என்றும் எழுகதிரோன் போல் எழிலோடு துலங்கும் உன் முகம் இன்று கார் முகில் சூழ்ந்த வான்


# இராவணனின் தாய் மாமன் மாரீசன்

வெளிபோல் காட்சி தரக்காரணம் என்னவோ?" என்று வினவினான்.

"மாமா! தண்டகவனத்தில் ஜனஸ்தானத்தில் என் அருமைத் தம்பிமார் மூவரும் மாண்டு போனார்கள். அரக்கர் பெரும் படை ஒன்றும் அடியோடு அழிந்து போய் விட்டது. இத்தனையையும் செய்தவன் ஒரேயொரு மாநிடப் பதர். அயோத்தி நகராண்ட தசரதமாமன்னனின் மூத்த மகனாம்- இராமனாம் அவன் பெயர். உடனே சென்று ஒரே மூச்சில் அவனை ஊதியே தொலைத் திருப்பேன். எதற்கும் தங்களுடைய ஆலோசனை நாடியே வந்துள்ளேன்."

"என்ன பெயர் சொன்னாய்?... இராமனா....?"

"ஆம்!" என்று இராவணன் ஒரே வார்த்தையில் கூறியதும் மாரீசன் தன் கண்களை சிறிது நேரம் மூடிக் கொண்டான். இராவணன் தொடர்ந்தான்.



"இராமன் அரசகுமாரனானாலும் இன்று அவன் மரவுரி தரித்து கானில் அலைகிறான். அவனைப் போருக்கிழுக்க வாய்ப்பே இல்லை. இன்றைய நிலையில் இந்த இராமனுக்கு உரிய ஒரேயொரு உடைமை அவன் மனைவி சீதைதான். அவளைக் கவர்வதன் மூலம் இராமனைப்பழி தீர்க்க எண்ணுகிறேன். இதற்குத் தங்கள் மேலான அறிவுரையும் ஒத்துழைப்பும் அவசியம் தேவைப்படுகிறது மாமா!"

மாரீசனின் மூடிய கண்கள் திறந்து கொண்டன. அவன் முகத்தில் கலவரம் படிந்திருந்தது. எதிரே அமர்ந்து தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த வார்த்தைகளை நீங்கள் உதிர்ப்பதைப் பார்த்திருந்து விட்டேன். இல்லையேல்....!" என்று மேலும் வார்த்தைகளை வெளியிடாமல் அடக்கிக் கொண்டான்.

## மாரீசனின் அறிவுரை

மாரீசன் இராவணனின் கோபத்தால் மசிந்து விடவில்லை. ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு பல வேதாந்தக் கருத்துக்களை தனது மருமகனுக்கு எடுத்துரைத்தான். இறுதியாக, "இலங்கேஸ்வரா! சிவபக்தன் நீ! பாபம் புண்ணியம் ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்க்கும் திறன் படைத்தவன் நீ! நன்மைக்கும் தீமைக்குமுள்ள வேற்றுமைகளை உணரும் திறன் படைத்தவன் நீ! இப்பூவுலகின் கண் உருவெடுத்த எந்த ஒரு உயிரோ பொருளோ உருமாறாமல் சிரஞ்சீவியாக இருக்க முடியாது. இறவா வரம் பெற்ற நீ இறவாவிட்டாலும் உருமாறும் காலம் வரத்தான் போகிறது. நீ இன்னும் நீடூழிகாலம் வாழவேண்டும் என்பது தான் உன் தாய் மாமனாகிய எனது ஆசை. நீ இராமனோடு மோத நினைத்தால் நீ என்ன ஆவாயோ யானறியேன். உன்னைப் போல் அரக்கனாகவே இருந்து அடாவடித்தனங்களை உன்னைவிட பல்லாயிரம் மடங்கு செய்து முடித்தவன் யான். அந்த இராமனுடைய கையால் எய்யப்பட்ட பாணம் பட்டமையினால் இன்று என் அரக்க குணமெல்லாம் மாறி ஆரண்யத்தை நாடி அருந்தவமியற்றுகிறேன். இன்று முன்பிருந்ததைவிட அளப்பரிய சக்தியும் ஆற்றலும் பெற்றவனாக இருக்கிறேன். நான் உனக்குக் கூறக்கூடிய ஒரே அறிவுரை ஒன்றே ஒன்றுதான். அந்த இராமனை வம்புக்கிழுக்காதே! அதனால் உன் வம்சமே வீழ்ச்சி கண்டு விடும்.

உன்னுடைய மேன்மையை விரும்பாத எவரோதான் உன்னை வேரோடு ஒழித்துக் கட்ட வீண் வழி காட்டியுள்ளனர்.

இராவணா! உன்னுடைய அந்தப்புரத்தில் இல்லாத அழகி வேறு எந்தப் புரத்தில் இருப்பாள்? அம்மங்கையரோடு சுகத்திரு. உன் குடிமக்களின் நலனைக் காக்க உன் நகர் திரும்பி ஆவன செய்திரு. அமைதி உண்டாகட்டும்.".

இவ்வாறு மாரீசன் கூறிய வார்த்தைகள் இலங்கேஸ்வரனின் இதயத்தில் பெரும் மாறுதலை ஏற்படுத்தின. சிந்தனைவயப்பட்டவனான இராவணன் சற்று நேரம் கண்களை மூடி சினத்தை அடக்கினான். தனது மாமன் கூறிய அறிவுரைகளில் பொதிந்து கிடந்த உண்மைகள் அவன் உள்ளத்தைக் குடைந்தன. விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விமானம் ஏறினான்.

இராவணன் ஓர் அவசர புத்திக்காரன்.

## இராஜகுமாரன்

இலங்கேஸ்வரனைப் பார்த்து, "இராவணா! இராமனை சாதாரணமான ஒரு மாநிடனாகக் கருதிவிடாதே! அவனுடைய வீரத்தை சாதாரணமாகக் கணக்கிட்டு விடாதே! தெய்வாம்சம் பொருந்திய அவனை போரில் வெல்ல எவராலும் முடியாது!"

இந்த வார்த்தைகளைக் கேட்டதும், இராவணன் கொதிப்படைந்தான். "மாமா! என்னுடைய வீர தீரபராக்கிரமங்களை நன்கு தெரிந்திருந்த தாங்களே என் முன்னிலையிலேயே மற்றுமொருவனை- அதுவும் அற்ப மாநிடனைப் பற்றிப் புகழ்ந்து பேசலாமா? பல்லாண்டு காலம் கடும் தவமியற்றி அழியா வரம் பெற்ற இந்த அரக்கர் கோமானுக்கு ஈடு இணையாக இந்த ஈரேழு பதினான்குலகிலும் எவருமுண்டா? மாமா....மாமா...! என் தாய் மாமன் என்பதனால் இத்தனை

திடீர் திடீரென்று தனது செயல்களையும் திட்டங்களையும் மாற்றி விடுவான் என்பதை முன்னமே உணர்ந்தோம். மாரீசனிடம் வரும் போது இருந்த இராவணன் வேறு; இலங்காபுரி திரும்பும் இராவணன் வேறு. விமானத்திலேறியதும் அவன் மனம் முழு அமைதியடைந்தது.

இத்தனைக்கும், தனது தங்கை சூர்ப்பணகைக்கு நடந்த மானபங்கத்தைப் பற்றிய தகவல் இராவணனுக்கு எட்டவில்லை. இராவணன் வான் மார்க்கமாக இலங்காபுரி வந்தடைந்த அதே வேளை, வெட்டுண்ட தனது மூக்கு, காது மற்றும் மார்புகளால் குருதிக் கடல்பெருக்கெடுத்தோட, அவலக் குரல் எழுப்பிய வண்ணம் இலங்காபுரியின் வடவாயிலூடாக சூர்ப்பணகை புகுந்தாள்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 32

சரியானவிடை:- அகம்பன்.

1. ஏ.ஜே.எம் றவ்பர். 287, பிரதான வீதி, மாத்தளை.
2. சீ. கோணேஸ்வரி. இல.29,40வது ஒழுங்கை, வெள்ளவத்தை.
3. எஸ். ஷாமிளா சிவமலர். அக்கரைப்பத்தனை த.ம.வி-அக்கரைப்பத்தனை.
4. எஸ். சுப்பரமணியம். பிளாண்ட் பத்தலொஜி டிவிசன், தலவாக்கலை.
5. எம்.ஆர்.எம். சலிம். 210/114, பேஸ்லைன் வீதி, தெமட்டகொட, கொழும்பு-09.

**போட்டி இல. 34** கேள்வி:- இராவணன் தனக்கு ஏற்படும் சிக்கல்களை மிட்டு அறிவுரை கேட்க நாடுவது யாரை?

ஜூன் 15 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.34, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# இப்படியும் நடந்திருக்கும்

காதிலை பூ கந்தசாமி

பாரதிய ஜனதா கட்சி இந்தியாவில் பதவிக்கு வந்து குறுகிய நாட்களில் தன் ஆயுளை முடித்துக் கொண்டது. பாரதிய ஜனதா கட்சி பெரும்பான்மை பலத்தோடு ஆட்சிக்கு வந்திருந்தால் தமிழக அரசியல் தலைவர்கள் எப்படி பேசியிருப்பார்கள். காதிலை பூ கந்தசாமி கற்பனை செய்கிறார்.

## "வருக! வகையான ஆட்சி தருக!"

மத்தியிலே நல்லாட்சி. மாநிலத்திலே சுயாட்சி. அதுதான் நமது கொள்கை.

பாரதிய ஜனதா கட்சி தீண்டப்படாத கட்சியுமல்ல. திராவிட முன்னேற்றக் கழகம் அதனை தீண்ட விரும்பாத கட்சியுமல்ல.

பிரதமர் வாஜ்பேயி நல்லவர். என் நண்பர். கிட்டத்தட்ட முப்பதுவருடகால நண்பர். வல்லவர்! நரசிம்மராவ்போல பொல்லாட்சி நடத்தாமல், நாட்டு மக்கள் நலிவு தீர நல் லாட்சி தருவார் என்ற நம்பிக்கை நமக்கிருக்கிறது.

மதவாதக் கட்சியை பகுத்தறிவுவாதிகள் ஆதரிக்கலாமா என்று கேட்கிறார்கள்.

மதவெறிதான் கூடாதே தவிர மதம் உள்ள வரை மதம் சார்ந்த வாதமும் இருக்கும். அந்த மதவாதம் கொடியதாக இருக்கக் கூடாதே தவிர, கூடாதது அல்ல என்று நம் அண்ணா தெளிவாக சொல்லியிருக்கிறார்.

அவர் சொன்னதை மறக்காமல் இருக்கிற காரணத்தால்தான், தமிழக மக்களின் நலம் காக்க மத்தியில் நிலையான ஆட்சிக்கு நெஞ்சமார ஆதரவளிக்கிறோம்.



'வாஜ்பேயியே வருக. வகையான ஆட்சி தருக' என்று அழைக்கிறேன். ஆரத்தழுவி மகிழ்கிறேன்.

இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

## "படிக்கும் போதே பரிச்சயம்"

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கை வருமாறு.

"பாரதிய ஜனதா கட்சியோடு பாடசாலையில் படிக்கும் காலத்திலிருந்தே பரிச்சயமானவள் நான்.

பாரதிய ஜனதாவை நான் ஆட்சியில் இருந்தபோது அலட்சியம் செய்யவில்லை. உடன்பிறவா கட்சியாக நினைத்து அழைத்துப் பேசினேன். அதனைக் கேலி செய்து பேசியவர் கருணாநிதி.



இப்போது பாரதிய ஜனதாவுக்கும் அ.தி.மு.க.வுக்கும் இடையில் பிரச்சனையை ஏற்படுத்த பெரிய சதி நடப்பதாக அறிகிறேன். டில்லியிலே உள்ள பெரும் தலையொன்று சதி வேலைகளில் ஈடுபடுகிறது. அதன் பெயரைச் சொல்ல நான் விரும்பவில்லை.

ஆனாலும் இப்போது ஒரு உண்மையைச் சொல்லப்போகிறேன். அந்தப் பெரும் தலைக்கு என்மீது ஏன் ஆத்திரம் தெரியுமா? என்னை ஒரு தடவை சந்தித்து, "உங்கள் செயலாளராக இருக்க விரும்புகிறேன். உங்களை அமெரிக்க ஜனாதிபதி லெவலுக்கு உயர்த்திக்காட்டுகிறேன்" என்று சொன்னது. நான் விழுந்து, விழுந்து சிரித்தேன். அதனால்தான் அந்தப் பெரும் தலைக்கு என் மீது கோபம்.

பெண்களின் எதிரி கருணாநிதியுடன் பாரதிய ஜனதாக் கட்சி சேரக்கூடாது என்று சொல்லும் உரிமை எனக்குண்டு." என்றார் ஜெயலலிதா.

## ["தன்மானத்தோடு ஆதரிப்போம்"]

"நரசிம்மராவ்தான் எங்கள் எதிரியே தவிர வாஜ்பேயி அல்ல. தமிழக மாநில காங்கிரசின் தன்மானத்தை பாதுகாத்துக் கொண்டு, சொந்தக்காலில் நின்றபடி வாஜ்பேயிக்கு தோள்கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்." இவ்வாறு தமிழக மாநில காங்கிரஸ் தலைவர் கருப்பையா மூப்பனார் நேற்றுத் தெரிவித்தார்.

நரசிம்மராவ் காங்கிரசின் மானத்தை காற்றில் பறக்கவிட்டார். அதனால்தான் சுயமரியாதையுடன் தனித்துவந்து போட்டியிட்டோம். பாரதிய ஜனதாக் கட்சி நமது எதிரிக் கட்சியல்ல. அதனால் ஆதரவு கொடுக்க முடிவு செய்தது தவறு அல்ல. என்றும் தெரிவித்தார் மூப்பனார்.

பாரதிய ஜனதா தவறு செய்தால் தட்டிக் கேட்போம் என்றும் அவர் கூறினார்.



**மீண்டும் நரசிம்மராவுக்கு பிரதமராகும் சந்தர்ப்பம் கிடைப்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது அதே தலைவர்கள் எப்படிப் பேசுவார்கள்?**

## "உத்தரவல்ல, உரிமை"

பிரதமர் நரசிம்மராவ் எனது நாற்பதாண்டு கால நண்பர். இந்திரா அம்மையார் காலத்திலேயே தி.மு.க.வுக்கும் காங்கிரசுக் கும் இலட்சிய உறவு இருந்தது. "நேருவின் மகளே வருக. நிலையான ஆட்சி தருக" என்று அழைத்தவன் நான்.

பாரதிய ஜனதாவை நாம் ஆதரித்தோமே தவிர ஆராதனை செய்யவில்லை. ஆரத்தி எடுத்து வாழ்த்தவில்லை.

'வாஜ்பேயியே வருக. வகையான ஆட்சி தருக' என்று நான் சொன்னதின் அர்த்தம், வேண்டுகோள் அல்ல, கட்டளை!

கட்டளையை மீறியதால் ஆட்சி கவிழ்ந்தது. நரசிம்மராவ் நல்ல நிர்வாகி. நேர்மையின் இருப்பிடம். வாஜ்பேயி போல மதவாதத்தால் ஆட்டுவிக்கப்படக்கூடியவர் அல்ல. வாஜ்பேயி ஆட்டுவிக்கப்படுபவர். நரசிம்மராவ் ஆட்டுவிப்பவர்.

ஜெயலலிதாவோடு அவர் கூட்டுச் சேர்ந்த காரணத்தால் தேர்தலில் நாம் இணைந்து போட்டியிட முடியவில்லை. ஜெயலலிதாவோடு கூட்டுச் சேராவிட்டால் நாம் அன்றே கூட்டுச் சேர்ந்திருக்கலாம். நம் மோடு காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்திருந்தால் ஜெயலலிதாவோடு கூட்டு



ஏற்பட்டிருக்காது. இந்த உண்மையை நாடறியும், நாமறிவோம்.

'நரசிம்மராவ் வருக. நல்லாட்சி தருக' என்று உத்தரவாக அல்லாமல், உரிமையோடு அழைக்கிறேன். இவ்வாறு கலைஞர் கருணாநிதி நேற்று நடைபெற்ற சென்னைக் கூட்டத்தில் உரையாற்றினார்.

## வந்தார்–தோற்றுப் போனோம்

சென்ற தேர்தலில் அ.தி.மு.க.வுடன் உறவு இல்லையென்றால் ஆந்திராவில் கூட நரசிம்மராவால் வெற்றி பெற்றிருக்க முடியாது.

நம்மோடு வலிய வந்து உறவு நாடினார் நரசிம்மராவ். நான் ஒரு பெண். அதனால் இரக்கப்பட்டு அவரை ஆதரித்தேன். அதனால்தான் கடந்த தேர்தலில் அ.தி.க.மு.க வுக்கு தோல்வி ஏற்பட்டது.

நான் இதுவரை சொல்லாத ஒரு உண்மையைச் சொல்லப்போகிறேன். தமிழ் நாட்டிற்கு பிரசாரம் செய்ய நரசிம்மராவ் வந்ததால்தான் நமக்கு தோல்வி ஏற்பட்டது.

தான் ஒரு வேளை தோல்வி கண்டால் என்னைப் பிரதமராக்குவேன் என்று நரசிம்ம ராவ் சொன்னார். நான் விழுந்து விழுந்து சிரித்தேன். அது அவருக்கு பிடிக்கவில்லை. அதனால்தான் இப்போது கருணாநிதியோடு கைகோர்த்திருக்கிறார். இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிக்கை விட்டுள்ளார்.



படிப்பகம்

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ் இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331




அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11
332033

நெதர்லாந்து நாட்டின் ஒட்டோர்ப் துறைமுகத்தில் நீரின் மேல் ஒரு சாதனை.

சித்திரம் போல கடலில் தெரிவது என்ன தெரியுமா? பலூன்களால் உருவாக்கப்பட்ட சித்திரம்தான் அது.

இதில் என்ன சாதனை தெரியுமா? பயன்படுத்தப்பட்ட பலூன்களின் எண்ணிக்கைதான் சாதனை. 25 ஆயிரத்தி 344 பலூன்களைபயன்படுத்தி சிற்பத்தை உருவாக்கினார்கள். 1992 ஜூன் 28 இல் இந்த உலக சாதனை செய்யப்பட்டது. ஹர்லெம் பாடசாலை மாணவர்கள்தான் இந்த வித்தியாச முயற்சியை செய்து காட்டினார்கள்.

## முத்துக்கள் மூன்று

மூவரும் வெவ்வேறு அணிகளைக் சேர்ந்தவர்கள்தான். போட்டி என்று வந்துவிட்டால் தந்தமது அணிக்காக வெறியோடு களம் புகுந்து வித்தை காட்டுவார்கள். ஆனால் தனிப்பட்ட ரீதியில் மூவரும் நண்பர்கள். மூவருமே சுழற்பந்து வீசி விக்கெட்டுக்களை சாய்ப்பதில் சூரர்கள். இன்று கிரிக்கெட் உலகில் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்கள் இவர்கள் மூவரும்தான்.

1) அனில் கும்ளே, 2) ஷேன் வோன், 3) முஸ்தாக் அஹமட்.

உலகக் கோப்பை போட்டியின் போது மூவரும் சேர்ந்து ஜாலியாக சுற்றினார்கள். அப்போது 'கிளிக்' செய்யப்பட்ட படம்தான் இது. போட்டி உண்டு. பொறாமை துளியும் கிடையாது.



## தங்க மீன்

1992 இல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் அனைவரையும் வியக்கவைத்த வீராங்கனைகளில் ஒருவர் கோயோகோ இவாசாக்கி. ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்.

இவர் நீச்சலில் மீன். இந்த மீன் அனைவரையும் வியக்கவைத்ததுக்கு காரணம் வயது. 1992 ஒலிம்பிக் போட்டியில் நீரைக் கிழித்து முன்னேறி, 200 மீட்டர் தூரத்தை 2 நிமிடம், 26.65 செக்கனில் சென்றடைந்தார். தங்கப் பதக்கம் மார்பில் ஏறியது. அப்போது வயது 14. அத்தனை இளம்வயதில் ஒலிம்பிக்கில் சாதனை படைத்த முதலாவது வீராங்கனை இவர்தான். அதனால் கின்னஸ் புத்தகத்திலும் இடம்பிடித்துவிட்டார் கோயோகோ இவாசாக்கி. சாதனைக்கு வயது தடையில்லை. இந்த தங்க மீன் அதற்கு சாட்சி.



## மறுபடியும் ஆசை

மேற்கிந்திய அணியின் முன்னாள் கப்டன் ரிச்சி ரிச்சாட்சன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஒதுங்குவதாக அறிவித்திருந்தார்.

ஆடிய காலும், பாடிய வாயும் சும்மாயிருக்குமா என்பதுபோல, ரிச்சி ரிச்சாட்சனுக்கும் ஓய்வாக இருக்கப் பிடிக்கவில்லை.

"மீண்டும் கிரிக்கெட் அணியில் சேர்ந்து விளையாட தயாராக இருக்கிறேன். ஹொட்னி வோல்ஸ் தலைமையில் விளையாடுவதில் எனக்கு ஒரு கௌரவப் பிரச்சனையுமில்லை" என்று அறிவித்திருக்கிறார் ரிச்சி ரிச்சாட்சன்.

அவரது விருப்பத்தை மேற்கிந்திய கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது. வாய்ப்புக் கொடுக்கப்பட்டால் மறுபடி அவரது ஆட்டத்தை ரசிக்க நமக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.



## சறுக்கல்

ஸ்டெபி கிராப்- டென்னிஸ் உலகின் சூப்பர் ஸ்டாரினி. உலகெங்கும் இவர்மீது பைத்தியமான ரசிகர் பட்டாளம் இருக்கிறது. இவரிடம் கோடி கோடியாக பணம் கொட்டிக்கிடக்கிறது.

ஆறுமுறை விம்பிள்டன் ஒற்றையர் பட்டத்தை வென்ற முடிசூடா ராணி.

சம்பத்தில் மற்றொரு சாதனையை ஓசைப்படாமல் நிறைவேற்றி இருக்கிறார். தொடர்ந்து 332 வாரங்களாக டென்னிஸ் வீராங்கனைகள் பட்டியலில் தனது முதலிடத்தை தக்க வைத்துள்ளார் ஸ்டெபி கிராப்.

இவருக்கு முன்னர் மார்டினா நவரத்திலோவா 331 வாரங்களாக முதலிடத்தை தக்க வைத்து சாதனை படைத்தார். அதனை முறியடித்துவிட்டார் ஸ்டெபி.

யானைக்கும் அடி சறுக்கும் என்பதுபோல, ரோம் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் 15 வயது வீராங்கனையான மார்டினா ஹிஞ்சிஸ் என்பவரிடம் கடந்த மாதம் தோற்றுப்போனார் ஸ்டெபி கிராப். அதுதான் கவலை.

டென்னிஸ் உலகில் ஆண்களைக் கவரும் கவர்சிகரமான வீராங்கனையும் ஸ்டெபிதான் என்று கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.



## பிறந்த நாள் வாழ்த்து



### முஹம்மது இஹ்திஸாம்

தன் முதலாம் பிறந்த நாளை கொண்டாடினார்.
(02/06/1996 ஞாயிறு) அவரை எங்களுடன் உம்மம்மா, அப்பா, வாப்பம்மா, ரிஸ்வான் சாச்சா, ரவூப் மாமா ரிஸ்னியா மாமி, ஜப்பானிலிருந்து ஜஹ்பர் சாச்சா ஹ்ம்ஸ் மாமா ரம்ஸ் மாமா, கட்டுகஸ்தொட்ட பஸ்மிலா மாமி, மாத்தளை வறீனா சாச்சி, தித்தவெல்கால ஹுமைரா மாமி, அஸ்வதும்மா ஹலீமா, ஹமீமா சாச்சிகள், ஸபான்மாமா, கல்எலிய ஷாமிளா தாத்தா குடும்பத்தினர்.
செல்வன் இஹ்திசாம்
இறைமறை பேணி, இறுதி நபிவழி நடந்து
இன்னலற்று இனிதே வாழ இருகரம் ஏந்தி
இறையோனை இறைஞ்சிடுகிறார்கள்.
நீங்களும் வாழ்த்துங்களேன் !

02-06-96

இவண்
"இப்ராஹீம் - நபீலா"

Jewel Emporium



படிப்பகம்